ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30

ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 03 | 05-18 செப்டெம்பர் 2017 | முழக்கம் 055

பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே
உங்கள் வர்த்தக விளம்பரங்களை எமது தளத்தில் விளம்பரம் செய்து அதிக பயன் பெறுங்கள்
பரிஸ்தமிழ்.கொம்
www.ParisTamil.Com
பரிஸ்தமிழ்.கொம்மில் விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com



## இனப்படுகொலையாளியின் மீது பிரேசிலில் போர்க் குற்ற வழக்கு

### தமிழரின் நீதிக்கான பயணத்தில் முதல் வெற்றி

தப்பிவந்த ஜகத் ஜயசூர்யாவைக் காப்பாற்ற சிறீலங்கா உறுதி

## தகர்க்கப்பட்ட நினைவுத்தூபிகளும் மெருகூட்டப்பட்ட கல்லறைகளும்

தமிழினத்திற்குச் சொல்லும் செய்தி என்ன..?

## காகிதப் புலிகளும் தமிழீழ தேசிய விடுதலைச் சித்தாந்தமும்

## தமிழ் இனப்படுகொலையைத் தடுக்காத உலகம் ரோஹிங்கிய இனப்படுகொலையையாவுதல் தடுக்குமா?

## போலி சாமியார்களின் கிழியும் முகமூடிகள்

## எங்கும் திருட்டு எதிலும் திருட்டு!

## புலிகளால் தகர்த்தெறியப்பட்ட சாதியம் மீண்டும் வளர்த்தெடுக்கப்படும் அவலம்

## போர் ஓய்ந்தும் கண்ணீர் ஓயவில்லை

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Boulangerie - Pâtisserie
208 Rue du Faubourg Saint Denis - 75010 Paris
Tél: 01 42 05 00 00 / e-mail : hotbreads@hotmail.fr
Hot Breads
திருமணம், பிறந்தநாள் மற்றும் அனைத்து சுபகாரியங்களுக்கும் தேவையான கேக்குகள், சிற்றுண்டி வகைகள், பாண், பிஸ்கட்டுகள் சிறந்த முறையில் செய்து தரப்படும்
Eggless கேக்குகள் எமது சிறப்புத் தயாரிப்புக்கள்

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

Express station service
எரிபொருள் நிரப்பு நிலையம்
பணம் அனுப்பும் சேவை
புத்தம் புதிய கைத்தொலைபேசிகள்
தொலைபேசி உதிரிப்பாகங்கள்
நம்பிக்கை,
நாணயம்,
உத்தரவாதம்...
MoneyGram. Ria Money Transfer WU Western Union Sigue Money Transfer
25 boulevard de la Chapelle 75010 Paris M°: La chapelle
Tél.: 01 40 18 07 44
E-mail: express-station@hotmail.com

AACHI BOUCHERIE
பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை - உங்களிற்காக மிகவும் மலிவு விலையில் தரமான இறைச்சி வகைகள்
ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, உயிர்க்கோழி, கோழிக்கால், பங்கிறைச்சிகள்
120 Rue Roger Salengro 93140 Bondy Tél : 07 51 08 14 83 / 07 51 27 72 38

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES

26 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் **www.asces.fr** **Tél : 07 82 88 59 16** E-mail : asces@free.fr

சிறந்த முறையில் பெண்களுக்கான சிகை, ஆடை- புடவை, முக அலங்கார மற்றும் கேக் அலங்கார வகுப்பு ஆரம்பம். வகுப்பு முடிவில் வேலை உடனே!

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

05-09--2017 செவ்வாய் வியாழன் மாலை 5 மணி
09-09-2017 சனி ஞாயிறு மாலை 4 மணி
10-09-2017 ஞாயிறு காலை 11 மணி ( நாள்வகுப்பு)
04-09-2017 திங்கள் செவ்வாய் காலை 9 மணி
10-09-2017 ஞாயிறு காலை 10 மணி (Nationality வகுப்பு)

**LA COURNEUVE** இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

**BOBIGNY**
38, rue Gaston Crépin 93000 Bobigny

**PARIS**
3, place de Joinville 75019 Paris M° Crimée

**Epinay sur seine** 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
**BAC , BREVET** பரீட்சைகளில் 100வீத சித்தி
**Cambridge University** ஆல் நடாத்தப்படும்
**Starters, Movers, Flyers, Ket, Pet** பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

**Bridal makeup & cake icing**
மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்



உங்கள் உணவகங்கள் சமையல் அறைகளிற்குத் தேவையான
றைஸ் குக்கர் முதல் அனைத்து விதமான பைகள் வரை லாச்சப்பல் அருகில் ஒரே இடத்தில்

# EURO RESTO SERVICE

உணவு விடுதிகளிற்கான உபகரணங்கள் மற்றும் உடைகள்

பாதுகாப்பான எலி மற்றும் பூச்சி கொல்லி மருந்துகள்







இல்ல வைபவங்களிற்கான பொருட்கள்

அங்கீகரிக்கப்பட்ட சொப்பிங் பாக்குகள்

மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**48, RUE DU CHÂTEAU LANDON - 75010 PARIS**

**TÉL.: 01 40 36 00 09 / 06 68 67 15 55** M°: STALINGRAD / LA CHAPELLE

ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 03 05 - 18 செப்டெம்பர் 2017 முழக்கம் 055

"தென்னிலங்கைச் சமூகக் கட்டமைப்பின் சகல மட்டங்களிலும் பூதாகரமாக வளர்ந்துவரும் சிங்கள பௌத்த பேரினவாதம், தமிழ் மக்களை காருணியத்துடன் அரவணைத்துக் கொள்ளும் என நான் நம்பவில்லை."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# இனப்படுகொலையாளியின் மீது பிரேசிலில் போர்க் குற்ற வழக்கு

## தமிழரின் நீதிக்கான பயணத்தில் முதல் வெற்றி

## தப்பிவந்த ஜகத் ஜயசூர்யாவை காப்பாற்ற சிறீலங்கா உறுதி

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையில் முன்னின்று செயற்பட்ட சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் முக்கிய தளபதி ஒருவர் மீது தென் அமெரிக்க நாடான பிரேசிலில் போர்க்குற்ற வழக்குத் தொடரப்பட்டுள்ள நிலையில் அவர் அங்கிருந்து தப்பித்து வெளியேறியுள்ளார்.

தென் அமெரிக்காவின் இலத்தீன் அமெரிக்க நாடுகளான பிரேசில், கொலம்பியா, பெரு, சிலி மற்றும் சுரிநாம் ஆகிய நாடுகளுக்கான சிறீலங்காவின் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கும் சிறீலங்காவின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூர்ய-விற்கு எதிராக பிரேசில் மற்றும் கொலம்பியா நீதிமன்றங்களில் போர்க்குற்ற வழக்கு கடந்த 28ம் திகதி திங்கட்கிழமை தொடரப்பட்ட நிலையில் அவர் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இறுதிக்கட்ட இனஅழிப்புப் போரில் முன்னின்று செயற்பட்டு, சிறீலங்கா இராணுவத்தின் தளபதியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற ஜெகத் ஜெயசூர்யவிற்கு 2015ம் ஆண்டு இலத்தீன் அமெரிக்காவிலுள்ள 5 நாடுகளுக்கான தூதர் பதவியை வழங்கி தற்போதைய சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன கௌரவித்திருந்தார். இந்நிலையில் ஜகத் ஜயசூர்ய மீது சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட (International Truth and Justice Project - ITJP) என்ற அமைப்பு, தென் ஆபிரிக்காவைத் தளமாகக்கொண்ட மனித உரிமை அமைப்பு (Foundation for Human Rights based in South Africa) ஊடாக பிரேசில் நாட்டில் இந்த வழக்கை தாக்கல் செய்தது. சுரிநாம் இப்போர்க் குற்ற வழக்கை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளது. எனினும், இந்த வழக்குகள் ஆர்ஜென்ரீனா, பெரு, சிலி ஆகிய நாடுகளிலும் தொடரப்படவுள்ளதாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

2009ம் ஆண்டு சிறீலங்காவின் இராணுவ தளபதியாக இருந்தவர் ஜகத் ஜயசூர்யா. அப்போது நடந்த இந்த யுத்தத்தின் போது ஜயசூரியவின் கட்டளையின் கீழ் சிறீலங்கா இராணுவத்தினர் தயவு தாட்சண்ணியமின்றி பொதுமக்களை இலக்கு வைத்து எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் சரணடைந்தவர்களை சித்திரவதைக்கு உள்ளாக்கியதாகவும், பலவந்தமான காணாமற்போதல் மற்றும் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் மனித உரிமைகள் அமைப்புக்களால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்நிலையில், ஜகத் ஜயசூரியவின் மேற்பார்வையில் இருந்த இராணுவப் பிரிவுகளால், மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாகவும், காணாமல் ஆக்கப்பட்டதாகவும், சித்திரவதை செய்யப்பட்டதாகவும் இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

14 சாட்சிகளின் வாக்குமூலங்கள் அடிப்படையில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவரும் சர்வதேச சட்ட வல்லுநருமான கார்லோஸ் காஸ்ரேசனா பெர்னாண்டே (Carlos Castresana Fernandez) இந்தப் போர்க் குற்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். சிலி முன்னாள் சர்வாதிகாரி பினோசெட், அர்ஜென்டினா இராணுவ தளபதி ஜோர்ஜ் ரபேல் விடெலா ஆகியோருக்கு எதிராக போர்க் குற்ற வழக்குகளை தொடர்ந்தவர் கார்லோஸ் காஸ்ரேசனா என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து சட்டத்தரணி காஸ்ரேசனா பெர்னாண்டே கருத்து தெரிவிக்கையில், 'இது மறக்கப்பட்டுவிட்ட ஓர் இனப்படுகொலை. இந்த வழக்கு ஒரு ஆரம்பம் மட்டுமே. ஆனால், இந்த முயற்சி ஜனநாயக நாடுகளை ஏதோ ஒன்றைச் செய்ய கட்டாயப்படுத்தும். இது போரின் ஆரம்பம் தான் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி 04ம் பக்கம்

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை அழித்து தரைமட்டமாக்கியபின் அந்த இடத்தில் 51வது படைப்பிரிவின் இராணுவ தலைமையகத்தை அமைத்து திறந்துவைக்கும் சிறீலங்கா இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய. இதுவும் போர்க் குற்றங்களில் ஒன்றாகவே கருதப்படுகின்றது.



கமிலஸ் மொழிபெயர்ப்பு
உங்கள் வேலையிடத்தில் பிரச்சனையா?
உங்களுக்கு அலுவலகப் பிரச்சனையா?
வர்த்தகர்களுக்கான ஆலோசனைகள் (conseil en entreprise)
வருமான வரி தொடர்பான ஆலோசனைகள் ( conseil impots)
ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டிருக்கும்
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 10:30 முதல் 13:00 வரை
பிற்பகல் 14:00 முதல் 18:00
சனிக்கிழமை பிற்பகல் 13:00 முதல் 18:00 வரை
இடம் பெயர்ந்த சட்டரீதியான மொழிபெயர்ப்பும் சேவைகளும் உண்டு
260 rue Faubourg St Martin - 75010 Paris
Metro: Stalingrad/Louis Blanc தொடர்புகளிற்கு : 06 51 91 08 85



செல்லில் - உங்கள் அபிமான பேபியின்
புதிய உதயம்
அபி சலூன்
தொடரூந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்
11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com



மக்கள் கடை
NEW CASTEL
உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு
"உண்மையின் முன்னால்
நடுநிலைமை என்பது இல்லை"
"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel Gratuit
MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116
இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com
Le Président: S.Pulenthiran
தலைவர்: க.புலேந்திரன்
Redacteur: K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்
ஆசிரியர் பீடம்
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)
விளம்பரம் / விநியோகம்
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)
Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard
பிரித்தானியா
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com
சந்தா விபரம்
வருட சந்தா
பிரான்ஸ் 75
ஐரோப்பா 85
ஏனைய நாடுகள் 99
குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

லாச்சப்பலில்
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
பாலன்:
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

## இனப்படுகொலையாளியின்...

இந்த முயற்சியில் பெரும் பங்கை ஐ.நா. முன்னாள் நிபுணர் ஜஸ்மின் சூக்கா மற்றும் ஊடகவியலாளரான பிரான்சிஸ் கரிசன் ஆகியோர் வகித்துள்ளனர். அத்துடன் இந்த வழக்கு முயற்சிகளை மனித உரிமை சட்டத்தரணியாகிய கீத் குலசேகரம் ஒருக்கிணைத்து வருகின்றார்.

ஐ.நா முன்னாள் நிபுணரும், Human Rights Foundation - South Africa வின் இயக்குநருமான ஜஸ்மின் சூகா இது குறித்துக் கருத்து தெரிவிக்கையில், இது சிறீலங்கா அரசுக்கு எதிரான சட்ட நடவடிக்கையில் ஒரு மிக முக்கியமானபடி. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இவ்வழக்கு நம்பிக்கை வழங்கும். ஜகத் ஜயசூரிய குற்றவாளி இல்லையெனில் துணிந்து நின்று வழக்கை எதிர்கொண்டிருப்பார். தலைமறைவாகியதன் மூலம் தான் ஒரு குற்றவாளி என்பதை மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளார். 2009ம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்ட இறுதிக் கட்ட யுத்தத்தின் போதும் அதற்கு பின்னரும் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை சட்டங்களை அப்பட்டமாக மீறிய சம்பவங்களுடன் தொடர்புடைய படைத்தளபதிகள் மற்றும் அரசியல் தலைமைத்துவங்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜஸ்மின் சூக்கா சூளுரைத்துள்ளார்.

இந்த வழக்கை அடுத்தகட்ட நடவடிக்கைக்கு முன்னெடுத்து செல்லவுள்ளதாக தெரிவிதுள்ள மனித உரிமை சட்டத்தரணியாகிய கீத் குலசேகரம், இதுபோல நாம் முன்னர் இராணுவத் தளபதி சுசன மென்டிஸ் சுவிஸ் வந்தபோது எடுத்த முயற்சியை பிரித்தானிய தமிழர் பேரவை (BTF) தலையிட்டு முறியடித்திருந்தது. இதனால் இம்முறை நாம் மிகவும் இரகசியமாகவே செயற்பட வேண்டி ஏற்பட்டது. எனினும் எப்படியோ தகவல் அறிந்த அவர் தப்பித்து விட்டார். ஆனாலும் இந்த வழக்கு தொடரப்பட்டு அவர் மீது பிடியாணை பிறப்பிப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வோம் என மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தப்பிச் சென்ற ஜகத் ஜயசூரியவுக்கு எதிரான வழக்கை, ஹேக்கில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என்று பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரான, போல் ஸ்கலி தெரிவித்துள்ளார். இராஜதந்திர விலக்குரிமைக்குப் பின்னால் மறைந்திருப்பதோ, சட்ட சவாலை எதிர்கொள்வதற்கு முன்னர் தப்பியோடுவதோ, போதுமானதல்ல. ஜெனரல் ஜயசூரியவைக் கைது செய்வதற்கான அனைத்துலக காவல்துறையின் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட மறுநாள் (கடந்த 29ம் திகதி) ஜெகத் ஜெயசூர்யா தப்பி ஓடி சிறீலங்காவிற்குள் நுழைந்துள்ளார். தனது பதிவிக் காலம் முடிவடைந்தே அவர் நாடு திரும்பியுள்ளதாக சிறீலங்கா தெரிவித்துள்ளபோதும், இவரைக் காப்பாற்குவதற்கு தமது நாடு அனைத்து முயற்சிகளையும் முன்னெடுக்கும் என சிறீலங்கா அரசு அறிவித்துள்ளமையானது அவரை அங்கிருந்து காப்பாற்றிக்கொண்டுவந்துள்ளமையை வெளிச்சாமாக்கியுள்ளது.

சிறீலங்கா அனைத்துலக குற்றவியல் நீதிமன்றின் உறுப்பு நாடல்ல. தற்காலிக அனைத்துலக விசாரணையை உருவாக்கக் கூடிய நாடாகவும் சிறீலங்கா காணப்படவில்லை. ஆகவே ஜயசூரிய தூதுவராகப் பணியாற்றிய பிரேசில் போன்ற நாடுகள் இவருக்கு எதிராக குற்றவியல் வழக்கை முன்னெடுக்க முடியும்.

தொடர்ச்சி 09ம் பக்கம்




# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

## தமிழர் தாயகத்தில் கடுமையாக அதிகரிப்பு

தமிழர் தாயகத்தில் அண்மைக் காலமாக அவலச்சாவுகளும், அகால மரணங்களும் கடுமையாக அதிகரித்துச் செல்வதைக் காணமுடிகின்றது. விபத்துக்கள், இயற்கைப் பாதிப்புகளால் மரணங்கள், கொலைகள், தற்கொலைகள் என இந்த மரணங்கள் பல்வேறு வகையில் அரங்கேறுகின்றன. வாரத்திற்கு குறைந்தது 15 முதல் 20 மரணங்கள் இவ்வாறு நிகழ்கின்றன. தமிழ் மக்களின் மக்கள் தொகைக்கு இந்த மரணங்கள் அதிக விகிதாசாரமாகவே அமைந்திருக்கின்றன.

கடந்த இருவாரங்கள் நிகழ்ந்த பதிவுகள் இந்த இதழில் (பக்கம் 6 மற்றும் 8ல்) பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை விட மேலும் பல அகால மரணங்கள் கடந்த சில நாட்களில் நிகழ்ந்தேறியுள்ளன.

### நெடுங்கேணியில் இளைஞன் பலி

ஒட்டுசுட்டான் நெடுங்கேணி சாலையில் பாரவூர்தியும் முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 3 பேர் படுகாயமடைந்தனர். இந்தத் துயரச் சம்பவம் கடந்த 3ம் திகதி பிற்பகல் 2.30 இடம்பெற்றது. வசந்தபுரம் கற்சிலைமடுவைச் சேர்ந்த ஜெனந்தன் என்ற இளைஞரே உயிரிழந்தார். கூழாமுறிப்பைச் சேர்ந்த தர்சன் (வயது -23) மற்றும் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழில் சாலையடியைச் சேர்ந்த சகுந்தரராஜன் பரணிதரன் (வயது 19), செல்வக்குமார் விதுசன் (வயது 22) ஆகியோரே படுகாயமடைந்தனர். அவர்கள் ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இருவர் மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். பரணிதரன் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். விபத்தில் முச்சக்கரவண்டி மோசமாகச் சிதைந்தது. பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

### திருக்கோவில் ஒருவர் பலி

அம்பாறை திருக்கோவில் கள்ளியம்தீவு பகுதியில் முச்சக்கரவண்டி தடம்புரண்டு எதிரே வந்த பேருந்துடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். 39 வயதுடைய ஏ.யோகேஸ்வரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

### விளானில் இளைஞன் பலி

அதி வேகத்தில் உந்துருளியைச் செலுத்திச்சென்ற போது வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதியதில் உந்துருளியை செலுத்திச்சென்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் அவருடன் பயணித்த மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். காரைநகர் தோப்புக்காட்டை சேர்ந்த வேலுப்பிள்ளை சிவஞானவேல் (வயது 30) என்ற இளைஞனே பரிதாபமாக உயிரிழந்ததுடன் அதே இடத்தை சேர்ந்த சிவபாலசிங்கம் சிவராஜ் (வயது 29) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார். காரைநகரில் உள்ள முருகன் கோவில் திருவிழாவுக்காக அப்பகுதியில் குறித்த இளைஞர்கள் தண்ணீர் பந்தல் அமைத்திருந்தனர். இந்நிலையில் கடந்த 2ம் திகதி காலை தயிர் வாங்குவதற்காக இரு இளைஞர்களும் உந்துருளியில் மிக வேகமாக சென்றுள்ளனர். அப்போது விளான் பகுதியில் இவர்கள் சென்ற உந்துருளி வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே உள்ள மதகில் மோதுண்டதில் இந்த அவலம் ஏற்பட்டுள்ளது.

### கிளிநொச்சியில் மின்னல் தாக்கி மனைவி பலி, கணவன் காயம்

கிளிநொச்சியில் நீண்ட நாட்களுக்கு பின் பெய்த கன மழையின் போது ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் சிக்கிய தம்பதியரில் மனைவி பரிதாபகரமாக உயிரிழந்ததுடன் கணவன் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 2ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் கிளிநொச்சிலுள்ள பல பிரதேசங்களிலும் கன மழை பெய்துள்ளது. இதன்போது ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் பூநகரி இரணைமாதாநகர் கிராமத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயான ரூபன் லட்டிசியா பிரதீபா (வயது 40) என்ற பெண் பலியானதுடன், அவரின் கணவர் பீற்றர் ரூபன் (வயது 42) என்பவர் கடுமையான பாதிப்புக்குள்ளாகி முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார். மழை பெய்துகொண்டிருந்தபோது இருவரும் வீட்டின் அருகிலுள்ள கிணற்றில் நீர் எடுத்துக் கொண்டிருந்துள்ளனர். அப்போது திடீரென ஏற்பட்ட மின்னல் தாக்கத்திலேயே இச் சம்பவம் ஏற்பட்டுள்ளது. தமது பூர்வீக நிலமான இரணைத்தீவுக்கு செல்ல வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களில் மேற்படி இருவரும் உள்ளடங்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



### மாம்பழம் பறிக்க முயன்றவர் கீழே விழுந்ததில் உயிரிழப்பு!

மாம்பழம் பறிப்பதற்கு மரத்தில் ஏறி விழுந்து காயமடைந்த குடும்பத் தலைவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இமையான் மேற்கு உடுப்பிட்டியை சேர்ந்த இராசையா பத்மநாதன் (வயது 57) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார். 27ம் திகதி தனது வளவினுள் உள்ள மாமரத்தில் ஏறி மாம்பழம் பறிக்க அவர் முயற்சித்துள்ளார். மரக் கொப்பு முறிந்ததில் கீழே விழுந்த அவர் மயக்கமடைந்தார். தேடி வந்த அவரது மனைவி கணவன் கீழே வீழ்ந்து மயக்கமடைந்து கிடப்பதை கண்டு உடனடியாக மந்திகை வைத்தியசாலையில் சேர்ப்பித்தார். அன்றைய தினமே மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்கு மாற்றப்பட்டார். எனினும் இரண்டு நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

ஈழமுரசு

# போர் ஓய்ந்தும் கண்ணீர் ஓயவில்லை

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமான கடந்த 30ம் திகதி தமிழர் தாயகம் எங்கும் நடந்த போராட்டங்களில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மண்ணில் விழுந்து அழுதுபுரண்ட காட்சிகள் போர் ஓய்ந்தும் வலி சுமந்த தமிழர்களின் வாழ்விற்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திச் சென்றிருக்கின்றது.

நல்லிணக்க அரசு என்ற மகுடத்துடன் மைத்திரிபால சிறீசேனவின் 1000 நாட்கள் ஆட்சியில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் தொடர்ச்சியான போராட்டத்துடனே 200 நாட்களுக்கு மேல் கடந்திருக்கின்றது. இன்றும் அந்த மக்களின் போராட்டம் முடிவின்றித் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

'காணாமல்போனோர், இறுதிப்போரில் சரணடைந்தோர், உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்கள் மற்றும் தடுப்பு முகாமில் இருந்தவர்களின் முழு விவரமும் விரைவில் வெளியிடப்படும்' என மைத்திரிபால சிறீசேன அதிகார பூர்வமாக அறிவிப்பு செய்தார். 'இறுதி யுத்தம் மற்றும் இதுவரை காலமும் படையினரிடம் சரணடைந்த மற்றும் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டவர்களின் விவரங்களை, உடனடியாக வெளியிடுமாறு, முப்படையினருக்கு உத்தரவிடப்போவதாக' காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுமிடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தில் நடைபெற்றபோது அங்கு வைத்தும் அவர் உறுதியும் அளித்திருந்தார். ஆனால் மாதங்கள் பல கடந்தும் இன்னும் எந்தவொரு பட்டியலும் வெளியாகவில்லை. அது வெளிவருவதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

காணாமல் போனோரை கண்டுபிடிப்பதற்கான அலுவலகத்தை அமைக்கும் சட்டமூலம் சிறீலங்கா நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

1. காணாமல் போனோர் பற்றிய உண்மைகளைக் கண்டறிவது.

2. தேவைப்பட்டால் காணாமல் போனோருக்கான சான்றிதழ்களை வழங்குவது.

3. பாதிக்கப்பட்டவர்களின் சட்ட தேவைகளை பூர்த்தி செய்வது.

என்ற மூன்று திட்டங்களுடன் ரணில் விக்கிரமசிங்கவினால் கொண்டுவரப்பட்ட சட்டமூலம், எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. ஐ.நா. உட்பட மேற்குலக நாடுகளும் அதனை வரவேற்றன. மிகவும் தாமதிக்கப்பட்டுவிட்டது. எனினும் காணாமல் போனோருக்கான பணியகத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு சிறீலங்கா அரசாங்கத்திடம் சர்வதேச மன்னிப்புச்சபையும் கோரிக்கை விடுத்தது. ஆனால், சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு மாதங்கள் கடந்தும் காணாமல்போனோரை கண்டுபிடிப்பதற்கான அலுவலகத்தை அமைப்பதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கான முனைப்புகளையும் காணவில்லை.

இந்த நிலையில்தான் மைத்திரிபால சிறீசேனா கடந்த வாரம் தனது முகத்தின் இன்னொரு பக்கத்தை உலகிற்கு காட்டியிருக்கின்றார். 'பொறுப்புக்கூறலில் இருந்து அரசு பின்வாங்கவில்லை. அதற்குரிய ஏற்பாடுகள் சிறீலங்காவிற்கே உரிய பாணியில் மெதுவாகவே நிறைவேற்றப்படும். இந்த அரசின் பயணம் மெதுவாகவே இருக்கின்றது. இது போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு நாளிலோ அல்லது ஒரு மாதத்திலோ தீர்வைக் கண்டுவிட முடியாது' என்று சிறீசேனா கூறியிருக்கின்றார்.

'ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான பேரவை சிறீலங்கா செயற்படுத்திக்காட்ட வேண்டிய பரிந்துரைகளை 2019ம் ஆண்டிற்குள் நிறைவேற்ற வேண்டுமென பணித்துள்ளது. ஆனால், அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் சிறீலங்கா அரசாங்கம் எடுப்பதாக தெரியவில்லை' என்று குற்றம்சாட்டியுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறீலங்கா மற்றும் மாலைத்தீவிற்கான பிரதிநிதி போல் கோட்பிறி, 'தற்போதுவரையில் மனித உரிமை செயற்பாடுகளில் சிறீலங்கா அரசாங்கம் செயற்படுத்தியுள்ள விடயங்கள் தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ளோம்' என்றும் குற்றம் சாட்டியுள்ளார். அவரது குற்றச்சாட்டிற்குப் பின்னரே, மிகமெதுவாகவே சிறீலங்கா எதனையும் செய்யும் என்ற தொனியில் மைத்திரிபால சிறீசேன இவ்வாறான ஒரு பதிலை வெளியிட்டிருக்கின்றார்.

காலம் கடந்த நீதி, அநீதிக்கு சமாமானது. சிறீலங்கா அரசு காலம் கடந்தும் தமிழர்களுக்கு தீர்வை வழங்கப்போவதில்லை. இது தமிழர்களுக்கு மட்டுமல்ல, சர்வதேசத்திற்கும் தெரிந்தவொரு முடிவுதான்.

இரு தரப்பு விளையாடும் சாதாரண விளையாட்டு போட்டிகளில் கூட, இரு தரப்பையும் கண்காணித்து தவறு விடும் தரப்பை சுட்டிக்காட்டி போட்டியில் இருந்து நீக்கவும், வெற்றி - தோல்வியை உறுதி செய்யவும் நடுவர் ஒருவர் தேவைப்படுகின்றார். அந்த நடுவர் பக்கச்சார்பானவராக இருந்தாலும் முழுமையாக ஒரு பக்கமே சார்ந்துநின்று தீர்ப்பை வழங்கிவிடமுடியாது. ஏனெனில் அவரது முடிவை ஏற்பதற்கும், எதிர்ப்பதற்கும் வேறு தரப்பினரும் அங்கு நின்றிருப்பார்கள். ஒரு போட்டியில் அதுவும் ஒரு விளையாட்டுக்கே தீர்ப்புக்கூற மூன்றாம் தரப்பாக ஒரு நடுவர் தேவைப்படும்போது, பெரும் பகை கொண்டு மோதி, ஒரு இனத்தை அழித்துவிட்ட இறுமாப்புடன் நிற்கும் ஒரு தரப்பிடம், இந்த உலகம் அவர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு காத்திருக்கின்றது. இது உலகில் எங்கும் நடந்திராத விசித்திரம் மட்டுமல்ல 'கசாப்புக் கடைக்காரனிடம் கருணையை எதிர்பார்த்து காத்திருக்கும் ஆட்டின் நிலையில்' தமிழினத்தை நிற்கவைத்திருக்கும் கொடூரமான முடிவும் கூட.

அதனால்தான், இலங்கையில் போர் ஓய்ந்துவிட்டதாக சொல்லப்பட்டு எட்டு ஆண்டுகள் கடந்துபின்னரும் வடியும் தமிழர்களின் கண்ணீர் இன்னும் ஓயவில்லை. சர்வதேசத்தின் தலையீடின்றி தமிழர்கள் தங்களுக்கான நீதியை சிங்கள தேசத்திடம் இருந்து என்றுமே பெற்றுக்கொள்ள முடியாது. தமிழருக்கான நீதியைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை சர்வதேசம் முழுமையாகத் தனது கையிலெடுக்கும் வரை காணாமல்போனோர் கண்டுபிடிக்கப்படப்போவதுமில்லை, இந்தக் கண்ணீரும் ஓயப்போவதில்லை.

# தமிழ் இனப்படுகொலையைத் தடுக்காத உலகம் ரோஹிங்கிய இனப்படுகொலையையாவுதல் தடுக்குமா?

விவேகன்

மியன்மாரிலிருந்து புத்தரின் திருவுருவச் சிலை ஒன்று கடந்த வாரம் சிறீலங்காவிற்கு கொண்டுவரப்பட்டது. சிறீலங்கா ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் முதலில் வைக்கப்பட்ட இந்தச் சிலைக்கு கடந்த 25ம் திகதி







மைத்ரிபால சிறிசேன முதல் வழிபாட்டை நடத்தினார். மைத்ரிபால சிறிசேன வழிபட்டதன் பின்னர், அங்கிருந்து அநுராதபுரம் சிறீசம்புத்த ஜயந்தி விகாரைக்கு திருவுருவச் சிலை கொண்டு செல்லப்பட்டது. இந்தச் சிலையை மியன்மாரில் வசிக்கும் ஜயந்த ராஜகருணா என்பவர் சிறீலங்காவிற்கு அனுப்பி வைத்திருந்தார்.

உயிர்கள் மீது அன்பும், காருண்யமும் கொண்ட இந்தப் புத்தர் சிறீலங்காவிற்கு பயணம் மேற்கொண்ட அதேகாலத்தில்தான் மியன்மாரில் மிகமோசமான இனப்படுகொலை ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. மியன்மாரில் ரோஹிங்கிய (Rohingya) முஸ்லீம் மக்கள் மீது தொடர்ச்சியாக இனஅழிப்பு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவர்களின் மத அடையாளத்தையும் இன அடையாளங்களையும் அழிக்கும் அத்தனை நடவடிக்கைகளும் சிங்கள, பௌத்த பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டதைப் போன்றே அங்குள்ள பௌத்த ஆட்சியாளர்களால் ரோஹிங்கிய முஸ்லீம்கள் மீது பல்வேறு வடிவங்களிலும் மிகக்கொடூரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

இதன் உச்சமான படுகொலை தற்போது அங்கு அதிகரித்துள்ளது. தமிழினத்தின் மீதான சிங்களப் பேரினவாதம் மேற்கொண்ட இனப்படுகொலையை இந்த உலகம் கண்டுகொள்ளாததுபோலவே, மியான்மரில் ரோஹிங்கிய முஸ்லீம் மக்கள் மீது ஆட்சியுள்ள பௌத்த வெறியர்களால் மேற்கொள்ளப்படும் இந்தப் படுகொலைகளையும் உலகம் பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை.

குழந்தைகளும், பெண்களும், வயோதிபர்களும் என வேறுபாடின்றி அனைவரும் மிகக் கொடூரமாக அங்கு கொன்றொழிக்கப்படுகின்றார்கள். வீதிகளிலும், நதிகளிலும் என கோரமாக வெட்டப்பட்ட, உயிருடன் எரியூட்டப்பட்ட மனித உடலங்கள் எங்கும் நிறைந்து கிடக்கின்றன.

ஏன் இந்த அவலம் இம் மக்களுக்கு..?

ரோஹிங்கிய மக்கள் மியன்மாரில் ராக்கைன் மாநிலத்தின் வடக்கே வசிக்கும் இந்தோ-ஆரிய இனக்குழுவாகும்.

தொடர்ச்சி 10ம் பக்கம்

## சிறீலங்காவில் மேலும் தமிழ் மொழிக் கொலை!

தமிழ் மொழியையும் படுகொலை செய்வதில் சிறீலங்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்பதற்கு இன்னொரு ஆதாரமும்




சிக்கியுள்ளது. கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கட்டிடத்தின் பின்புறச் சுவரில் –மாகாணங்களுக்கு இடையேயான– என்பதற்கு பதிலாக (மாகாணங்கிடை யேயாண) என தமிழை கொலை செய்து எழுதியுள்ளனர். அண்மைக்காலமாக இது போன்ற தமிழ் மொழிக் கொலைகள் அதிகரித்த வண்ணமேயுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முகமாலையில் பெண் படுகாயம்!!

பளை, முகமாலை வடக்கில் கடந்த 25ம் திகதி இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார். சிறுமி ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இனந்தெரியாத பொருள் ஒன்றைக் கண்டெடுத்து, இரும்பு எனக் கருதி கோடாலியால் பிளக்க முற்பட்டபோது அது வெடித்தது. அதில் முகத்திலும் காலிலும், கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. படுகாயமடைந்த பெண் தற்போது மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 36 ஆயிரம் படை தப்பியோட்டம்

சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தில் இருந்து சேர்ந்த 36,000 இற்கும் அதிகமானவர்கள் தப்பிச் சென்றுள்ளதாக சிறீலங்கா இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொான் செனவிரத்ன தகவல் வெளியிட்டுள்ளார். இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், தற்போது வரை சேவையில் இருந்து தப்பிச் சென்றிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 4377 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், முப்படைகளையும் சேர்ந்த 5000 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பாதுகாப்பு பிரிவின் தரவுகளுக்கு அமைய முப்படைகளையும் சேர்ந்த 36 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பணியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும், அவர்களை கைது செய்து சட்டமுறைப்படி பணியில் இருந்து விலக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக செனவிரத்ன மேலும் தெரிவித்தார்.

## 8 இலட்சம் வழக்குகள் நிலுவையில்!

சிறீலங்கா நீதியமைச்சின் புள்ளிவிவரத் தகவல்களின் பிரகாரம், 7 இலட்சத்து 95 ஆயிரம் வழக்குகள், தீர்த்துவைக்கப்படாமல் உள்ளன என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பிரதீபா மஹாநாம தெரிவித்தார். எனினும், தற்போதைய அரசியல் மேடைகளில், விசேட நீதிமன்றம் நிறுவப்பட்டு, கடந்த ஆட்சியின் போது, அரச வளங்களை கொள்ளையடித்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற கருத்துகள் மேலோங்கியுள்ளன. நாட்டில், நீதிமன்றங்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரித்தால், இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# புத்தளம் முஸ்லீம்களை முல்லைத்தீவில் குடியேற்ற முயற்சி

# கரைதுறைப்பற்று செயலருடன் ஹக்கீம் கடும் சீற்றம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளவான முஸ்லீம்களை குடியேற்றி அம்மாவட்டத்தில் தமிழ் மக்களின் விகிதாசார எண்ணிக்கையை குறைப்பதற்கு சிறீலங்கா முயற்சித்து வருகின்றது. முல்லைத்தீவில் காடுகளை அழித்து அங்கு முஸ்லீம்களை குடியேற்ற முனைந்ததும் அங்குள்ள மக்களின் கடும் எதிர்ப்பால் பின்னர் அது கைவிடப்பட்டதும், பின்னர் அந்தக் காட்டை தீவைத்து எரித்து அழித்ததும் அனைவரும் அறிந்ததே.

அத்துடன், ஏற்கனவே முல்லைத்தீவில் இருந்து வெளியேறிய சுமார் 1000 முஸ்லீம் குடும்பங்கள் தற்போது பெருகி 2500 குடும்பங்களாகி விட்டதாகவும் எனவே 1000 குடும்பங்களுக்கு அல்ல 2500 குடும்பங்களுக்கு முல்லைத்தீவில் காணி வழங்க வேண்டும் என்று முஸ்லீம் தரப்புகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் அதற்கும் மேலாக புத்தளத்தில் வாழ்ந்து வரும் முஸ்லீம்களைக் கொண்டுவந்து முல்லைத்தீவில் குடியேற்றும் திட்டம் ஒன்று அம்பலத்திற்கு வந்துள்ளது.



முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்ணீரூற்றுப் பகுதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அலுவலகமும் புதுக்குடியிருப்பில் குடிதண்ணீர் விநியோகத் தாங்கியும் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வுகளில் சிறீலங்காவின் அமைச்சர் ரவூக் ஹக்கீம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். அதன் பின்னர் முல்லைத்தீவிலுள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் சிறப்புக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் முஸ்லிம் மக்களின் விடயங்கள் தொடர்பில் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளரிடம் அமைச்சர் ரவூக் ஹக்கீம் சரமாரியாக கேள்விகளை எழுப்பினார். கூழாமுறிப்பிலே முஸ்லிம் மக்களின் குடியேற்றத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணிகளில் அவர்களைக் குடியேற்றும் பணிகள் தாமதமடைவது ஏன் கொத்தியாவைத்தையில் 1984ம் ஆண்டு முதல் குடியிருந்த 84 முஸ்லிம் குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதமைக்கான காரணம் என்ன? முல்லைத்தீவு மாவட்டத்தில் காணியற்ற முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கை 1300ஆக இருந்தது.

ஆனால் அது தற்போது 920 எனக் கணக்கிடப்படுகின்றது. அவ்வாறானால் இந்த எண்ணிக்கை எதன் அடிப்படையில் குறைந்தது போன்ற கேள்விகளுக்குக் கரைத்துரைப் பற்றுப் பிரதேச செயலாளர் பதிலளிக்க வேண்டும் என அமைச்சர் ஹக்கீம் பணித்தார்.

இந்த 3 விடயங்களில் கூழாமுறிப்பு காணியில் காணி வழங்கி மாவட்டத்தின் ஓர் இனத்தை மட்டும் குடியேற்றம் செய்ய முடியாது. ஏனைய இனங்களுக்கும் அதே காலப் பகுதியில் காணி வழங்கப்பட வேண்டும் என்பது இந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தீர்மானம். எனவே அதன் பிரகாரம் கூழாமுறிப்பில் வனவளத் திணைக்களத்தால் மக்களின் குடியேற்றத்துக்கு காணிகள் விடுவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றின் சரி அரைவாசி நிலம் முஸ்லிம் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் அந்தக் காணிகளை விடுவிப்பதற்காக சுற்றுச்சூழல் அதிகார சபை அனுமதி வழங்கவில்லை.

அதேநேரம் கொத்தியாவத்தையில் வசிக்கும் 84 குடும்பங்களுக்கான காணி அனுமதி தொடர்பில் மாகாண காணி அமைச்சின் பணி முடிவுற்று அதற்கான அனுமதிகள் கிடைக்கவில்லை. இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 300 முஸ்லிம் குடும்பங்கள் காணிகோரி பதிவுகளை மேற்கொண்ட போதும் 920 குடும்பங்களே காணி அற்றவர்களாகக் கண்டறியப்பட்டது.

இந்த மாவட்டத்தில் தற்போதும் வசிக்கு முஸ்லிம் மக்களில் 920 குடும்பங்களுக்கு மட்டுமே காணி இல்லை. ஏனையோர் புத்தளம் மாவட்டத்தில் வசித்த வண்ணம் இங்கு நிலம்கோரி பதிவு செய்துள்ளனர் என்று கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் குணபாலன் பதிலளித்தார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் ஹக்கீம், அந்த மக்களுக்கும் காணி வழங்கினால் அவர்களும் முல்லைத்தீவுக்கு வந்து குடியேறுவார்கள் என்றார். இந்த மாவட்டத்திலே தற்போது வசிப்பவர்களிலேயே ஆயிரத்து 380 தமிழ் குடும்பங்களுக்கும் 920 முஸ்லிம் குடும்பங்களுக்கும், 300 சிங்கள குடும்பங்களுக்கும் காணி வழங்க வேண்டிய நிலையில் இங்கு வசிக்காத குடும்பங்கள் தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்த முடியாது என்று கரைத்துரைப்பற்று பிரதேச செயலாளர் உறுதியாகத் தெரிவித்தார். இந்தப் பதிலால் அமைச்சர் ஹக்கீம் கடும் சீற்றமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### மருதங்கேணிச் சந்தியில் யானை தாக்கி ஒருவர் பலி

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணிச் சந்தியில் கடந்த 28ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்தார். மூவர் காயமடைந்தனர். இப்பிரதேசத்துக்குள் திடீரென நுழைந்த காட்டு யானையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோரே அதன் தாக்குதலுக்கு இலக்காகினர். இச் சம்பவத்தில் 54 வயதான ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் காயமடைந்தனர். இவர்களின் இருவர் பலத்த காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்துக்குள் முல்லைதீவுப் பகுதியிலிருந்து யானைகள் வந்து நடமாடுவதாக கிராமவாசிகள் பேசிக் கொண்டனர். இந்நிலையில் அதே தினம் ஞாயிறு இரவு 9 மணியளவில் ஆழியவலை கடற்பகுதியில் யானை ஒன்று நடமாடுவதைக் கண்ட மீன் வாடிகளில் தங்கியிருந்து மீனவர்கள் கிராமவாசிகளுக்குத் தெரிவித்துள்ளனர். உடன் அங்கு திரண்ட கிராமவாசிகள் நெருப்புக் கொளுத்தி வெடி கொழுத்தி, உந்துருளிகளில் ஒளிபாய்ச்சி ஆழியவளை மயானத்துக்கு அப்பால் விரட்டியிருந்தனர். இந்நிலையில் மறுநாள் காலை வத்திராயன் ஊடாக மருதங்கேணிச் சந்தியை நோக்கி வந்த யானையை வேடிக்கை பார்க்க பலர் குழுமியபோது யானை தாக்குதலை மேற்கொண்டபோதே இந்த உயிரிழப்பு இடம்பெற்றுள்ளது.

### வவுனியாவில் வாகன விபத்து ஒருவர் உயிரிழப்பு மூவர் படுகாயம்

வவுனியா கல்குண்ணாமடுவ பகுதியில் கடந்த 30ம் திகதி புதன்கிழமை அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியாகி மூவர் காயமடைந்துள்ளனர். அனுராதபுரத்திலிருந்து வவுனியா நோக்கி ஓடுகளை ஏற்றிச் சென்ற வாகனம் கல்குண்ணாமடுவ பகுதியில் எந்தவித சமிச்சை விளக்குகளுமின்றி தரித்து நின்ற வேளையில் அதே பாதையில் வவுனியா நோக்கி வீட்டின் மேல் கூரை அலங்கரிப்பு பொருட்களை ஏற்றி சென்ற வாகனம் தரித்து நின்ற குறித்த வாகனத்தின் மீது மோதியுள்ளதுடன், வாகனம் தூக்கி வீசப்பட்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த சம்பவத்தில் தரித்து நின்ற வாகனத்தில் பயணித்த வன்னிமுத்து கிருஸ்ணன் (வயது 48) என்பவர் உயிரிழந்ததுடன், மூவர் காயமடைந்தனர்.

### உழவு இயந்திரத்தில் இருந்து விழுந்து குடும்பஸ்தர் பலி !



முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்று மேற்கினை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான துரைசிங்கம் நிசாந்தன் (34) என்பவர் கடந்த 30ம் திகதி புதன்கிழமை காலை உழவியந்திரத்திரத்தின் மட்காட்டில் இருந்து தவறுதலாக வீழ்ந்ததில் தலையின் பின்பக்கத்தில் அடிபட்டு உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தண்ணீரூற்று புதறிகுடா பகுதியில் இடம்பெற்றுள்ளது. இவர் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் சமூர்த்தி திட்டபிரிவில் பணியாற்றும் பணியாளராவார். உழவு இயந்திரம் ஓட்டிச்சென்ற நபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

### படகு விபத்தில் இருவர் பலி

யாழ். பண்ணை கடல் பகுதியில் கடந்த 24ம் திகதி படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர். குருசடி தீவில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலயத்துக்கு ஒரு படகில் ஆறு பேர் சென்று கொண்டிருந்தபோது, படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது. நாவாந்துறையைச் சேர்ந்த 25 வயதுடைய குடும்பஸ்தர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். நீரில் மூழ்கிக் காப்பாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் வருட மாணவியான மண்பிட்டி நாவாந்துறையைச் சேர்ந்த சகாயதாசன் டயானா (23) 30ம் திகதி உயிரிழந்தார்.

### வீதியில் நின்றவரின் உயிரைப் பறித்தது உழவு இயந்திரம்!

மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரம் சாலையில் நின்றவரை மோதித்தள்ளியதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த 28ம் திகதி இரவு 9 மணி யளவில் மிருசுவில் தவசிகுளம் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணைக்கு அருகாமையில் இடம்பெற்றது. இதில் பெரியநாவலடி கொடிகாமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சிவஞானம் சுரேஸ்குமார் (வயது 36) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார். உழவு இயந்திரத்தினுடைய சாரதி உழவு இயந்திரத்தை கைவிட்டுத் தப்பிச் சென்றார். குறித்த பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் கடத்தலில் ஈடுபடுபவர்கள் வாகன விளக்குகளை அணைத்துவிட்டு மிக வேகமாக ஆபத்தான முறையில் பயணிப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

### ஐந்து பிள்ளைகளின் தாய் மரணம்

வவுனியா, நெளுக்குளம் சாம்பல் தோட்டத்தில் ஐந்து பிள்ளைகளின் தாய் கடந்த 20ம் திகதி காலை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். 46 வயதுடைய தியாகராசா நகுலேஸ்வரி என்பவர் கிணற்றிக்கு அருகே நின்றுள்ளார். சற்று நேரத்தின் பின்னர் அவரை காணாத பிள்ளைகள், தாயை காணவில்லை என தேடிய சமயத்தில் கிணற்றில் சடலமாக கிடந்துள்ளார். அயலவர்களின் உதவியுடன் சடலத்தினை மீட்டெடுத்துள்ளனர்.



CITY EXPRESS
We Move the Businessclass

சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis

# புலிகளால் தகர்த்தெறியப்பட்ட சாதியம் மீண்டும் வளர்த்தெடுக்கப்படும் அவலம்


'தாயகத்தில் இருந்து' காந்தரூபன்

**தமிழர்கள் என்றால் யார்? அவர்களின் வீரம் என்ன? என்பதை பண்டாரவன்னியன், எல்லாளன், சங்கிலியன் போன்றோரிடம் அறிந்தும் அதில் தெளிவில்லாமல் மீண்டும் வலிந்து வந்து பிரபாகரனிடம் வாங்கிக் கட்டியவைகளைச் சிங்கள தேசம் அவ்வளவு எளிதில் மறந்துவிடாது.**

தமிழ்ச் சமூகத்தை சிதைப்பதற்கும் சீரழிப்பதற்கும் சிங்கள தேசமும் தமிழின விரோதிகளும் மிகவும் கடுமையாக உழைத்து வருகின்றனர். தமிழர் தரப்பு மீண்டும் ஒரு தடவை விடுதலைப் போராட்டத்தைப் பற்றிச் சிந்திக்கக்கூடாது என சிங்கள தேசம் எதிர்பார்க்கின்றது.

தமிழ் மக்கள் மீண்டும் எழுச்சியடைந்தால் அது தமது இருப்புக்கு கடும் அச்சுறுத்தலாக அமையும் என சிங்கள தேசம் கருதுகின்றது. அதனால் தமிழர் தரப்பை தமக்குள் முரண்பட்டு, மோத வைக்கும் செயற்பாடுகளை சிங்கள தேசம் அரங்கேற்றி வருகின்றது. அதில் முதன்மையானதே சாதிய ரீதியான முரண்பாடுகள்.

தமிழ் மக்கள் தமது விடுதலை தொடர்பாக, தமது உரிமைகள், சுதந்திரம் தொடர்பாக சிந்திப்பதற்கு முன்னரான காலப்பகுதியில், குறிப்பாக 1970 களுக்கு முன்னர் தமிழர் தாயகத்தில் சாதிய ரீதியான நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. அது ஈழத்தில் விஞ்ஞானமோ, தொழில்நுட்பமோ வளர்ச்சியடையாத காலம். அந்தச் சாதிய முரண்பாட்டால் தமிழ் மக்கள் பல பின்னடைவுகளைச் சந்தித்தனர் என்பதை எவரும் மறுக்க முடியாது.



காலப்போக்கில், அது தவறு என மக்கள் உணர்ந்தனர். மிருகங்கள் கூடப் பின்பற்றாத காட்டுமிராண்டித்தனமான நடைமுறைகளை நாம் ஏன் பின்பற்ற வேண்டும் எனச் சிந்தித்த தமிழ் மக்கள் அந்த நடைமுறைகளில் இருந்து மீண்டனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் சாதிய ரீதியான முரண்களை அறவே இல்லாதொழித்திருந்தது. உண்மையில், அது தேவையற்ற நடைமுறை என்பதை தமிழ் மக்கள் உணர்ந்து. அதிலிருந்து மீண்டு பல தசாப்தங்களாகிவிட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்கள் வீச்சுடன் முன்னகர்ந்தமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடைப்பிடித்த சாதிய ஒழிப்பு நடைமுறைகளும் முக்கிய காரணமாக அமைந்தன. அதனைத் தொடர்ந்தே தமிழ் மக்களும் தமது வாழ்வியலை மாற்றிக்கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தின் கட்டமைப்பைப் போலவே தமிழர் வாழ்வியல் கட்டமைப்புக்களையும் மாற்றிக்கொண்டனர். அதனால் தமிழ் மக்கள் எந்த நேரத்திலும் எந்தக் காரியத்தையும் துணிவுடனும், நிமிர்வுடனும் செய்துமுடிக்கக் கூடியதாக இருந்தது. அவர்களிடம் இருந்து விடுதலை உணர்வு பீறிட்டு எழுந்தது.

ஆனால், எப்போதோ உக்கி, உழுத்துப் போன சாதியப் பண்பாட்டை மீளத் தூக்கி நிறுத்தி, தமிழர்கள் மத்தியில் அந்தப் பண்பாட்டை மீண்டும் துளிர்விடச் செய்ய சிறீலங்கா புலனாய்வாளர்கள் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கின்றனர். இதற்குள் இந்திய றோ புலனாய்வுப் பிரிவிற்கும் பங்கு இருப்பதாகத் தெரியவருகின்றது.

தமிழர்கள் மத்தியில் சாதிய விதையை மீண்டும் தூவும் நடவடிக்கை வெகு வேகமாக நடைபெற்று வருகின்றது. யாழ். குடாநாட்டில் இருந்து வெளிவருகின்ற சில பத்திரிகைகளும் அதற்குத் துணைபோகின்றன.

குறிப்பாக, திருமணத்தின்போது மணமகன், மணமகள் தேவை என்ற விளம்பரங்கள் தற்போது சாதிப் பெயர்களுடன் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஏதோ, சொற்பமான, அதுவும் ஆயிரம், இரண்டாயிரம் ரூபா அளவில் போடும் விளம்பரங்களில் அந்த நடைமுறை பின்பற்றப்படுகின்றது.

அப்படி சாதிப் பெயர் குறிப்பிடப்படாவிட்டால் அந்த விளம்பரங்களைத் தரமாட்டார்களாம் என்பது பத்திரிகை விளம்பரபீடங்களின் வியாக்கியானம். வெறும், ஆயிரம், இரண்டாயிரம் ரூபா இல்லாவிட்டால் பத்திரிகையே இல்லாமல் போய்விடும் என்பது போலத்தான் அவர்களின் பதில் உள்ளது. அவர்களும் சாதியத்தை மேன்மைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படியாக, தமிழ் மக்கள் மத்தியில் சாதியக் கருத்துக்களை விதைக்கும் செயற்பாடு திட்டமிட்ட ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் ஒரு படி மேலாகத் தான் அருளினியன் என்ற தமிழ்த் தேசியத்திற்கு எதிரான கேரள டயறி என்ற நூலும் அமைந்திருந்தது.

சாதியத்தை மீண்டும் துளிர்க்க விடுவதற்கு தமிழ் மக்கள், தமிழ்த் தேசியவாதிகள் தயாராக இல்லை என்பதை தற்போது சிங்கள தேசம் தெளிவாக உணர்ந்திருக்கும். சிங்கள தேசத்திற்கு, சிங்களப் புலனாய்வாளர்களுக்கு, இந்திய றோ புலனாய்வுத் தரப்புக்கு இந்தச் செய்தி மிக இறுக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனாலும் தமிழ் மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளில் சிங்கள தேசம் வெற்றி கண்டு வருவதை நாம் மறுக்க முடியாது. அதாவது, தமிழ் இளைஞர்களிடையே போதைப் பொருள் பாவனையைத் திணிப்பதில் சிங்கள தேசம் வெற்றி கண்டிருக்கின்றது.

பாடசாலை மாணவர்கள் திட்டமிட்ட ரீதியில் போதைக்கு அடிமையாக்கப்படுகின்றனர். பாடசாலை வாயில்களில் நிற்கும் வண்டில் வியாபாரிகள் மாணவர்களுக்கு போதை கலந்த இனிப்பு மற்றும் உறைப்புப் பண்டங்களைக் கொடுத்து அவர்களின் எதிர்காலத்தைச் சீரழிக்கின்றனர்.

இவ்வாறு சீரழிக்கப்பட்ட மாணவர் குழாம் ஒன்றுதான் கடந்த வாரம் மண்டைதீவுக் கடலில் மாண்டுபோனது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

## அதிகரித்துச் செல்லும் இலங்கை வெப்பநிலை!

இலங்கையின் சராசரி வெப்பநிலை 0.01டிகிரிதொடக்கம்0.03 பாகை வரைஆண்டுதோறும் அதிகரித்துச் செல்வதாக, அபாய எச்சரிக்கை வெளியிட்டுள்ளார், காலநிலை மாற்றம் பற்றிய தேசிய நிபுணர்குழுவின் உறுப்பினரும், பெரதெனியா பல்கலைக் கழகத்தின் விவசாயபீட பயிர் அறிவியல் விரிவுரையாளருமான புத்தி மாரம்பே.

இலங்கையில் கடந்த 50 ஆண்டு கால வெப்பநிலை ஒழுங்கை ஆராய்ந்து பார்த்ததை அடிப்படையாக வைத்தே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக குளிரான காலம் மேலும் குளிராகவும், வெப்பமான காலம் மேலும் வெப்பமாகவும் மாறிச் செல்கின்றது. 1973ம் ஆண்டுக்குப் பின்னர் மோசமாக வறட்சிப் பாதிப்பு தற்போதைய வருடத்திலேயே உணரப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இராணுவ அதிகாரிகளின் வாகனம் திடீரெனத் தீப்பற்றி எரிந்தது

சிறீலங்காவின் தென் பகுதியிலுள்ள அதிவேக நெடுஞ்சாலையில், சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் உயரதிகாரிகள் பயணம் செய்த வாகனம் ஒன்று



திடீரெனத் தீப்பிடித்து எரிந்து நாசமானது. தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், கொட்டாவ வெளியேற்றப் பகுதியில் இந்தச் சம்பவம் கடந்த 29ம் திகதி இடம்பெற்றது. மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமில் இருந்து, பனாகொட இராணுவத் தளத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது இந்த தீ விபத்து ஏற்பட்டது. இதில் மூன்று இராணுவ அதிகாரிகள் இருந்தனர் என்றும், தீப்பிடித்ததும், அவர்கள் வாகனத்தில் இருந்து குதித்து வெளியேறியதால், காயங்களின்றி உயிர் தப்பியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், தீவிபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை.

## அதிபரின் வருகையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு – கருவேப்பங்கேணி விபுலானந்தாக் கல்லூரி மாணவர்களும் மற்றும் பெற்றோரும் இணைந்து பாடசாலை அதிபரின் வருகையைக் கண்டித்து பாடசாலையின் முன் வாயிலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த பாடசாலையில் கல்வி பயின்ற மாணவி ஒருவர் அதிபரால் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பில், நீதிமன்றில் நடைபெற்று வரும் வழக்கில் இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு மீண்டும் குறித்த பாடசாலயில் கடமை புரியலாம் என்ற நீதிமன்றம் வழங்கிய ஆணையின் கீழ், கடந்த 25ம் திகதி பாடசாலைக்கு சமூகமளித்து பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிட்டார். இதையடுத்தே, இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, குறித்த அதிபர் எமது பாடசாலைக்கு வேண்டாம், பாடசாலையைச் சீரழிக்காதே, எதிர்கால சமூகத்தை சீரழிக்காதே, சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்து போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## சிறுமி துஷ்பிரயோகம் - குடும்பஸ்தர் கைது

திருகோணமலை – ஜயந்திபுர பகுதியில் பதினைந்து வயதுடைய சிறுமியொருவரை, பாலியல் துஸ்பிரயோகத்துக்குட்படுத்த முற்பட்ட நபர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கந்தளாய், வான்எல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். குறித்த சந்தேகநபர், வீட்டில் தனிமையில் இருந்த சிறுமியை வீட்டுக்குச் சென்று துஸ்பிரயோகத்துக்குட்படுத்த முற்பட்டதாக, சிறுமியின் பெற்றோரால் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய, அவரை கடந்த 25ம் திகதி கைது செய்தனர். சந்தேக நபரின் மனைவி வெளிநாடு சென்று சென்றுள்ளதாகவும், சந்தேக நபர் வீட்டில் தனியாக வாழ்ந்து வந்ததாகவும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

## மகள்களை துஸ்பிரயோகத்துக்குட்படுத்திய தந்தை கைது

மட்டக்களப்பு – மஞ்சந்தொடுவாய் பகுதியில், 6 மற்றும் 8 வயதான தனது பெண் பிள்ளைகளை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியதாக கூறப்படும் சந்தேக நபரான 50 வயதான தந்தையை, எதிர்வரும் 8ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். சிறுமிகளின் தாயும் தந்தையும் ஏற்கனவே பிரிந்து வாழ்வதாகவும் தந்தை மறுமணம் செய்துள்ள நிலையில் சிறுமிகள் தாயுடன் வசித்து வருவதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

தந்தை தங்களை அழைத்துச் செல்லும் சந்தர்ப்பங்களில் பாலியல் வன்புனர்வுக்குட்படுத்துவதாக குறித்த சிறுமிகள் தாயிடம் தெரிவித்த நிலையில், அவர் காவல் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்திருந்தார். சிறுமிகள் இருவரும் தங்களுக்கு நடந்த சம்பத்தை காவல்துறையினரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளனர். இதையடுத்து, குறித்த நபரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

## கருக்கலைப்புக்கு ஆயர்கள் எதிர்ப்பு!

இலங்கையில் இரு காரணங்களுக்காக கருக்கலைப்பு செய்ய அனுமதியளிக்கும் சட்டத்துக்கு கத்தோலிக்க ஆயர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். பாலியல் வன்முறையால் உருவான மற்றும் மரபணு பிறழ்வுக்குள்ளான கருக்களைக் கலைப்பதற்குச் சட்ட ரீதியாக அனுமதியளிக்கும் வகையில் கொண்டு வரப்படவுள்ள சட்டத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெற வேண்டியுள்ளது. இந்தக் காரணங்களுக்காக அனுமதியளிப்பதை உரிய துறைசார் மருத்துவ நிபுணர்களும் ஆதரிக்கின்றனர். இவ்வாறானதொரு நிலையிலேயே ஆயர்கள் மாநாட்டில் அதனை எதிர்க்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கருவொன்று உருவாகினால் அந்தக் கணத்திலேயே மனித உயிர் உருவாகின்றது. அது பரிசுத்தமானது. அதனைக் கலைக்கும் உரிமை யாருக்கும் இல்லை. ஒருவரின் உரிமைக்காக மற்றுமொருவரின் உரிமையை மீற முடியாது, என்று இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 650 சட்ட விரோத கருக்கலைப்புகள் இடம்பெறுவதாக களனி பல்கலைக்கழகத்தினால் கடந்த வருடம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்காவை ஆளுவது ஆட்சியாளர்களா? மதத்தலைவர்களா?

சிறீலங்காவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் அதிகாரத்தில் இருந்தாலும் அந்த நாட்டை ஆளுவது மதத் தலைவர்களே என்பது மீண்டுமொருமுறை நிரூபணமாகியுள்ளது. யாழ்குடாவில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களையடுத்து, யாழ்குடாநாட்டின் பாதுகாப்பு குறித்து ஆராயவேண்டியுள்ளது என சிறீலங்காவின்



மத அமைப்பான அஸ்கிரிய பீடம் அறிவித்திருந்தது. இந்நிலையில், சாமோபாலி மஹாநிக்காய அஸ்கிரிய பீடத்தின் மாகாநாயக்க தேரர், வரக்காக்கொட ஞானரத்ண மஹா தேரர் உள்ளிட்ட குழுவினர் யாழ் மாவட்டத்துக்கு சென்று நேரில் ஆராயவுள்ளதாகவும் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன. இவர்களின் வருகைக்கான ஆயத்தங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறீலங்காப் படையினரால் மிகவும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், யாழ் மாவட்டத்துக்கு கடந்த வாரம் பயணம் மேற்கொண்ட கண்டி அஸ்கிரிய பீட மஹாநாயக்கர் வரக்காகொட ஞானரத்ன தேரர் உள்ளிட்ட குழுவினர் யாழ் மாவட்ட முப்படைகளின் பிரதானிகளை யாழ் பலாலியில் அமைந்துள்ள பாதுகாப்பு படைகளின் தலைமை அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன்போது யாழ் மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் முப்படை அதிகாரிகளிடம்



கண்டி அஸ்கிரிய பீட மஹாநாயக்கர் வரக்காகொட ஞானரத்ன தேரர் கேட்டு அறிந்து கொண்டார். இக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்சியாராட்சி, வடமாகாண சிரேஸ்ட பிரதி காவல் மா அதிபர் றோசான் பெனாண்டோ, வட பிராந்திய கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் ஜயந்த சில்வா உள்ளிட்ட பாதுகாப்பு படைகளின் உயர்அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கண்டி அஸ்கிரிய பீட மஹாநாயக்கர் வரக்காகொட ஞானரத்ன தேரர் உள்ளிட்ட குழுவினாரல் பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கு ஆசி வேண்டி விசேட பிரார்த்தனையும் இடம்பெற்றது.

சிறீலங்காவில் பதவிக்கு வரும் எந்த அதியுயர் தலைவராக இருந்தாலும் அஸ்கிரிய பீட மஹாநாயக்க தேரர்களிடம் ஆசி வாங்காமல் அவர்கள் பதவியில் அமரமுடியாது என்பது அந்நாட்டில் எழுதப்படாத சட்டமாக இருக்கின்றது.

அண்மையில் சிறீலங்காவின் 21வது கடற்படைத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள வைஸ் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா கடந்த 25ம் திகதி கண்டி மல்வது மற்றும் மஹாநாயக்க தேரர்களின் கால்கலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார். அப்போது, உயர்பதவிகளை பொறுப்பேற்று எவ்வாறு நடத்திச் செல்ல வேண்டும் என அவருக்கு அறிவுரையை தேரர் வழங்கியிருந்தார். அதன்பின்னரே தன் பணியினை அவர் ஆரம்பித்துள்ளர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

## கட்டாரில் இருந்து வந்தவர் சடலமாக மீட்பு

வவுனியா, சமயபுரம் அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள வீட்டின் மாமரத்திலிருந்து இளைஞன் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் கடந்த 19ம் திகதி?சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வவுனியா, சமயபுரம் அம்மன் கோவிலுக்கு அருகில் வசித்து வரும் மாரிமுத்து பிரசாந்தன் எனும் 26 வயதுடைய இளைஞன் அவரது வீட்டிலுள்ள மாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே கட்டார் நாட்டிலிருந்து விடுமுறையில் வீட்டிற்கு வந்துள்ளார்.

## யாழில் சீதனக் கொடுமை - உயிரை மாய்த்த ஆசிரியை!

சீதனக் கொடுமையால் இளம் பெண் ஒருவர் தனது உயிரை மாய்த்த சம்பவம் யாழ். தென்மராட்சியில் இடம்பெற்றுள்ளது. டிசெம்பர் மாதம் திருமணம் நடைபெற ஏற்பாடாகியிருந்த நிலையில் மாப்பிள்ளை வீட்டார் சீதனத்தை அதிகரித்துத் தரும்படி கேட்டதால் மனமுடைந்த பெண் தன் உயிரை மாய்த்தார் என்று அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தெரியவருவதாவது, கொழும்பில் வீடு வாங்குவதற்குப் பணம் தேவையாகவுள்ளது. சீதனத் தொகையை 25 இலட்சம் ரூபாவாக அதிகரித்துத் தாருங்கள் என்று மணமகனின் தாயார் மணமகளிடம் கேட்டுள்ளார். அதன் பின்னரே குறித்த 29 வயதான இளம் பெண்ணான முன்பள்ளி ஆசிரியை உயிரை மாய்த்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. ஆசிரியை அவரது சகோதரியின் வீட்டின் குளியலறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். பருத்தித்துறையைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியையின் பெற்றோர்கள் இறந்துவிட்ட னர். கொழும்பில் பெரிய தாய் வீட்டில் அவர் தங்கியிருந்து அங்குள்ள முன்பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றி வந்தார். அவருக்கும் வெள்ளவத்தையில் வசிக்கும் ஒரு குடும்பத்தினரின் மகனுக்கும் திருமணம் பேசப்பட்டது. சீதனமாக மட்டுவிலில் பெண்ணின் பெயரில் வாங்கிய காணியில் வீடு கட்டித் தருவதாகவும் சீதனமாக 15 இலட்சம் ரூபா வழங்குவதாகவும் கூறப்பட்டுத் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் டிசெம்பர் 28ம் திகதி திருமணம்

| விபரம் | காசு(லட்சம்) | வீடு வளவு வாகனம் | நகை |
|---|---|---|---|
| 01. வைத்தியர் பொறியியலாளர் | 4000000.00 | கல்வீடு வளவு | 35 பவுண் |
| 02. தனியார் வங்கிகள் மற்றும் கம்பனிகளில் தொழில் புரிவோர் | 3000000.00 | கல்வீடு வளவு | 30 பவுண் |
| 03. அரசாங்க உத்தியோகம் | 2500000.00 | கல்வீடு வளவு | 40 பவுண் |
| 04. சவுதி டோகா கட்டார் போன்ற நாடுகலிருந்து வருவோர் | 1500000.00 | கல்வீடு வளவு மோட்டார் வாகனம் | 25 பவுண் |
| 05. ஐரோப்பிய நாடுகளில் பிராஜா உரிமையுள்ளோர் | 2000000.00 | இருந்தால் வாங்குவோம் | 30 பவுண் |
| 06. கூலி வேலை மற்றும் சாதாரண வேலை | 1000000.00 | வெறும் வளவு | 15 பவுண் |
| 07. வேலை இல்லாமல் சும்மா இருப்போர் | 500000.00 | வளவு | 10 பவுண் |

யாழ்ப்பாணத்தில் தற்போதைய சீதன நிலைமை என சமூக வலைத்தளங்களில் வெளியான பட்டியல் இது. இது கற்பனையில்லை உண்மைதான் என சிந்திக்கவைக்கின்றது ஆசிரியையின் அகாலமரணம்.

செய்வதென்று நாள் குறிக்கப்பட்டது. தனக்குரிய பொருள்களை வாங்குவதில் பெண் ஆர்வம் காட்டினார். பல பொருள்களை வாங்கியும் அவர் வைத்துள்ளார். இந்நிலையில் அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு சீதனம் உட்பட அனைத்துச் செலவுகளையும் அவரது சகோதரியே ஏற்றுக் கொண்டிருந்தார். கொழும்பில் வீடு வாங்குவதற்குப் பணம் தேவையாக உள்ளது. சீதனமாகத் தருவதாகக் கூறிய தொகையை 25 இலட்சம் ரூபாவாக அதிகரித்துத் தருமாறு மாப்பிள்ளையின் தாயார் முன்பள்ளி ஆசிரி யையின் பெரிய தாயாரிடம் கேட்டுள்ளார். அவர் இந்த விடயத்தை மணமகளின் சகோதரியிடம் கூறியுள்ளார். சகோதரி தகவலை வெளியிடாமல், அரபு நாட்டில் உள்ள சகோதரனுக்குக் கூறியுள்ளார். இந்த நிலையில், மாப்பிள்ளையின் தாயார், மணமகளுக்கு செல்பேசியில் அழைப்பு ஏற்படுத்தி சீதனத் தொகையை அதிகரித்து வழங்குமாறு கேட்டுள்ளார். சீதனத் தொகையை அதிகரித்தால் தனது சகோதரிக்கு மேலும் பணக் கஷ்டம் ஏற்படுமே என்று மணமகள் மனஉளைச்சலுக்கு ஆளானார். குளித்துவிட்டு வருகிறேன் என்று கூறிக் குளியலறைக்குள் சென்ற மணப்பெண் நெடுநேரமாகியும் வெளியே வரவில்லை. என்ன ஏது என்று பார்த்த போது, குளியலறையில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார் என்று உறவினர்கள் தெரிவித்தனர். போருக்குப் பின்னர் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் முழுமையாக கைவிடப்பட்டநிலையில், சீதனம் கேட்கும் பழக்கம் யாழ்ப்பாணத்தில் அளவுக்கதிகமாக அதிகரித்திருக்கிறது என்று சமூக ஆர்வலர்கள் கவலைவெளியிட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கனடா தெருவிழாவில் இருந்து வீடு திரும்பியவர் பலி



கனடா–ஸ்காபரோவில் கடந்த 27ம் திகதி இரவு 9:30 மணியளவில் நடைபெற்ற கார் விபத்தில் ஞானபுஸ்பம் செபஸ்தியாம்பிள்ளை (77) அவர்கள் காலமானார். இவர் யாழ்–கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாக கொண்டவர். ஞாயிறு இரவு ஸ்காபரோ நகரில் நடைபெற்ற தமிழர் தெருவிழாவை கண்டு களித்துவிட்டு அருகில் இருக்கும் தனது இல்லத்திற்கு கணவருடன் கால் நடையாக சென்றுகொண்டிருந்தபோதே இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

## தொடருந்து விபத்தில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியில் கடந்த 31ம் திகதி காலை இடம்பெற்ற தொடருந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதிகாலை 5.30 மணியளவில் புங்கன் குளம் தொடருந்து நிலையத்தில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொடருந்து தரிப்பிடத்தில் நிறுத்தப்படுவதற்கு முன்னதாகவே குறித்த நபர் தொடருந்திலிருந்து இறங்கியுள்ளார். அவர் தொடருந்தின் சில்லுக்குள் சிக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் ஆசீர்வாதப்பர் வீதிப் பகுதியைச் சேர்ந்த ஆர்.அருள்நேசன் (53) என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

# இனப்படுகொலையாளியின்...

பொதுவாக தமது தேசிய எல்லைக்குள் இடம்பெறும் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்வதற்கான உரிமையை உள்நாட்டு நீதிமன்றங்கள் கொண்டிருந்தாலும் கூட, அனைத்துலகச் சட்டத்தை மீறி மேற்கொள்ளப்படும் மோசமான குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான சட்ட உரிமையைப் பல நாடுகள் கொண்டுள்ளன. பிரேசிலின் சட்டமும் பிரேசிலிலுள்ள நீதிமன்றங்கள் தனது நாட்டிற்குள் நுழையும் குற்றவாளிகளை விசாரணை செய்வதற்கான அனுமதியை வழங்குகின்றது. குறிப்பாக இனப்படுகொலைகள் அல்லது சித்திரவதைகள் போன்ற எந்தவொரு பாரிய குற்றத்தில் ஈடுபடும் குற்றவாளி ஒருவர் தனது நாட்டிற்குள் நுழையும் போது அவரை விசாரணை செய்வதற்கும் தண்டனை வழங்குவதற்குமான ஒப்பந்தக் கடப்பாட்டை பிரேசில் கொண்டுள்ளது.

ஜயசூரிய பிரேசிலுக்கான தூதுவர் என்ற வகையில் இவர் இராஜதந்திர உறுப்பினருக்கான பாதுகாப்பைக் கொண்டுள்ளார். இவருக்கு எதிராக குற்றவியல் வழக்கை பிரேசில் தொடர விரும்பினால் இவர் மீதான இராஜதந்திரப் பாதுகாப்பை விலக்கிக் கொள்ளுமாறு சிறீலங்காவிடம் பிரேசில் கோரிக்கை விடுக்க வேண்டும். ஆனால் இந்தக் கோரிக்கையை சிறீலங்கா ஏற்றுக் கொள்ளாது. அத்துடன், ஜயசூரிய பணியாற்றிய இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏதாவது ஒரு நாடு இவருக்கு எதிராக விசாரணையை மேற்கொள்வதெனத் தீர்மானித்தால், இவருக்கு எதிராக அனைத்துலக கைது உத்தரவைஅறிவிக்கப்பட முடியும்.



சரத் பொன்சேகாவும் ஜகத் ஜயசூரியவும்



கார்லோஸ் காஸ்ரேசனா பேர்னாண்டே

இவ்வாறானதொரு சூழ்நிலையில், தன்னைக் கைதுசெய்து அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் ஒப்படைக்க விரும்பும் ஒரு நாட்டில் தங்கியிருப்பதை ஜயசூரிய தவிர்க்க வேண்டிய நிலையேற்படும். பயங்கரவாதத்தை வெற்றிகொண்டதாக மார்தட்டும் சிறீலங்காவிற்கு, போர்க் குற்றம்சுமத்தப்பட்ட ஒருவரை அங்கு தொடர்ந்து வைத்திருப்பதும் நெருக்கடியானது. எனவேதான், நெருக்கடி நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே ஜயசூரியவை சிறீலங்கா தமது நாட்டிற்கு திருப்பிக்கொண்டுவந்துள்ளது.

இதேவேளை, ஜகத் ஜயசூரியவைக் காப்பாற்றுவதில் சரத் பொன்சேகா தவிர்ந்த சிங்கள ஆட்சியாளர்கள் அனைவரும் கருத்துவேறுபாடின்றி ஒன்றிணைந்து உறுதியாக உள்ளனர். அத்துடன் சரத் பொன்சேகாவிற்கும் தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றனர்.

இதுகுறித்து சிறீலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன கூறுகையில், ஜெனரல் ஜகத் ஜயசூரிய மீது மட்டுமல்லாது நாட்டின் எந்தவொரு இராணுவ தளபதி அல்லது படையினர் மீதும் கை வைக்க உலகில் யாருக்கும் இடமளிக்கப் போவதில்லை என்று சூளுரைத்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை (3ம் திகதி) கொழும்பு, கெம்பல் மைதானத்தில் நடைபெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் 66வது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி சிறிசேன இந்தச் சூளுரையை மேற்கொண்டுள்ளார்.

இதுகுறித்து சிறீசேனா மேலும் கூறுகையில், சிலர் மிகவும் பொய்யான விடயங்கள் பேசுகின்றனர். கடந்த சில தினங்களாக முன்னாள் இராணுவ தளபதி ஜகத் ஜயசூரிய தொடர்பான பிரச்சினை பற்றி பேசப்படுகிறது. ஜகத் ஜயசூரியவின் பிரச்சினை என்பது கடலுக்கு அப்பாலான பிரச்சினை. இந்த நாட்டிலுள்ள பிரச்சினை கிடையாது. ஜகத் ஜயசூரிய மீதோ அல்லது இந்த நாட்டின் எந்தவொரு இராணுவ தளபதியின் மீதோ அல்லது எந்தவொரு யுத்த வீரர் மீதோ கை வைக்க உலகில் யாருக்கும் இடமளிக்க மாட்டேன் என்பதை மிகவும் தெளிவாக கூறிக் கொள்கிறேன். விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புடைய, புலிகளிடம் பணம் வாங்கும் வெளிநாடுகளில் இயங்கி இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் புலிகளுடன் நெருங்கிய உறவை கொண்டிருக்கும் அரச சார்பற்ற அமைப்புகள் கூறுவதற்கு ஏற்ப ஆடுவதற்கு நான் தயாரில்லை. நாட்டை நேசிக்கும் சிறந்த அரச சார்பற்ற அமைப்புகள் இருக்கின்றன. அவர்களுடன் நாம் பணியாற்றுவோம் என்று தெரிவித்தார்.

இதேவேளை, ஜகத் ஜயசூரியவிற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இனப்படுகொலையை தலைமை தாங்கிய நடத்திய சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறியுள்ளார்.

ஆனால் அதேவேளை, ஜகத் ஜயசூரிய தொடர்பாக முறையான விசாரணை ஒன்றை ஆரம்பித்தால் அதுதொடர்பாக சாட்சியாக முன்வந்து நீண்ட விளக்கத்தை அளிப்பேன். அவரது செயற்பாடுகளுக்கு அன்றிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஆட்சியாளரின் ஆசிர்வாதம் இருந்தமைக்கு என்னிடம் தகவல் இருக்கின்றது என சிறீலங்காவின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் பீல் மார்ஷல் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். தனிப்பட்ட பகை காரணமாகவே இவர் இக்கருத்துக்களை உதிர்த்துள்ளார். எனினும், ஒட்டுமொத்த சிங்கள ஆட்சியாளர்களும் ஜகத் ஜயசூரியவிற்கு ஆதரவாக நிற்கும் நிலையில், இவர் மட்டும் எதிராக நிற்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

கூட்டுப்படைகளின் தலைமை அதிகாரி அட்மிரல் ரவிந்திர விஜேகுணவர்தன மற்றும் புதிய கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சின்னையா ஆகியோரை கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே சரத் பொன்சேகா ஜகத் ஜயசூரியவிற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எனக்கு பின்னர் இராணுவ தளபதியாக ஜகத் ஜயசூரிய நியமிக்கப்படுவார் என நான் எதிர்பார்க்கவில்லை. அவர் அந்த பதவிக்கு பொருத்தமானவர் அல்ல. அவரை தளபதியாக்க வேண்டாம் என மகிந்த ராஜபக்சவிடம் தெரிவித்தேன். பல சிரேஷ்ட அதிகாரிகள் இருக்கும் நிலையிலேயே அவர் இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டார். மகிந்த ராஜபக்சவும் கோத்தபாய ராஜபக்சவும் அவர்களின் தேவைக்கே அவரை தளபதியாக்கினார்கள். அதன் பெறுபேறாகவே என்னை இழுத்துக்கொண்டு சிறையிலடைக்க அவர் தலைமைத்துவம் வகித்தார்.

வவுனியாவில் கட்டளைத்தளபதியாக ஜகத் ஜயசூரிய செயற்பட்டார். ஆனால் அவர் யுத்த களத்தில் ஈடுபடவில்லை. இராணுவத்துக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதே அவரின் பொறுப்பாக இருந்தது. அந்த காலப்பகுதியில் அவர் சில குற்றச்செயல்களில் ஈடுபடுவதாக எனக்கு தகவல் கிடைத்தது. அதாவது, யுத்தத்தின்போது கைதுசெய்யப்படுட்டு அவருக்கு கீழ் இருப்பவர்களுக்கு எதிராக குற்றம் செய்வதாக தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அவர் இராணுவ தளபதியான பின்னரும் அந்த குற்றச் செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொண்டார் என்றே நான் நினைக்கின்றேன். அவரது குற்றங்கள் தொடர்பாக என்னிடம் தகவல்கள் இருக்கின்றன. முறையான விசாரணை ஒன்றை ஆரம்பித்தால் அப்போது அதுதொடர்பாக சாட்சியாக முன்வந்து நீண்ட விளக்கத்தை அளிப்பேன்.

அதனால் ஜகத் ஜயசூரிய என்னிடமிருந்து இவ்வாறான பதிலை எதிர்பார்த்திருக்கமாட்டார். அவர் குற்றம் செய்திருந்தமையை நான் அறிந்திருந்தேன். இது தொடர்பாக விசாரணை ஒன்றை நடத்த ஆரம்பித்தேன். அதன் முதற் கட்டமாக அவரது பிரதான உதவியாளராக இருந்த லெப்டினன் ஒருவரை கைதுசெய்தேன். அந்த விசாரணைகளை ஆரம்பிக்கும்போது என்னை இராணுவ தளபதியில் இருந்து நீக்கினார்கள்.

எனவே ஜகத் ஜயசூரியவின் குற்றங்களுக்கு அன்றிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஆட்சியாளரின் ஆசிர்வாதம் கிடைத்தமைக்கு என்னிடம் தகவல் இருக்கின்றது. அதனால் குற்றமிழைத்த இராணுவத்தினருக்கு தண்டனை பெற்றுக்கொடுப்பதன் மூலம் 2 இலட்சம் இராணுவத்தினரின் நற்பெயரை பாதுகாத்துக்கொள்ளலாம் என்றார்.

சரத் பொன்சேகா தெரிவித்து குற்றச்சாட்டுக்களை அடியோடு மறுத்துள்ளார் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய. போரின் இறுதிக் கட்டத்தில் போர் நடவடிக்கைகள் அனைத்திலிருந்தும் பொன்சேகா தன்னை விடுவித்த பின்னர் போர்க் குற்றங்களில் தான் எப்படி ஈடுபடமுடியும் என்று கேள்வி எழுப்பியுள்ளார். அத்துடன், பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையிலிருந்து படையினரைக் காப்பாற்றியுள்ளோம், மின்சாரக் கதிரையிலிருந்து எல்லோரையும் காப்பாற்றியுள்ளோம் என்று ஆட்சியாளர்கள் கூறினாலும், பன்னாட்டு போர்க்குற்ற விசாரணை அச்சுறுத்தல் இன்னும் நீங்கவில்லை. இந்த அச்சுறுத்தல் எதிர்காலத்தில் இருக்காது என்ற உத்தரவாதத்தை ஐக்கிய நாடுகள் சபையிடம் இருந்து அரசு பெற்றுக்கொள்ளவேண்டும் என ஜெனரல் ஜெகத் ஜயசூரிய அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

எது எவ்வாறாயினும் சிங்கள இனப்படுகொலையாளிகள், தமிழர்கள் மீதான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுக்களுக்கு அஞ்சி தலைதெறிக்க ஓடத் தொடங்கியிருப்பது தமிழரின் நீதிக்கான பயணத்தில் முதல் வெற்றிதான். அத்துடன், போர்க் குற்றங்களிலும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட படைத்தளபதிகளை வெளிநாடுகளின் தூதுவர்களாக உயர்பதவிகளில் அமர்த்திக் கௌரவித்து, இராஜதந்திரிகளுக்கான பாதுகாப்புடன் உலாவரவைத்த சிறீலங்காவிற்கு விழுந்துள்ள முதல் பேரிடி இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** "சிங்கள பௌத்த பெரும்பான்மையினர் மட்டுமல்லாது தமிழ் முஸ்லிம் மக்களும் சம உரிமைகளை பெற்று வாழவேண்டும் என நினைக்கும் ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க" என சிறீலங்கா அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** உங்களுக்கென்று ஒரு கொள்கை இல்லையா மனோ கணேசனே..?

★★★★ ★★★★

**செய்தி:-** "இந்தியா, சீனா, பங்களாதேஷ் போன்ற உலக பலவான்களான நாடுகளின் விளையாட்டு களமாக இலங்கையை மாற்ற அரசாங்கம் முயற்சித்து வருகின்றதென" சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** உலகப் பலவான்களின் விளையாட்டுக்களமாக இலங்கை எப்போதோ மாறிவிட்டதென்பது வீரவன்சவுக்குத் தெரியாதோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** "புனர்வாழ்வு அமைச்சர் எமக்குத் தருவதாகக் கூறிய 148 மில்லியன் ரூபாவையும் உடனடியாகத் தரும் பட்சத்தில் எம்மிடமுள்ள காணிகளை விடுவிப்போம்" என சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** மனிதர்களைப் பிடித்துவைத்துக் கப்பம் கோரினார்கள். இப்போது மண்ணையும் பிடித்துவைத்துக் கப்பம் கோருகின்றார்களே..?

★★★★ ★★★★

**செய்தி:-** "இலங்கையை மற்றுமொரு சிங்கப்பூராக மாற்றுவோம்" என சிறீலங்காவிற்கான சீன தூதுவர் யூ யான் லியாங் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** ஏன் ஹொங்கொங், தாய்வான் போல் மாற்றும் எண்ணம் இல்லையா..?

★★★★ ★★★★

**செய்தி:-** "தியாகி திலீபனின் நினைவு தூபியை மீளக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என வடமாகாண சபை அவை தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.



**எழும் கேள்வி:-** யாழிலுள்ள இந்தியத் தூதரகத்திடம் அனுமதி பெற்றுவிட்டாராமோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** 'இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலங்களை மீட்டுத் தருவதாக' சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதிமொழி வழங்கியுள்ளார்.

**எழும் கேள்வி:-** (பதவி) இருக்கும்போது தராதவர், இல்லாதபோதா தரப்போகின்றார்..?

★★★★ ★★★★

**செய்தி:-** "நாட்டின் தற்போதைய நிலையில் எதிர்காலச் சந்ததியினர் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை வருமென" மகிந்தவின் சகோதரான சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** ஆயுதம் ஏந்துவதற்கு சிங்கள ஆட்சியாளர்கள்தான் காரணம் என்பதை சமல் ராஜபக்சவும் ஒத்துக்கொண்டுவிட்டாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** "பொறுப்புக்கூறலில் இருந்து அரசு பின்வாங்கவில்லை. அதற்குரிய ஏற்பாடுகள் சிறீலங்காவிற்கே உரிய பாணியில் மெதுவாக நிறைவேற்றப்படும்" என அந்நாட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** மெதுவாக என்றால்..? இன்னொரு நூற்றாண்டு காத்திருக்கவேண்டுமோ...?

★★★★ ★★★★

**செய்தி:-** புதிய அரசமைப்பு தற்போது தேவையில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேரடியாகவே தெரிவித்து, புதிய அரசமைப்புக்குத் தனது ஆதரவு கிட்டாது என்பதை வெளிப்படுத்தியுள்ளாராம் சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

**எழும் கேள்வி:-** பிறகெதற்கு மகிந்தவோடுதான் கூட்டுச்சேருவன் என்று சம்பந்தர் அடம்பிடிக்கிறாராம்..?

## 16,930 கருக்கலைப்பு மாத்திரைகள் சிக்கின!

சுமார் 2.3 மில்லியன் ரூபாய் பெறுமதியான 16,930 கருக்கலைப்பு மாத்திரைகள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்கப்பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்திலிருந்து வந்த இந்தியப் பிரசையிடமிருந்தே, மேற்படி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. விமான நிலையத்தில், கிரீன் செனல் வழியூடாக, வெளியேறுவதற்கு முயன்ற அவரை, சந்தேகம் கொண்ட அதிகாரிகள், சோதனைக்கு உட்படுத்திய போதே, அவரிடமிருந்து மேற்படி மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.



கொழும்பு, கோட்டை மற்றும் மருதானையில் உள்ள தெரிவு செய்யப்பட்ட தனியார் மருந்தகங்கள் ஊடாக, அதிகூடிய விலையில் விற்பனை செய்துவிட்டு, நாட்டிலிருந்து மிகவிரைவாக வெளியேறிவிடுவதற்கு, சந்தேகநபர் திட்டமிட்டிருந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என்றும், அதிகாரிகள் தெரிவித்தனர். சந்தேகநபருக்கு ஒரு இலட்சம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அந்த மாத்திரைகள் யாவும் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

## பிரான்ஸ் காவல்துறை அதிகாரி சிறீலங்காவில் கைது!

தனது மகனுக்கு பரிசு வழங்குவதற்காக எருமை மாட்டின் மண்டை ஓடு மற்றும் கொம்புகளையும் சட்டவிரோதமாக கொண்டுசெல்ல முயற்சித்த பிரான்ஸ் காவல்துறை அதிகாரி ஒருவர் கடந்த 22ம் திகதி சிறீலங்காவில் கைது செய்யப்பட்டார். கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க பிரிவு தெரிவித்துள்ளது. சந்தேக நபரின் பயண பை ஸ்கான் இயந்திரம் ஊடாக பரிசோதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த நபர் விமான நிலைய சுங்க பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் பிரான்ஸ் நாட்டில் பிரதான உயர் காவல்துறை அதிகாரியாக செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. மகனின் கோரிக்கைக்கமைய இவற்றைக் கொண்டு செல்ல முயற்சித்துள்ளதாகவும், கொழும்பில் இருந்து நெருக்கமானவர் ஊடாக இவற்றைக் கொள்வனவு செய்துள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக சுங்க பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## மூத்த ஊடகவியலாளர் சாவு

மூத்த ஊடகவியலாளர் சின்னையா குருநாதன் கடந்த முதலாம் திகதி சாவடைந்துள்ளார். சில காலமாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் தனது 79வது வயதில் சாவடைந்தார். சுமார் 55 வருடத்திற்கு மேலாக ஊடக சேவையாற்றிய இவர் தமிழ், ஆங்கில நாளிதழ்களுடன் இணையத்தளங்களிலும் ஆக்கங்ளை வெளியிட்டுள்ளார். யுத்த காலப் பகுதியில் பல நெருக்கடிகளைச் சந்தித்து தனியே ஊடகப்பணியை மட்டும் முழுநேரத்தொழிலாக நம்பி வாழ்க்கை நடத்தியவர் என்ற பெருமையும் இவருக்குண்டு. இதனால் அதிக காலம் பொருளாதார நெருக்கடியுடன் பணிசெய்த இவர், பல விருதுகளைப்பெற்று வாழ்நாள் சாதனையாளராகவும் திகழ்ந்தார். அன்னாரின் இறுதி நிகழ்வுகள் திருகோணமலை பிரதான வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

# தமிழ் இனப்படுகொலையைத்...

10 நூற்றாண்டுகளாக ஒரு முஸ்லிம் இராச்சியமாக, முஸ்லிம்கள் அப்பிராந்தியத்தின் ஆட்சியை தீர்மானிப்பவர்களாக இருந்துவந்தாக ரோஹிங்கிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தங்கள் பூர்வீக நிலம் என அப்பகுதியில் வாழும் மக்கள் கூறுகின்றபோதும், இவர்கள் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் வங்காளத்தில் (இப்போது வங்களாதேஷ்) இருந்து வந்து குடியேறியவர்கள் எனவும், அல்லது குறைந்தது 1948 மியன்மார் (பர்மா) விடுதலைக்குப் பின்னரும், 1971 வங்கதேச விடுதலைப் போருக்குப் பின்னரும் அங்கு குடியேறியவர்கள் எனவும் மியன்மார் ஆட்சியாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர். இது ஓரளவிற்கு உண்மை எனும்போதும் அங்கு பல நூற்றாண்டுகளாக வாழும் மக்களும் அதிகமாகவே இருக்கின்றார்கள். அவர்கள் வாழும் ராக்கைன் பிராந்தியமானது (இப்போது அரகான் என இப்பிராந்தியம் அழைக்கப்படுகின்றது - தமிழ்க் கிராமங்களுக்கு சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்வதுபோல் இப்பிராந்தியத்தின் பெயர் மாற்றப்பட்டுவிட்டது) சுமார் 12 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையை கொண்டது. இந்த மக்களை மியன்மாரைவிட்டு விரட்டும் வேலையை மியன்மாரின் பௌத்த இராணுவ ஆட்சியாளர்கள் மேற்கொண்டார்கள்.

1982 இல் ஜெனரல் நீ வின்னின் அரசாங்கம் பர்மிய குடியுரிமைச் சட்டத்தை இயற்றியது. இந்த சட்டம் வந்தேறுகுடிகள் என ரோஹிங்கியர்களைக் குற்றம்சாட்டி அவர்களின் குடியுரிமையை மறுத்தது. எனவே, பெரும்பாலான ரோஹிங்கிய மக்கள் நாடற்றவர்களாயினர். இது இலங்கைத் தீவில் 10 இலட்சம் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையை சிங்கள ஆட்சியாளர்கள் 1964ம் ஆண்டு பறித்ததன் இன்னொருவடிவம்தான்.

குடியுரிமையைப் பறித்ததுடன் மட்டும் அவர்கள் நின்றுவிடவில்லை. ரொஹிங்கிய மக்கள் தம்மை ரொஹிங்கியர் என்று அழைப்பதையே தடை செய்தனர். வாக்குரிமை, கல்வி கற்கும் உரிமை, ஏன் ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசம் செல்வதற்கான உரிமையும் மறுக்கப்பட்டது. மியான்மர் இராணுவத்தின் அனுமதி எடுத்தே வெளியில் செல்லவேண்டும். அதுவும் நாடுவிட்டு நாடு செல்வதற்கும் அவர்களுக்கு கடவுச்சீட்டுகூட கிடையாது.

மீறுபவர்கள் வன்முறைக் கரம்கொண்டு அடக்கப்பட்டனர். மியன்மார் இராணுவமும், சில பௌத்த மதக் குழுக்களும் ரோஹிங்கிய மக்கள் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது. ரோஹிங்கிய மக்களை, மாறி மாறி வந்த பர்மிய இராணுவ அரசுகளும், ஏன் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து, ஜனநாயக ஆட்சி மலர்ந்திருந்தாலும் அந்த அரசுகளும் அம்மக்களை இனவழிப்பிற்கு உட்படுத்தியும் துன்புறுத்தியுமே வருகின்றன. அதுவும் உலக நாடுகளால் புகழப்படும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்ட தலைவர் ஆங் சான் சூகியின் ஆட்சியில்தான் தற்போது இத்தனை கொடூரமான மனிதப் படுகொலைகள் அங்கு அரங்கேறிக்கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

உலகளவில் அதிகளவில் துன்புறுத்தப்படும் மக்கள் இனம் ரோஹிங்கிய என சர்வதேச ஊடகங்களும், மனித உரிமை அமைப்புக்களும் சுட்டிக்காட்டும் அளவிற்கு இவர்கள் மீதான கொடூரங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. சிறீலங்காப் படைகளிடம் தமிழர் தரப்பு எதிர்கொண்ட படுகொலைகள், காணாமல் போதல்கள், காரணமின்றி சிறைவைத்தல், சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் போன்ற அத்தனை அவலங்களையும் இந்த மக்களும் சந்தித்து வருகின்றார்கள். இவற்றைவிட கைது செய்யப்படும் இவர்கள் கொத்தடிமைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளார்கள். இந்த இனப்படுகொலையில் இருந்து தப்பித்து இலங்கைவந்த ரோஹிங்கிய முஸ்லீம் பெண் ஒருவர் சிறீலங்கா காவல்துறையினரால் அண்மையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட கொடுமையும் நடந்தேறியது இங்கு குறிப்பிட்டு கூறப்பட வேண்டியது.

மியான்மரில் நீண்ட காலமாக சித்திரவதைக்குள்ளாகும் இனக்குழுவாக ரோஹிங்கிய இருக்கின்றது. 1990ற்கு பின்னர் தொடர்ச்சியாக ரோஹிங்கிய மக்களின் இடம்பெயர்வு அதிகரித்து வருகின்றது. ஏராளமான படுகொலைகளைச் சந்தித்த இந்த மக்களில் இலட்சக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்து வங்காளதேஷ், தாய்லாந்து, இலங்கை, இந்தியா, மலேசியா உட்பட பல நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்திருக்கின்றார்கள். இதுவரை சுமார் 3 இலட்சம் பேர் மியன்மாரிலிருந்து வெளியேறிவிட்டதாக மனித உரிமை அமைப்புகள் கூறுகின்றன. இவர்களில் வங்கதேசத்தில் மட்டும் சுமார் 1 இலட்சம் மியன்மார் அகதிகள் இருக்கின்றனர்.

அத்தனை இலகுவாக இவர்கள் தப்பித்து வேறு நாடுகளுக்கு சென்றுவிடமுடியாது. தப்பிச்செல்ல அருகிலுள்ள வங்களாதேசம் தான் ஒரே வழி எல்லை. அதுவும் தரை வழியல்ல, மிகவும் குறுகிய எல்லை கொண்ட குறுக்கே நிற்கும் நாப் நதியை கடக்கவேண்டும். கடக்க முயன்ற பலர் படகுகள் கவிழ்ந்தும், மியன்மார் படைகளின் தாக்குதல்களிலும் நதிகளிலேயே கொல்லப்பட்டுள்ளனர். இவற்றையும் மீறித்தான் இத்தனை இலட்சம் மக்கள் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தப் படுகொலைகளில் இருந்து தமது மக்களைப் பாதுகாப்பதற்கு 2016ம் ஆண்டு ஒக்டோபர் அளவில் அட்ட உல்லா என்பவர் தலைமையில் தோற்றம்பெற்றது 'தி அரகான் ரோஹிங்கிய சால்வேசன் ஆமி (The Arakan Rohingya Salvation Army)' என்ற பெயரில் ஆயுதம் தாங்கிய இயக்கம். இந்த இயக்கத்திற்கு வங்காளதேசின் ஆதரவு இருப்பதாக மியன்மார் அரசால் குற்றம்சாட்டப்படுகின்றது. அண்




மையில் இவர்களால் மியன்மார் காவல்நிலையம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. வங்கதேசப் பயங்கரவாதிகளே தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம்சாட்டிய மியன்மார், தற்போது ரோஹிங்கிய முஸ்லீம்கள் மீதான இனஅழிப்பை மீண்டும் பாரியளவில் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

தங்கள் நாட்டு பிரசைகள் யாரும் எல்லை தாண்டி தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை என்று வங்காள தேசம் மறுத்ததுடன், இரு நாடுகளும் இணைந்து எல்லைப்புறத்தில் ரோந்துபணி மேற்கொள்வோம் என்றும் அழைப்பு விடுத்தது. ஆனால் அதனை ஏற்கமறுத்து, மியன்மார் தொடர்ச்சியாக ரோஹிங்கிய முஸ்லீம்கள் மீது தாக்குதலை நடத்திவருகின்றது. ரோஹிங்கிய முஸ்லீம்கள் வாழும் பகுதியில் வாழ்ந்த ஏனைய மதத்தவர்களை இராணுவம் அங்கிருந்து பாதுகாப்பாக வேறு பகுதிகளுக்கு நகர்த்திவிட்டே இந்தத் தாக்குதலை கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

இதுவரை 400 மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாக வங்காளதேசம் கூறியுள்ளது. ஆனாலும் அங்கிருந்து தப்பிவரும் மக்களை அரவணைத்துக்கொள்ள வங்கதேசம் மறுத்துள்ளது. ஆற்றைக்கடக்க எல்லையில் நிற்கும் மக்களை மியன்மார் இராணுவம் தாக்குகின்றது. ஆற்றைக் கடந்து மறுகரைக்குச் சென்றால் அங்கு நிற்கும் வங்காளதேசப் படை அவர்களை மியன்மாருக்கும் மீண்டும் அடித்து விரட்டுகின்றது. அங்கிருந்து விரட்டப்பட்டு திரும்பிவரும் மக்களை ஆற்றில் வைத்தே மியன்மார் உலங்குவானூர்திகள் சுட்டுக்கொல்வதாக வங்காளதேச எல்லைக் காவல் படைத் தளபதி அபுல் ஹோசைன் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கின்றார்.

எனினும் வங்காளதேசப் படைகளின் கண்களில் மண்ணைத்தூவி கடந்த ஒரு வாரத்திற்குள் சுமார் 60,000 ரொஹிங்கியாக்கள் பங்களாதேசின் அகதி முகாம்களுக்கு வந்தடைந்துள்ளதாக மனித உரிமை அமைப்புக்கள் கூறுகின்றன.

"ரோஹிங்கிய முஸ்லீம்களின் அவலநிலையில் உலகம் குருடாகவும், செவுடாகவும் உள்ளது" என குற்றம்சாட்டியுள்ள துருக்கி அதிபர் எர்டோகன், "மியன்மாரில் சிறுபான்மையினராக இருக்கும் ரோஹிங்கிய இஸ்லாமியர்களுக்கு உதவி செய்ய சர்வதேச சமுதாயம் களமிறங்க வேண்டும்" என்றும் வலியுறுத்தியுள்ளார்.

தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டபோது சிங்களப் பேரினவாத அரசுடன் சேர்ந்து நின்று இயங்கிய இலங்கை முஸ்லீம் தலைமைகள் தற்போது ரோஹிங்கிய முஸ்லீம்கள் மீதான படுகொலைக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றன. இலங்கை முஸ்லிம்கள் சார்பில் இந்த விடயததை ஐ.நா.சபைக்கும் எடுத்துச் சென்றுள்ளனர். சிறீலங்காவின் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் ஐ.நா. சபையிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, "மியன்மாரில் சித்திரவதைகளுக்கும் இனச்சுத்திகரிப்புக்கும் உள்ளாகிவரும் ரோஹிங்கிய முஸ்லீம்களுக்கு அடைக்கலம் கொடுக்க இலங்கை உட்பட உலக நாடுகள் முன்வர வேண்டும்" என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் வேண்டுகோள் விடுத்துள்ளார். "பாரிய மனித உரிமை மீறல்களும் சின்னஞ்சிறு பாலகர்கள் முதல் கர்ப்பணித் தாய்மார் வரை பாரபட்சமின்றி கொன்று குவித்து வரும் மியன்மார் அரசு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ள சிறீலங்கா அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும்" கிழக்கு முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் வலியுறுத்தியுள்ளார்.

மியன்மாரிலுள்ள ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது அந்த நாட்டு இராணுவம் நடாத்திவரும் காட்டுமிராண்டித்தனமான, எல்லைமீறிய வன்முறைகளை வன்மையாக கண்டித்துள்ள அகில இலங்கை மக்கள் கொங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிஷாட் பதியுதீன், சர்வதேச சமூகமும், ஐ.நாவும் மியன்மார் முஸ்லிம்கள் மீது இடம்பெற்றுவரும் திட்டமிட்ட இனச்சுத்திகரிப்பை கண்டும் காணாததுபோல் இருப்பது வேதனையானது எனவும் கவலை வெளியிட்டுள்ளார். மியன்மார் வன்முறைகள் குறித்து நடவடிக்கை எடுக்குமாறு இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

இதேவேளை, வங்கதேச அகதி முகாமை அடைந்துவரும் அகதிகள் சொல்லும் கதைகள் மனித இதயங்களையே உலுக்கக்கூடியவை. இவர்களின் பயங்கர அனுபவங்களை ஊடகங்கள் வெளியிட்டுவருகின்றன. 70 வயதான முஹமது சபர் என்பவர், ஆயுதமேந்திய பௌத்த கும்பல் ஒன்று தனது இரு மகன்களை வயல் நிலம் ஒன்றில் வைத்து சுட்டுக் கொன்றதாகவும், அவர்கள் தனக்கு மிக நெருக்கத்தில் இருந்து சுட்டதால் தனது காதுகள் இப்போது கேட்பதில்லை என்று கூறியுள்ளார்.

"அவர்கள் இரும்பு கம்பிகள் மற்றும் கம்புகளுடன் வந்து எம்மை எல்லையை நோக்கி விரட்டினார்கள் என்று 61 வயதான அமிர் ஹொஸைன் என்பவர் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு கூறியுள்ளார். இவ்வாறு அங்கு வந்து சேர்ந்தவர்களின் கண்ணீர்கதை, இனப்படுகொலையில் இருந்து உயிர்தப்பித்து 2009ம் ஆண்டு மே மாதம் முள்வேலி முகாமிற்குள் வந்து சேர்ந்த தமிழர்களின் நிலைக்கு ஒப்பானது.

ரோஹிங்கிய இனத்தவர் மீதான தாக்குதலைக் கண்டித்து வங்கதேசம், பாகிஸ்தான், இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளில் பல்வேறு அமைப்புகள் போராட்டங்களை நடத்துகின்றன. ஆனால் அவை பெரிதாக யார் காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

இனப்படுகொலைக்கு உள்ளாகி நின்றபோது, இந்த உலகில் குரல் கொடுப்பதற்கும் தடுத்து நிறுத்துவதற்கும் யாருமற்ற அநாதைகள் போல் தமிழினம் நின்றது. ஆனால், ரோஹிங்கிய முஸ்லீம் மக்களும் ஆதரவாக குரலெழுப்ப நாடுகளும், அமைப்புக்களும் கட்சிகளும் எனப் பல தரப்பும் இருந்தும் அந்த மக்களின் இனஅழிவைத் தடுக்கமுடியவில்லை. தமிழ் மக்களைப் போல் இந்த உலகின் கண் முன்னே மிகக்கொடூரமாக அவர்களும் செத்தழிந்துகொண்டிருக்கின்றார்கள்.

# தகர்க்கப்பட்ட நினைவுத்தூபிகளும் செருகூட்டப்பட்ட கல்லறைகளும்

## தமிழினத்திற்குச் சொல்லும் செய்தி என்ன..?

**செந்தூரன்**

இலங்கைக்கு நான்கு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்ட இந்திய இராணுவத்தின் தென்பிராந்தியத் தளபதி லெப்.ஜெனரல் பி.எம்.ஹரிஸ், தென்பிராந்திய தலைமையக நடவடிக்கை தளபதி மேஜர் ஜெனரல் வி.கே.சிங், லெப்.ஜெனரல் ஹரிசின் இராணுவ செயலர் கேணல் கேளசல் ஆகியோர் அடங்கிய குழுவினர் சிறீலங்கா இராணுவத் தலைமையகத்துக்குச் சென்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாடினர். இரண்டு நாடுகளின் இராணுவங்களுக்கும் இடையிலான பயிற்சி ஒத்துழைப்புகளை அதிகரிப்பது குறித்து இந்தப் பேச்சுக்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. சிறீலங்கா இராணுவம் அண்மைய ஆண்டுகளில் நல்ல அனுபவங்களைப் பெற்றிருப்பதாகவும், சிறீலங்காவின் கொமாண்டோக்களிடமும், சிறப்புப்படையினரிடமும் பயிற்சி மையங்களிலும் கூடுதலான இந்திய இராணுவ அதிகாரிகளை அனுப்பி பயிற்றுவிக்க விரும்புவதாகவும் ஜெனரல் ஹரிஸ் இதன்போது தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் கடந்த (ஓகஷ்ட்) 19ம் திகதி, தளபதி லெப்.ஜெனரல் ஹரிஸ் தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு பயணம் செய்து பல்வேறு இடங்களை பார்வையிட்டதோடு, கோப்பாயில் உள்ள இந்திய இராணுவத்தின் கல்லறைக்குச் சென்று இராணுவ மரியாதைச் செலுத்தியிருக்கின்றனர்.

கோப்பாய் தெற்கு இராஜவீதி கல்வியங்காடு பகுதியில் உள்ள வெள்ளவாய்க்கால் பிராயடியில் இந்திய இராணுவ அதிகாரியின் கல்லறை ஒன்று அமைந்துள்ளது. 1987ம் ஆண்டு காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற போரில், அங்கு அமைந்திருந்த இந்திய இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி கப்டன் பாத் வால் உயிரிழந்திருந்திருந்தார். கடுமையான போர் காரணமாக அவரது வித்துடல் இந்தியாவிற்கு எடுத்துச் செல்லமுடியாமல், அவர் உயிரிழந்த இடத்திலேயே புதைக்கப்பட்டது. அங்கு பின்னர் இந்தியப் படையினர் ஒரு கல்லறையையும் அமைத்திருந்தனர்.

தமிழர்களின் தாயகத்தை ஆக்கிரமிக்கும் போது மாவீரர்களின் கல்லறைகளை சிறீலங்கா இராணுவம் தகர்த்தெறிவதுபோல், இந்திய இராணுவத்தினர் வெளியேற்றத்தின் பின்னர் இந்தக் கல்லறையை விடுதலைப் புலிகள் தகர்த்தெறியவில்லை. சிறீலங்கா இராணுவ முகாம் தாக்குதல்களுக்கு போராளிகள் செல்லும்போது, அந்த முகாம்களில் அமைக்கப்பட்டிருக்கும் கல்லறைகளையோ, நினைவுதூபிகளையோ தாக்கக்கூடாது என்று போராளிகளுக்கு இறுக்கமான கட்டளையைப் பிறப்பிக்கும் தமிழீழத் தேசியத் தலைவர், இந்திய இராணுவம் தமது படையினர் நினைவாக தமிழர் தாயகத்தில் அமைத்திருக்கும் எந்தவொரு நினைவிடத்தையும் அழிக்க அனுமதிக்கவில்லை. அதனால்,

யாழ்குடா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் விடுதலைப் புலிகள் இந்தக் கல்லறையை அழிவடையாது பாதுகாத்துப் பேணியிருந்தனர். சிறீலங்கா இராணுவத்தின் கைகளுக்குள் யாழ்குடா சென்றதன் பின்னரான கடந்த 22 வருடங்களாக அக்கல்லறை பராமரிப்பற்று சிதைவடைந்து போயிருந்தது. இந்நிலையில்தான் இந்திய இராணுவத் தளபதிகளின வருகைக்கு முன்னதாக அவசர அவசரமாக சிறீலங்கா இராணுவத்தினர் அதனைப் புனரமைத்திருந்தனர்.

தொடர்ச்சி 16ம் பக்கம்













1. பராமரிப்பின்றியிருந்த இந்திய இராணுவத் தளபதியின் கல்லறை
2. புனரமைக்கப்பட்ட இந்திய இராணுவத் தளபதியின் கல்லறையில் அஞ்சலி செலுத்தப்பட்டபோது.
3. தகர்க்கப்பட்ட தியாகி திலீபனின் நினைவுதூபி
4. தகர்க்கப்பட்ட பன்னிரு போராளிகளின் நினைவுதூபி
5. அழிக்கப்பட்ட வல்வைப் படுகொலை நினைவிடம்.




### தொடருந்துத் திணைக் களம் தனியார் மயம்?

தொடருந்துப் பணியாளர்கள் தொடர்ந்து பணிப் புறக்கணிப்புகளை முன்னெடுத்தால் தொடருந்துத் திணைக்களமானது தனியார் மயப்படுத்தப்படும் என சிறீலங்காப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா எச்சரித்துள்ளார். சிறந்த தொடருந்துச் சேவைகளுக்காக சகல தொழிற்சங்கங்களும் புதிய பணிப்பாளருக்கு தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மொனராகலையில் கடத்தப்பட்ட பிக்கு யாழில் நிர்வாணமாகமீட்பு

மொனராகலையில் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் 17 வயதுடைய இளம் பிக்கு ஒருவர் யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்திற்கருகில் மீட்கப்பட்டுள்ளார். ஆடைகளின்றிக் காணப்பட்ட இவரை அவதானித்த மக்கள் அவருக்கு ஆடைகளை வழங்கி, அங்குள்ள சிறீலங்கா நாட்டுக் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர். குறித்த பிக்கு மொனராகலையில் வைத்து கடத்தப்பட்டுள்ளார். அவ்வாறு கடத்தப்பட்டவர் தொடர்பில் எந்த விதமான தகவலும் தெரிந்திருக்கவில்லை. இந்த நிலையிலேயே இவர் யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்துக்கு அருகில் கைவிடப்பட்டுள்ளார். பிக்குவை அழைத்துச் சென்ற காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

### பொதுமன்னிப்பு காலம் நிறைவு

சட்டவிரோதமான முறையில் தென் கொரியாவில் தங்கியுள்ள இலங்கைப் பணியாளர்களுக்கு அந்த நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலம் எதிர்வரும் 10ம் திகதியுடன் நிறைவடைகிறது. கடந்த யூலை மாதம் 10ம் திகதி தொடக்கம் பொதுமன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டிருந்தது. சிறீலங்கா வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தகவலின்படி குறித்த காலப் பகுதியில் நாடு திரும்பும் பணியாளர்கள் தொடர்பில் சட்டநடிக்கை எடுக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஒரு இலட்சம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி

அடுத்த மாதம் செப்டம்பர் நடுப்பகுதியில் 70 ஆயிரம் மெற்றிக்தொன் நாட்டரிசியும், அதன் பின்னர் 30 ஆயிரம் மெற்றிக்தொன் சம்பாவும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளதாக சிறீலங்காவின் கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் ரி'ாத் பதியுதீன் கூறியுள்ளார். 70 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கத்திற்கும், இந்திய தனியார் துறையினருக்குமிடையிலே கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் ஒரு மெற்றிக்தொன் அரிசியை 445 டொலருக்கு இந்திய தனியார் துறையினர் வழங்குவதாக அவர் தெரிவித்தார். அத்துடன் 30 ஆயிரம் மெற்றிக்தொன் சம்பா அரிசிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என்றும், குறித்தளவு அரிசியும் இந்தியாவின் தனியார் துறையிடம் இருந்தே, ஒரு மெற்றிக்தொன் 475.5 டொலர் விலைக்கு பெறப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். அடுத்தமாதம் முடிவுக்குள் ஒரு லட்சம் மெற்றிக்தொன் அரிசியை இலங்கை இறக்குமதி செய்வதன்மூலம் அரிசித் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்திக்க முடியுமெனவும் அரிசியின் விலையை வர்த்தகர்கள் மனம்போன போக்கில் அதிகரித்து விற்பதை நிறுத்த முடியுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.




**கேள்வி:-** படை வீரன், விளையாட்டு வீரன் இவர்களில் யார்தான் சிறந்த வீரன்?





எம்.மதியழகன் இலண்டன் பிரித்தானியா

**பதில்:-** படை வீரன் கையில் எப்போதும் ஆயுதம் இருக்கும். ஆயுதத்துடன் வரும் எதிரியையோ அல்லது ஆயுதமில்லாத ஒருவரையோ எதிர்கொள்வது படை வீரனுக்குச் சுலபம். அதற்காகப் படை வீரனை குறைவாக மதிப்பிடமுடியாது. ஆனாலும், விளையாட்டு வீரன் கையில் எந்தவித ஆயுதங்களும் (விளையாட்டுப் பொருள் ஆயுதமல்ல) இருப்பதில்லை. தனது உறுதியையும், தன் நம்பிக்கையை மட்டும் வைத்தே போராடி வெற்றி பெறுகின்றான். எனவே, படை வீரனைவிட விளையாட்டு வீரன்தான் ஒருபடி மேலே என்பது என் அபிப்பிராயாம்.

**கேள்வி:-** படித்தவருக்கா, பணம் படைத்தவருக்கா இப்போது இந்த உலகில் மரியாதை..?

புகழேந்தி சங்கர் செல்ரோன் பிரான்ஸ்

**பதில்:-** தென்கச்சி கோ.சுவாமிநாதன் சொன்ன ஒரு கதை. 'ஒரு பெரிய மனிதன். இந்த உலகத்தில் மிகவும் வசதியாக வாழ்ந்தான். ஒரு நாள் அவன் உலக வாழ்க்கையை முடித்துக் கொண்டு சொர்க்கத்துக்குப் போனான். அங்கே போன பிறகுதான் தெரிந்தது, சொர்க்கத்தின் வாசல் கதவு மூடி இருந்தது. மூடிய கதவின் முன்னால் போய் நின்றான். "இங்கே யாருமே இல்லையா?" என்று உரக்கக் கத்தினான். பதில் இல்லை. "நான் ஒரு பெரிய மனிதன் வந்திருக்கிறேன். கதவைத் திறந்து விடு!" சற்று நேரத்தில் சித்ரகுப்தன் அங்கே வந்தான். உடனே இந்தப் பெரிய மனிதன், தனது சட்டைப் பையிலிருந்து பத்து ரூபாயை எடுத்து அவன் கையில் திணித்தான். "இந்தா... இதை வெச்சுக்கோ... சீக்கிரம் கதவைத் திற... நான் உள்ளே போகணும்!"

சித்ரகுப்தன் சிரித்தான்... "இதெல்லாம் உங்கள் பூலோக நடைமுறைகள். இலஞ்சம் கொடுக்கறது, கதவைத் திறக்கச் சொல்றது... அதெல்லாம் இங்கே ஒண்ணும் எடுபடாது!"- "அப்படின்னா நான் எப்படி உள்ளே வருவது?" "சொர்க்கத்துலே நுழையறதுக்கான அனுமதிச் சீட்டு கொண்டு வந்திருக்கியா?" - "அனுமதிச் சீட்டா? அது எங்கே கிடைக்கும், சொல். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. வாங்கிக்கலாம்." - "அதைக் காசு கொடுத்து வாங்க முடியாது!" - "வேறே எப்படி வாங்கறது?" - "அடுத்தவர்களுக்கு ஏதாவது உதவி செய்தால்தான் அது கிடைக்கும்." - "என்ன சொல்றே நீ?"



"பூலோகத்துலே நீ செய்யுற புண்ணிய காரியங்கள்தான் சொர்க்கத்துலே நுழையறதுக்கான அனுமதிச் சீட்டு!" - "இப்ப நான் உள்ளே வர என்ன வழி?" - "பூலோகத்துலே நீ யாருக்காவது, ஏதாவது உதவி செய்திருக்கின்றாயா?" பெரிய மனிதன் ரொம்ப நேரம் யோசித்தான். பிறகு சொன்னான்: "ஒரு முறை ஒரு கிழவிக்கு 10 சதம் தானம் கொடுத்திருக்கேன். அப்புறம் இன்னொரு நாள் ஓர் அநாதைப் பையனுக்கு ஐந்து சதம் கொடுத்திருக்கேன்." - "கொஞ்சம் பொறு..." என்று சொல்லிவிட்டு சித்ரகுப்தன் உள்ளே போனான். கொஞ்ச நேரம் கழித்து வெளியே வந்தான். "உள்ளே போய் சொர்க்கத்தின் தலைவர்கிட்டே உனது கதையைச் சொன்னேன். அவர் உடனே உத்தரவு போட்டுட்டார்!" - "என்ன உத்தரவு?"

"அந்தப் பதினைந்து சதத்தை உன்கிட்டே திருப்பிக் கொடுத்துடச் சொன்னார்!" - "அப்புறம்...?" - "உன்னை நரகத்துக்கே அனுப்பி வெச்சுடச் சொன்னார்!" பெரிய மனிதன் மயங்கி விழுந்தான். ஆன்மிக உலகில் பயணம் செய்கிறவர்கள் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான பாடம்: காசு கொடுத்து சொர்க்கத்தை வாங்க முடியாது. ஆனால், கருணையைக் கொடுத்து அதைச் சுலபமாக வாங்க முடியும். என்று கூறினார்.

இது பணத்திற்கு மட்டும் பொருந்ததாது. பணமும் சரி, அறிவும் சரி அதனை மற்றவர்களுக்கு கொடுத்து பகிர்ந்துகொண்டால்தான் அதற்கும் அதனை வைத்திருப்பவருக்கும் மரியாதை.

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16




# எங்கும் திருட்டு எதிலும் திருட்டு!

இன்று புலம் பெயர் தேசங்கள் எங்கும் திருட்டினைத் தொழிலாகவே மேற்கொண்டுவருகின்றனர். குறிப்பாக தமிழர்கள் வாழும் தேசங்களில் தமிழர்களை இலக்குவைத்து திருட்டினை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் தமிழ் ஆலயங்களை அண்மித்த பகுதிகளில் குறித்த திருட்டுக் கும்பல்கள் கூடிநின்று தமிழர்களை இலக்கு வைத்துக் காத்திருந்துவிட்டு அவர்களின் நகைகள், கைத்தொலைபேசி மற்றும் கைப்பைகள் போன்றவற்றை அபகரித்துச் சென்று விடுகின்றனர். எவ்வளவு அவதானத்துடன் இருந்தபோதும், ஒரு சிறு இடைவெளியில் ஏற்படும் கவனக்குறைவு திருடர்களுக்கு திருடுவதற்கு சாதகமாக அமைந்து விடுகின்றது.

இதேவேளை, குறித்த கும்பல்கள் தமிழர்களின் வீடுகளையும் விட்டுவைப்பது இல்லை. தமிழர்களின் வீடுகளில் அவர்கள் இல்லாத வேளைகளை, அவர்களின் உறவினர்கள் கூட அறிந்திருக்கமாட்டார்கள். ஆனால், குறித்த திருட்டுக் கும்பல் தமிழர்களின் இருப்பை இலாவகமாக அறிந்துவிடுகின்றனர். சில இடங்களில் தமிழர்களே இதற்கு துணைபோவதும் உண்டு.



குறித்த திருட்டுக்கும்பல்களால் உடமைகளை இழந்து தவிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகம்.

அண்மையில் இடம்பெற்ற புலம்பெயர் தேச ஆலய தேர்த்திருவிழாக்களிலும் உடமைகளை இழந்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதான தகவல்களும் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், தமிழர் தாயகத்திலும் திருட்டினைத் தொழிலாகக்கொண்டு இயங்கும் கும்பல்கள், தனி நபர்கள் அதிகமாக உருவாகியிருப்பதாக தமிழர் தாயகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக வீடுகள், ஆலயங்கள், வர்த்தக நிலையங்கள், பொதுநிறுவனங்கள், வீதியில் செல்வோர் என அவர்களின் திருட்டுப் பட்டியல் தொடர்கின்றது.

இதற்கு சாட்சி பகர்வனவாய் கடந்தவாரம் யாழில் இடம்பெற்ற சில திருட்டுச் சம்பவங்களை குறிப்பிடலாம்.

கோப்பாய் காவல்துறை பிரிவுக்குட்பட்ட புதிய செம்மணி வேளாதோப்பு இருபாலை தெற்கு வீதியில் அமைந்துள்ள சிறி இருபாலை வேளாதோப்பு மதுரை மகா முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் கடந்தவாரம் திருட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஆலய களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த பெறுமதிவாய்ந்த ஒலிபரப்பி பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக, ஆலய நிர்வாகத்தினரால் கோப்பாய் காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தின் களஞ்சியசாலை சுவரில் காணப்பட்ட வெற்றிடத்தினாலேயே உட்புகுந்து பொருட்கள் திருடர்களால் திருடப்பட்டுள்ளன , மறுநாள் நடைபெறவிருந்த சங்காபிசேகப் பூசைக்கு ஆலயபூசகர் மற்றும் நிர்வாகத்தினர் பொருட்களை தயார்செய்த போதே ஒலிபரப்பி பொருட்கள் திருடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது.

**கடந்தவாரம் யாழ்.கோண்டாவில் பகுதியில் வீதியில் சென்ற பெண் ஒருவரிடம் சங்கிலியை அறுக்க முற்பட்ட இருவரில் ஒருவன் வசமாக மாட்டிக்கொள்ள மற்றவன் தப்பியோடிவிட்டான்.**

இச்சம்பம் தொடர்பில், கோப்பாய் காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, யாழ். கொக்குவில் கேணியடிப் பகுதியில், கடந்தவாரம் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது. வீதியில் நடந்துசென்ற மூதாட்டியை வழிமறித்த உந்துருளியில் வந்த இருவர், அவரைக் கடுமையாகத் தாக்கி கீழே வீழ்த்திவிட்டு அவர் அணிந்திருந்த இரண்டரைப் பவுண் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதனைக் கண்ட சில இளைஞர்கள் குறித்த திருடர்களை விரட்டிச்சென்ற போதும் அவர்களைப் பிடிக்க முடியவில்லை.

இ?ந்நிலையில், கடந்தவாரம் யாழ்.கோண்டாவில் பகுதியில் வீதியில் சென்ற பெண் ஒருவரிடம் சங்கிலியை அறுக்க முற்பட்ட இருவரில் ஒருவன் வசமாக மாட்டிக்கொள்ள மற்றவன் தப்பியோடிவிட்டான்.

மாட்டிக்கொண்ட திருடனை பொதுமக்கள் கட்டிவைத்து தர்ம அடிகொடுத்தனர். ஒவ்வொரு அடி விழும்போதும் ஒவ்வொருகருத்தை முன்வைத்தமை வித்தியாசமாக இருந்தது.

அதன் காணொளி, சமூக வலைத் தளங்களில் பரவி ஒவ்வொருவரையும் சிந்திக்க வைக்கின்றது.

"உங்களாலை ஒரு கோவில் திருவிழா செய்ய முடியவில்லை! ஒரு நகை போடமுடியவில்லை!! நீதி மன்றில் சொல்லித் தந்தவையோ முடிந்த பின்னர் போய் திருடுங்கோ என்றெல்லாம் சொல்லி சொல்லி எல்லோரும் தாக்கினர். ஏற்கெனவே குறித்த திருடர்கள் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் எனவும் திருட்டுச்சம்பவத்தில் ஈடுபட்ட அன்றைய தினம் கூட நீதி மன்றில் வழக்குமுடித்துவிட்டத்தான் வந்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

பின்னர் காயமடைந்த நிலையில் திருடன் காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டான்.

இதுதான் இன்றைய தமிழர் தாயகத்தின் நிலை! இது சிந்திக்கும் நேரமல்ல சிந்தித்து செயற்படும் நேரம்.

(சூறையாடல்கள் தொடரும்)

# காகிதப் புலிகளும், தமிழீழ தேசிய விடுதலைச் சித்தாந்தமும்

கலாநிதி சேரமான்

எந்தவொரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதர்சமாக அமைவது அப்போராட்டத்தை வழிநடத்தும் சித்தாந்தமாகும். ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் அமைப்பு அழிக்கப்பட்டாலும், அப்போராட்டம் மீண்டும் முளைவிடுவதற்கு அல்லது புதுவடிவில் முன்னெடுக்கப்படுவதற்கு அச் சித்தாந்தமே காலாக இருப்பதுண்டு. இது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் விடயத்திலும் பொருந்தும்.

1972ஆம் ஆண்டில் இருந்து தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமையேற்று அதனை முன்னெடுத்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் மௌனிக்கப்பட்டு ஏறத்தாழ எட்டரை ஆண்டுகள் ஆகிவிட்டன. தமிழீழத்திலும் சரி, புலம்பெயர் தேசங்களிலும் சரி, தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்திப் பல்வேறு தரப்பினரால் அடிக்கடி அறிக்கைப் போர்கள் தொடுக்கப்பட்டாலும், இவையெல்லாம் காகிதப் புலிகளால் நிகழ்த்தப்படும் காகிதப் போர்கள் என்பது எம்மவர்களுக்கு மட்டுமன்றி சிங்கள அரசுக்கும்கூட நன்கு தெரியும்.

இதனால் தான் தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தாம் தோற்கடித்து விட்டதாகவும், இனித் தமிழீழ விடுதலைப் புலிகளால் நாட்டில் தலைதூக்க முடியாது என்றும் கடந்த எட்டரை ஆண்டுகளாக சிங்களம் மார்தட்டி வருகின்றது. கடந்த வாரம் கூட பிறேசில் நாட்டில் தனக்கு எதிராகத் தொடரப்பட்ட போர்க்குற்ற வழக்கை அடுத்து அந்நாட்டை விட்டு அவசர அவசரமாக முன்னாள் சிங்களத் தரைப் படைத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய தப்பியோடிய பொழுது, அது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட சிங்கள தரைப்படைப் பேச்சாளர் பிரிகேடியர் ரொசான் செனிவிரத்தின, தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தமது படைகள் தோற்கடித்ததை அங்கு நின்ற செய்தியாளர்களுக்கு நினைவூட்டிக் கொள்ளத் தவறவில்லை. அதேநேரத்தில் விரும்பியோ, விரும்பாமலோ இன்னுமொரு விடயத்தையும் அவ்விடத்தில் பிரிகேடியர் செனிவிரத்தின அவர்கள் ஒப்புக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்த சித்தாந்தம் உயிர்ப்புடன் இருக்கின்றது என்பதும், அதுவே ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவிற்கு எதிரான வழக்கு உட்பட தமது அரசுக்கும், அதன் ஆயுதப் படைகளுக்கும் எதிரான அரசியல், இராசரீக மற்றும் சட்ட நடவடிக்கைகள் புலம்பெயர் தேசங்களில் இடம்பெறுவதற்கும் காரணமாக இருக்கின்றது என்பதுமே அவர் அளித்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலமாகும்.

உண்மையில் ஜெகத் ஜெயசூரியவிற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் முன்னின்று உழைத்தவர்கள் ஒரு சில தமிழர்கள் மட்டுமே. அதுவும் இவ்வழக்குத் தொடரப்படுவதற்குக் காரணமாக அமைந்தவர் ஐ.நா. மன்றின் முன்னாள் ஆலோசகரும், அனைத்துலக சட்ட நிபுணருமாகிய தமிழர் அல்லாதவரான வேற்று இனத்தவராகிய யஸ்மின் சூக்கா அவர்களே.

இப்படித்தான் சிங்கள அரசுக்கு எதிராகப் புலம்பெயர் தேசங்களில் ஒவ்வொரு அரசியல், இராசரீக மற்றும் சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கைகளைப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தனிநபர்களே முன்னின்று மேற்கொள்வதுண்டு. விரல்விட்டு எண்ணக்கூடிய சந்தர்ப்பங்களில் மட்டும் இவ்வாறான நடவடிக்கைகளின் பின்னணியில் தமிழ்த் தேசிய அமைப்புக்கள் இருப்பதுண்டு. அவ்வாறு தமிழ்த் தேசிய அமைப்புக்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் கூட, அவ் அமைப்புக்களின் அச்சாணிகளாகத் திகழும் ஒரு சில செயற்பாட்டாளர்களின் கடின உழைப்பின் வெளிப்பாடாகவே அமைவதுண்டு.

இதுதான் புலம்பெயர் தேசங்களில் நிலவும் அரசியல் யதார்த்தமாகும். ஒரு காலத்தில், அதுவும் 2009 வைகாசி 18இற்கு முன்னர், புலம்பெயர் தேசங்களில் முன்னெடுக்கப்பட்ட சகல அரசியல் செயற்பாடுகளும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவாலும், அதன் உப அமைப்புக்களாலுமே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் 2009 வைகாசி 18இற்குப் பின்னர் நிலைமை அவ்வாறு இல்லை. இதற்குக் காரணம் போராளிகள் என்று தம்மை அடையாளப்படுத்தியவாறு இக்கட்டமைப்புக்களை உடைப்பதற்குக் காகிதப் புலிகளும், அவர்களின் அடிவருடிகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளே.



> இவர்களின் நாசகார நடவடிக்கைகளால் அதிக அளவில் பாதிப்பிற்கு உள்ளாகியிருப்பது பிரான்ஸ் மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும், உணர்வாளர்களுமே.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் தமிழீழ தாயகப் பகுதிகள் இயங்கிய பொழுது போராளிகள் என்ற சொற்பதம் புனிதத்தன்மை மிகுந்த ஒன்றாகவே விளங்கியது. போராளிகள் என்பவர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு, கொள்கைத் திட்டம் ஆகியவற்றிற்கு உட்பட்டவர்களாகத் திகழ்வார்கள் என்ற எண்ணமே அன்று மக்களிடையே மேலோங்கியிருந்தது. போராளிகளும் அவ்வாறுதான் நடந்து கொண்டார்கள்.

இன்று நிலைமை அவ்வாறு இல்லை. இதற்கும் காகிதப் புலிகளே காரணம்.

இதில் வேடிக்கை என்னவெனில், போராளிகள் என்று தம்மைத் தாமே அடையாளப்படுத்திக் கொள்ளும் இந்தக் காகிதப் புலிகள் எவருமே கடந்த எட்டரை ஆண்டு காலப் பகுதியில் சிங்களப் படைகளுக்கு எதிராக ஒரு கூழாங்கல்லைக் கூடத் தூக்கியெறிந்தது கிடையாது. அப்படிச் சிங்களப் படைகளை நோக்கிக் கல்லெறியும் திராணிகூட இவர்களிடம் இல்லை.

புலம்பெயர் தேசங்களில் வாழும் ஏனைய தமிழர்களைப் போலவே இவர்களும் வாழ்கின்றார்கள். இவர்களில் ஒரு தொகுதியினரிடம் இயக்கச் சொத்துக்களும் இருக்கின்றன. இறுதி யுத்தத்தில் வெளிநாடுகளில் திரட்டப்பட்ட நிதியில் கணிசமான தொகையும் இவர்களிடமே இருக்கின்றது: வன்னியில் மக்களிடம் பெறப்பட்ட நிதியும் இவர்களின் வசமே உள்ளது.

இவ்வாறு இயக்கப் பணத்தில் சொகுசு வாழ்வு வாழும் இவர்கள், கடந்த எட்டரை ஆண்டுகளில் எவ்விதமான அரசியல் பணிகளிலும் ஈடுபட்டது கிடையாது. போட்டி மாவீரர் நாள் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாட்டாளர்கள் மீது வன்முறைகளை ஏவிவிடுதல், மின்னஞ்சல்கள், இணையத் தொலைபேசி வலையமைப்புக்கள், முகநூல் பக்கங்கள் போன்றவற்றின் ஊடாகத் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் கொலை மிரட்டல் விடுத்தல் போன்றவையே இவர்களின் செயற்பாடுகள் எனலாம்.

இவர்களின் நாசகார நடவடிக்கைகளால் அதிக அளவில் பாதிப்பிற்கு உள்ளாகியிருப்பது பிரான்ஸ் மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களும், உணர்வாளர்களுமே.

இதிலும் குறிப்பாகக் கடந்த காலங்களில் புலம்பெயர் தேசங்களில் தமிழ்த் தேசிய எழுச்சியின் சிகரமாக வர்ணிக்கப்பட்ட சுவிற்சர்லாந்து, இன்று சிங்களக் கைக்கூலிகளின் கூடாரமாக மாறியிருப்பதற்கும், இதன் காரணமாகத் தமிழ்த் தேசிய செயற்பாடுகளில் இருந்து சுவிற்சர்லாந்து வாழ் தமிழர்கள் விலகியிருப்பதற்கும் இவர்களே காரண கர்த்தாக்களாவர்.

சுவிற்சர்லாந்து ஜெனீவா நகரில் உள்ள ஐ.நா. மன்றின் முன்பாக நடைபெறும் எழுச்சிப் பேரணிகளில் கடந்த காலங்களைப் போன்று இப்பொழுது பெரும் எண்ணிக்கையில் சுவிற்சர்லாந்து வாழ் தமிழ் மக்கள் பங்கேற்பதில்லை. மாறாக ஐரோப்பிய நாடுகளில் இருந்து, அதுவும் பிரான்ஸ் தேசத்தில் இருந்து, செல்லும் மக்களே அதிக அளவில் ஜெனீவா பேரணிகளில் பங்கேற்கின்றனர். அதனால் தான் என்னவோ, இப்பொழுது பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவிற்குள் ஊடுருவி அதனை உடைப்பதற்கான நடவடிக்கைகளில் போராளிகள் என்ற பெயரில் இயங்கும் காகிதப் புலிகள் ஈடுபடுகின்றார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

ஆனாலும் இதனை முறியடித்துத் தமிழீழ தேசிய விடுதலை எழுச்சியை உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஆற்றல் பிரான்ஸ்வாழ் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களுக்கு உண்டு. ஏனென்றால் அவர்களை வழிநடத்துவது சிங்களம் பெரிதும் அஞ்சும் தமிழீழ தேசிய விடுதலைச் சித்தாந்தமே.




# போலிச் சாமியார்களின் கிழியும் முகமூடிகள்

**வெற்றிநிலவன்**



பிரேமானந்தா, நித்தியானந்தா, அசராம் பாபு... என இந்தியச் சாமியார்களின் பாலியல் லீலைகள் வெளியுலகிற்குத் தெரிந்தாலும் மக்களில் சிலர் இன்னும் திருந்துவதாகத் தெரியவில்லை. அவர்கள் திருந்தாத வரைக்கும் சாமியார்களும் திருந்தப்போவதுமில்லை, தங்கள் லீலைகளை கைவிடப்போவதுமில்லை.




> **கொடிய மிருகத்திற்கு எல்லாம் கருணை கிடையாது. கருணை காட்டும் தகுதியை அவர் இழந்து விட்டார். இவருக்கு அதிகபட்ச தண்டனைக்கு குறைவாக வழங்குவது என்பது, நாட்டின் ஒட்டுமொத்த மனச்சாட்சிக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருக்கும் எனவே அவர் இந்த தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.**







இப்போது இன்னொரு சாமியாரும் மாட்டுப்பட்டு கம்பிகளை எண்ணத் தொடங்கியுள்ளார். 20 வருடங்களுக்கு அவர் கம்பிகளை எண்ணவேண்டும். அவர்தான் குர்மீத் ராம் ரஹீம் சிங். இவர் யார்..? இவரது லீலைகள் என்ன..? எப்படி மாட்டிக்கொண்டார் என்பதைக் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போமா..?

இந்தியாவின் ஹரியானா மாநிலத்தில் அமைந்துள்ள 'தேரா சச்சா செளதா (Dera Sacha Sauda)' அமைப்பின் தலைவர்தான் குர்மீத் ராம் ரஹீம் சிங். 1967 ஓகஸ்டில் பிறந்த ராம் ரஹீம் சிங்கிற்கு தற்போது 50 வயதுகள். தேரா சச்சா செளதா என்கிற அமைப்பு 1948ல் மஸ்தானா பலுசிஸ்தானி என்கிற சீக்கிய துறவி ஒருவரால் ஆன்மிகத் தேடலுக்கு வழிகாட்டக்கூடிய, இலாப நோக்கில்லாத சமுதாய நலன் சார்ந்த அமைப்பாக உருவாக்கப்பட்டது. அதன் மிகப்பெரிய தலைமையகம் சுமார் 800 ஏக்கர் பரப்பளவில் ஹரியாணா மாநிலம் சிர்சா நகரில் அமைந்திருக்கிறது. இந்தத் தலைமையகம் நாட்டிற்குள் இருக்கும் இன்னொரு நாட்டைப்போலவே இயங்குகிறது. அந்த மாளிகையின் முன் இலட்சக்கணக்கானவர்கள் நிற்கக்கூடியளவிற்கு பெரிய அரங்கம் உள்ளது. அங்குதான் சாமியார் தனது சந்திப்புகளை நிகழ்த்துவார். அங்குதான் அவரது வழிப்பாட்டாளர்கள் அவரின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவார்கள்.

இந்த அமைப்புக்கு இந்தியா முழுவதிலும் 46 ஆச்சிரமங்கள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், அமெரிக்கா, கனடா, ஐக்கிய அரபு அமீரகம், அவுஸ்திரேலியா, ஐரோப்பா என்று இதன் கிளைகள் பரந்து விரிந்திருக்கின்றன. இந்த அமைப்பில் ஏறத்தாழ ஆறு கோடிக்கும் அதிகமான தொண்டர்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ராஜஸ்தானில் உள்ள சிறீகங்காநகர் மாவட்டம் சிறீ குருசார் மோடியா என்கிற கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் குர்மீத் ராம் ரஹீம் சிங். அவருக்கு ஏழு வயதாக இருக்கும்போது தேரா சச்சா செளதா அமைப்பின் அப்போதைய தலைவராக இருந்த ஷா சப்னம் சிங் இவரிடம் ஏதோ ஒரு சக்தி இருப்பதாகக் கூறி, இவரைத் தனது வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். இந்து - முஸ்லிம் நல்லிணக்கத்துக்கு இவர் வழிகோலப் போகிறார் என்று கூறி, இவருக்கு ராம் ரஹீம் என்று இந்து - முஸ்லிம் மதத்தை இணைத்து பெயரை மாற்றமும் செய்துவைத்தார். 1990ல் ஒரு மிகப்பெரிய மாநாட்டைக் கூட்டி 23 வயது குர்மீத் ராம் ரஹீம் சிங்கைத் தன்னுடைய வாரிசு என்று அறிவித்து பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்தார் ஷா சப்னம் சிங்.

இதன் தலைமைப் பொறுப்பை குர்மீத் ராம் ரஹீம் சிங் தனது கைகளுக்குள் கொண்டு வந்ததன் பின்னர், அந்த அமைப்பின் நோக்கம் முழுமையாக மாறத் தொடங்கியது. மற்றச் சாமியார்கள் போலல்லாமல் நவீனங்களில் ஈடுபாடுகொண்ட இந்தச் சாமியரின் ஆடைகள் மட்டுமல்ல, அவர் ஆச்சிரத்திற்கு வருகை தரும் முறையே நவீனமாக இருக்கும். எப்போதும் வகைவகையான பெறுமதி வாய்ந்த வண்ணவண்ண ஆடைகளில் வகை வகையான உந்துருளிகள், சிறியரக பெறுமதி வாய்ந்த வாகனங்களில்தான் அவர் அரங்கிற்குள் வந்திறங்குவார். இந்த வருகைகளில் போது திரைப்படக் கதாநாயகன் போலவே இவர் தன்னை காட்சிப்படுத்திக்கொண்டார். படங்களிலும் நடித்தார் என்பது இன்னொரு விடயம். வெறும் மத குருவாக மட்டுமல்லாமல், திரைப்படம் எடுப்பது, நடிப்பது, பாடுவது, இசையமைப்பது, விளையாட்டுகளில் ஈடுபடுவது என்று பல்கலை வித்தகராகக் தன்னை மக்கள் மத்தியில் உயர்த்திக்கொண்டார். அத்துடன், நாடாளுமன்றத் தேர்தலிலும், ஹரியாணா சட்டப்பேரவைத் தேர்தலிலும் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும் சக்தியாக தேரா சச்சா செளதா அமைப்பு இருப்பதற்கு இவரே காரணம். கடந்த தேர்தல்களில் அம்மாநிலத்தில் பா.ஜ.க.வின் வெற்றிக்கு தேரா சச்சா செளதா அமைப்பும் தலைவருமே முக்கிய காரணம் என்று கூறப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

பணங்களும் தேவைக்கு அதிகமாகவே வந்துகுவியத் தொடங்கின. இவரது தேரா சச்சா செளதா அமைப்பின் பெயரில் பாடசாலைகளும், கல்லூரிகளும் மருத்துவமனைகளும் கட்டியெழுப்பபப்பட்டன. தேரா சச்சா செளதா அமைப்புக்கு ஹரியாணா மாநிலக் கல்வித் துறை 51 இலட்சம் ரூபா உதவித் தொகை வழங்கியிருப்பதை விசாரணையின் போது கண்டறிந்த நீதிபதிகள் வன்மையாக கண்டித்திருப்பதில் இருந்தே அம்மாநில அரசுக்கும் இந்தச் சாமியாருக்கும் இடையிலான உறவின் பலத்தைப் புரிந்துகொள்ளலாம்.

ஏராளமான பிரபலங்கள் இவரது ஆசிர்வாதத்திற்காக ஏங்கிக்கிடந்தனர். ஏன் இந்திய கிரிக்கெட் வீரர்கள் விராட் கோலி, ஷகர் தவான், ஆசிஷ் நெஹ்ரா மற்றும் முன்னாள் விக்கெட் கீப்பர் விஜய் தஹியா உள்ளிட்டோர் ராம் ரஹீமின் சொற்பொழிவை கேட்டும் காணொளிகளும் வெளியாகியிருக்கின்றன. பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்ட இவருக்கு 'மைக்கேல் ஜக்சன் பாபா' என்ற பெயரே அதிகளவு நிலைத்தது. இவரது பெயரும் அமைப்பும் பிரபல்யம் அடையத் தொடங்கியது. தேரா சச்சா செளதா அமைப்பின் மாநாடுகளில் இலட்சக்கணக்கானவர்கள் வந்து குவிந்தனர். சாமியாரின் எழுச்சியால் பெண் சீடர்களும் அவர் ஆசிரமத்துக்கு அதிகமாக வரத்தொடங்கினர். பிறகென்ன பாலியல் லீலைகளும் அங்கே அரங்கேறத் தொடங்கின.

சாமியாரின் முகமூடியைக் கிழிக்கும் வகையில் ஆசிரமத்திற்கு வந்த இரு பெண்களை தொடர்ந்து 3 ஆண்டுகளாக ராம் ரஹீம் பாலியல் பலாத்காரம் செய்ததாக 2002ம் ஆண்டில் பஞ்சாப் - ஹரியாணா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு ஒரு கடிதம் வந்தது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

# அனைத்துலக காணாமல்போனோர் தினத்தன்று பிரான்சில் கவனயீர்ப்புப் போராட்டம்!

இலங்கைத் தீவில் கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி அங்கு நடைபெறும் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக அனைத்துலக காணாமல் போனோர் தினமான கடந்த 30ம் திகதி புதன்கிழமை பிரான்சு நாடாளுமன்றத்திற்கு அருகில்











மாலை 3 மணி முதல் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழீழ மக்கள் பேரவை, தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற



இந்நிகழ்வில் பதாதைகள், பதாகைகள் மற்றும் நிழற்படங்கள் போன்றவற்றை ஏந்தியவாறு மக்கள் கலந்து கொண்டிருந்தனர். பிரெஞ்சு மொழியில் எமது போராட்டத்தின் நோக்கம் பற்றி விளக்கமளிக்கப்பட்டதுடன் உரைகளும் இடம்பெற்றன.

தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம் என்னும் தாரகமந்திரத்துடன் மாலை கவனயீர்ப்பு நிகழ்வு நிறைவடைந்தது.

## பூமாலையுடன் பிரான்ஸ் பெண் காவல்துறையினர்

பிரான்ஸின் பாரிஸ் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பரிஸ் மாணிக்கப் பிள்ளையார் தேர்த்திருவிழாவின் போது போக்குவரத்து கடமையில் ஈடுபட்ட பெண் காவல்துறை உத்தியோகத்தர் ஒருவர் தலையில் பூமாலை அணிந்து கடமையில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது. இதனை பார்த்து தமிழர்கள் ஆச்சரியமடைந்துள்ளதுடன் குறித்த காவல்துறையினரின் படத்தையும் சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளனர்.



# கேணல் பரிதி நினைவு சுமந்த துடுப்பெடுத்தாட்டச் சுற்றுப்போட்டி 2017

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு-பிரான்சு, தமிழர் விளையாட்டுத்துறை நடாத்திய கேணல் பரிதி நினைவு சுமந்த துடுப்பெடுத்தாட்டச் சுற்றுப்போட்டி 2017 கடந்த மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரான்சு Chateau de vanceanes பகுதியில் சிறப்பாக இம்பெற்றது. இந்நிகழ்வில் ஈகைச்சுடரினை 26.12.2007 நெடுந்தீவுக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலி மேஜர் ஈழவீரனின் சகோதரன் அவர்கள் ஏற்றிவைத்தார்.





தொடர்ந்து போட்டிகள் விறுவிறுப்பாக போட்டிகள் இடம்பெற்றன.

20 துடுப்பெடுத்தாட்ட அணிகள் இப்போட்டியில் கலந்துகொண்டன. இப்போட்டிகளில் 1ம் இடத்தை ஸ்கந்தா விளையாட்டுக் கழகமும், 2ம் இடத்தை எழுச்சி விளையாட்டுக் கழகமும், 3ம் இடத்தை ஏர்கன் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

# கேணல் ராயு 15ம் ஆண்டு நினைவு நிகழ்வு!

தமிழீழ விடுதலைப் பயணத்திற்கு பெரும் பங்காற்றி நின்ற தளபதிகளில் ஒருவரான கேணல் ராயூ அவர்களின் 15ம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு பிரான்சு லாச்சப்பல் சோதியா கலைக் கல்லூரியில் கடந்த 27ம் திகதிஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.



இந்நிகழ்வில் ஈகைச்சுடரினை 02.11.2007 அன்று கிளிநொச்சியில் வீரச்சாவடைந்த பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் துணைவியார் ஏற்றிவைக்க, மலர்வணக்கத்தை 26.06.1989 அன்று ஓமந்தையில் இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் ரூபன் அவர்களின் சகோதரி செய்து வைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் சுடர்ஏற்றி மலர்வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து, பிரான்சு தமிழர் ஒருங்கி ணைப்புக்குழு பரப்புரைப் பொறுப்பாளர் திரு.சத்திய தாசன், பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களின் துணைவியார் ஆகியோர் கேணல் ராயு தொடர்பான நினைவுரைகளை ஆற்றியிருந்தனர். இந்நிகழ்வில், மாவீ ரர் நாள் 2017 இற்கான பங்களிப்பு அட்டையும் வெளி யிட்டுவைக்கப்பட்டது.

பங்களிப்பு அட்டையின் முதல் பிரதியை தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரெஞ்சுக்கிளைப் பொறுப்பாளர் திரு.மகேஸ் அவர்கள் வெளியிட்டுவைக்க, மாவீரர் கப்டன் ரூபன் அவர்களின் சகோதரி பெற்றுக்கொண்டார்.

# லாச்சப்பல் சிறி மாணிக்க விநாயகர் ஆலயத்தின் 22வது ஆண்டு தேர்த் திருவிழா!

பிரான்சு பரிஸ் லாச்சப்பல் சிறி மாணிக்க விநாயகர் ஆலயத்தின் 22வது ஆண்டு தேர்த் திருவிழா கடந்த 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. வழமை போன்று இம்முறையும் பிரான்சின் நாலாபுறத்திலிருந்தும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வருகை திந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# தகர்க்கப்பட்ட நினைவு...

தளபதி லெப்.ஜெனரல் பி.எம்.ஹரிஸ், 1987ம் ஆண்டு காலப்பகுதியில் உயிரிழந்த கப்டன் பாத் வால் இராணுவ அதிகாரியுடன் ஒன்றாகப் பணியாற்றிய சக இராணுவ அதிகாரி. இவரின் கோரிக்கைக்கு அமையவே குறித்த கல்லறை புனரமைக்கப்பட்டது.

குறித்த கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்தியிருந்ததோடு, கோட்டை, பலாலி, மற்றும் இந்திய இராணுவம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடங்களுக்கும் சென்று இவர் நேரில் பார்வையிட்டிருந்தார். கல்லறை அமைந்துள்ள தோட்ட காணி தனியார் ஒருவருக்கு சொந்தமானது. தற்போது அதனை இந்திய இராணுவத்தின் நினைவிடமாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன.




கோப்பாயில் இந்திய இராணுவத் தளபதியின் கல்லறை அமைத்திருக்கும் இடத்திலிருந்து சில நூறு மீற்றர் தூரத்தில்தான் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருக்கின்றது. அங்கு தமிழினத்தின் விடுதலைக்காக தங்களை விதையாக்கிய ஆயிரக்கணக்கான மாவீரர்களின் கல்லறைகள் அமைந்திருந்தன. ஆனால், 2009 பாரிய இன அழிப்பின் பின்னர், கோப்பாய் மாவீரர் துயிலம் இல்லத்தை இடித்தழித்துத் தகர்த்த சிறீலங்கா இராணுவம், மாவீரர்களின் கல்லறை மீது கட்டடங்களைக் கட்டியெழுப்பி அங்கு தமது இராணுவப் படைப்பிரிவின் தலைமையகத்தை நிறுவியுள்ளது. கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தை இடித்தழித்த இராணுவம்தான் இந்திய இராணுவத் தளபதியின் கல்லறையை மெருகூட்டியிருக்கின்றது.

அதேவேளை, கோப்பாயில் உள்ள இந்திய இராணுவத் தளபதி ஒருவரின் கல்லறை குறித்துச் சிந்தித்த இந்தியத் தரப்பு, கோப்பாயிலுள்ள விடுதலைப் புலிகளின் கல்லறைகள் குறித்துச் சிந்திக்கவில்லை.

இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் இரு தரப்புமே தமிழர்கள் குறித்து ஒரே பார்வையைக் கொண்டவர்கள். தமிழ்த் தேசியம் வலுவடைந்துவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருப்பவர்கள். அவர்களின் போராட்டத்தின் நினைவை மீட்கும் நினைவிடங்கள் தமிழர் தாயகத்தில் இருக்கக் கூடாது என்பதில் கங்கணம்கட்டிச் செயற்படுபவர்கள்.

ஆனால், இறந்தவர்களை நினைவுகூருவது அவர்களுடன் வாழ்ந்தவர்களின் அல்லது உறவுகளின் உரிமை சார்ந்தது. அந்த உரிமையைத் தட்டிப்பறிக்கும் அல்லது மறுக்கும் உரிமை உலகில் எவருக்கும் கிடையாது. ஆனால் சிறீலங்கா மறுத்தது. ஏன் இந்தியாவும் மறுக்கின்றது.

இந்தியா தனது துணைத் தூதரகத்தை யாழ்ப்பாணத்தில் திறந்தது மாவீரர்நாளான 27.11.2010 அன்று. மக்களின் சிந்தனை மாவீரர்நாளுக்குள் சென்றுவிடாதவாறு மாவீரர் நாளில் தனது துணைத் தூதரகத்தைத் திறந்தது. அதே மாவீரர் நாளில்தான் துணைத் தூதரகத்தில் ஹோலிப் பண்டிகைகளையும் கொண்டாடிவருகின்றது.

அத்துடன் தனது துணைத் தூதரகத்தை யாழ்ப்பாணத்தில் திறப்பதற்கு முன்பாக அதே ஆண்டு மார்ச் மாதம் நல்லூரில் அமைந்திருந்த தியாகி திலீபனின் நினைவுதூபியைத் தகர்த்தெறிந்துவிட்டே, யாழ்ப்பாணத்தில் அதே நல்லூரில் இந்தியா தனது துணைத் தூதரகத்தைத் திறந்தது. போர் இடம்பெற்ற காலங்களிலும் சரி, அதன் பின்னர் சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருந்தபோதும் சரி சிறிய சேதங்களுக்கு உள்ளான இந்தத்தூபி முற்றாக தகர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் இந்தியா தனது துணைத் தூதரகத்தை யாழில் திறக்கவுள்ளதாக அறிவித்து சில நாட்களில் இந்தத் தூபி முற்றாகத் தகர்த்தெறியப்பட்டது.

தியாகி திலீபன் இந்திய இராணுவத்தினர் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில், இந்தியாவிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டவர். இறுதிவரை தனது உறுதியில் தளராது போராடிய திலீபனை, இந்தியா கவனத்தில் எடுக்கத் தவறியது. திலீபன் சாவை அணைத்துக் கொண்டார். இதனால், அகிம்சைக்கு பெயர் போன நாடு என தன்னைப் பெருமைப்படுத்திய இந்தியாவிற்கு, பெருத்த அவமானமே மிஞ்சியது. இந்நிலையில், யாழ்ப்பாணத்தில் தூதரகம் அமைத்து தங்கப் போகும் இந்தியாவிற்கு திலீபனின் நினைவுத்தூபி தமது தூதரகத்திற்கு அருகில் அமைந்திருப்பது நெருடலாகவும் ஒரு அவமானச் சின்னமாகவும் இருக்கும் என்ற நிலையிலேயே இந்தத் தகர்ப்பு இடம்பெற்றதாக அப்போதே குற்றச்சாட்டுக்கள் பரவலாக எழுந்திருந்தன.

அதன் பின்னர் இந்திய இராணுவத்தினரால் வல்லைவியில் படுகொலை செய்யப்பட்டவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவிடமும், இந்தியா இராணுவத்தின் சதியால் உயிரிழந்த லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்பட்ட 12 போராளிகளின் நினைவாக தீருவில் வெளியில் அமைந்திருந்த நினைவு தூபியும் அதே துணைத் தூதரகம் திறப்பதற்கு சில மாதங்கள் முன்பாக அதே ஆண்டு மே மாதம் தகர்த்தெறியப்பட்டன.

இந்திய அரசின் நடவடிக்கைகளாலும், இராணுவத்தின் படுகொலைகளாலும் கொல்லப்பட்டவர்களின் நினைவுக்கான அடையாளங்களை அழித்துவிட்டே யாழ்குடாவில் இந்தியத் துணைத் தூதரகம் திறக்கப்பட்டது என்பது மறைக்கப்படமுடியாத வரலாறு.

தமிழர் தாயகமெங்கும் கொல்லப்பட்ட சிறீலங்கா இராணுவத்தினருக்கான நினைவுதூபிகளும், பலாலியில் இந்திய இராணுவத்தினருக்கான நினைவுத்தூபியும் கோப்பாயில் கல்லறையும் என எழுந்துநிற்கின்றன. ஆனால், இவர்கள் யாருடன் போராடி வீழ்ந்தார்கள் என்பதற்கான எந்தவொரு அடையாளங்களும் விட்டுவைக்கப்பட்டிருக்கவில்லை. இது தமிழர்களின் வீரத்தையும், போராட்டத்தையும் மறைக்கும் செயலன்றி வேறில்லை. தகர்க்கப்பட்ட நினைவுதூபிகளும், மெருகூட்டப்படும் கல்லறைகளும் தமிழர்களுக்குச் சொல்லும் செய்தி இதான். ஆனால் ஆயிரம் கரங்கள் கொண்டு மறைத்தாலும் விடுதலைச் சூரியன் மறையுமா என்ன..?

## பேசும் படம்



# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## வோக்ஸ்வேகன் பொறியாளருக்கு 40 மாத சிறையும் அபராதமும்!

வோக்ஸ்வேகன் நிறுவனத்தின் டீசல் எரிபொருளில் இயங்கும் காரில் மாசை அளவிடும் மென்பொருள் மோசடியில் முக்கிய பங்கு வகித்த பொறியாளருக்கு 40 மாத சிறை தண்டனையும், 2 இலட்சம் டொலர் அபராதமும் விதித்து அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த வோக்ஸ்வேகன் நிறுவனம், அமெரிக்காவில் விற்பனை செய்த டீசல் வகை கார்களில் புகை மாசு அளவை எடுத்துக்காட்டும் மென்பொருளில் மோசடி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

அமெரிக்க அரசின் மாசு கட்டுப்பாட்டு சோதனையின்போது வோக்ஸ்வேகன் நிறுவனம் தனது டீசல் கார்களில் சட்டவிரோதமாக புகை வெளியிடும் மென்பொருளில் மோசடி செய்து 6 இலட்சம் கார்களை விற்பனை செய்ததாக புகார் எழுந்தது. நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் வோக்ஸ்வேகன் டீசல் கார்கள் 40 மடங்கிற்கும் அதிகமான நைட்ரஜன் ஒக்ஸைட் வாயு வெளியிடுவதும், இது, பொதுமக்களின் சுவாசப் பிரச்னைக்கு முக்கிய காரணமாக இருப்பதும் கண்டறியப்பட்டது. அதன் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்கில் வோக்ஸ்வேகன் பொறியாளருக்கு நீதிமன்றம் இந்த தண்டனை வழங்கியுள்ளது.

இந்த குற்றச்சாட்டில், வோக்ஸ்வேகன் நிறுவன பொறியாளரான ரொபேர்ட் லியாங்குக்கு (63) முக்கிய பங்கு இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அமெரிக்க நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது. இந்த நிலையில், கடந்த வாரம் இறுதி விசாரணை நடைபெற்றது. அப்போது, அமெரிக்க மாசு கட்டுப்பாட்டு விதிமுறைகளை ஏமாற்றும் வகையில், வோக்ஸ்வேகன் நிறுவனம் புகை மாசு மென்பொருளில் மோசடி செய்து 6 இலட்சம் டீசல் கார்களை விற்பனை செய்தது குறித்து ரொபேர்ட் லியாங்குக்கு ஏற்கெனவே தெரியும். எனவே அவருக்கு, 36 மாத சிறை தண்டனையும், 20 ஆயிரம் டொலர் அபராதமும் விதிக்க வேண்டும் என அரசு வழக்குரைஞர் வாதிட்டார்.

ஆனால், இந்த குற்றச்சாட்டை லியாங்கின் வழக்குரைஞர் திட்டவட்டமாக மறுத்தார். எதற்கும் பேராசைப் பட்டு லியாங் இதனை செய்யவில்லை என்றும், நிறுவன அதிகாரிகளின் உத்தரவுப்படியே செயல்பட்டார், முக்கிய சூத்திரதாரி அவர் இல்லை என்றும் வாதாடினார். ஆனால், இதனை ஏற்க மறுத்த மாவட்ட நீதிபதி சியான் கொக்ஸ், அரசு வழக்குரைஞர் கேட்டுக் கொண்டதைக் காட்டிலும் அதிகமாக, லியாங்குக்கு 40 மாத சிறை தண்டனையும், 2 இலட்சம் டொலர் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். ஆனால், சிறை தண்டனைக்குப் பிறகு சிறையிலிருந்து லியாங் விடுதலையாகும்போது, அவர் ஜேர்மனிக்கு நாடு கடத்தப்படுவாரா என்பது குறித்து தெரிவிக்கப்படவில்லை.

## சாம்சுங் துணைத் தலைவருக்கு 5 ஆண்டு சிறை

ஊழல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக நடைபெற்று வந்த வழக்கில் சாம்சங் நிறுவனத்தின் துணைத் தலைவருக்கு 5 ஆண்டு சிறை தண்டனை விதித்து தென் கொரிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான சாம்சுங்கின் துணைத் தலைவர் லீ ஜே-யோங் (49). நிறுவனத்தின் தலைவரான இவரது தந்தைக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, துணைத் தலைவரான லீ ஜே-யோங் 2014ம் ஆண்டு முதல் நிறுவனத்தை நடத்தி வருகிறார். தனது நிறுவனத்துக்கு அரசிடமிருந்து பல்வேறு வரிச் சலுகைகள் உள்ளிட்டவற்றைப் பெறுவதற்காக இலஞ்சம் வழங்கினார் என்று லீ ஜே-யோங் மீது குற்றம் சாட்டப்பட்டது. மேலும், நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளித்தது, பணம் கையாடல் ஆகிய குற்றச்சாட்டுகளும் அவர் மீது



சுமத்தப்பட்டன. அவர் கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டார். வழக்கு விசாரணை சியோல் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. விசாரணையின் இறுதியில் அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதிபரின் தோழி நடத்தி வந்த போலி தன்னார்வ அமைப்புக்கு சுமார் 4 கோடி டொலர் வழங்கியது உறுதியானதாக நீதிமன்றம் தெரிவித்தது. இந்த விவகாரம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது எனவும், அதில் நேரடியாக சம்பந்தப்படவில்லை எனவும் அவர் நீதிமன்றத்தில் வாதிட்டார். அதிகாரிகள் செய்திருக்கக் கூடிய குற்றத்துக்குத் தன்னை தண்டிக்கக் கூடாது என்ற அவரது வாதத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை. இந்நிலையில், அவருக்கு 5 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதே விவகாரத்தில் சாம்சுங் நிறுவனத்தில் பணியாற்றி வந்த மூத்த அதிகாரிகள் 4 பேர் மீதும் வழக்கு தொடரப்பட்டது. அவர்களும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அவர்களுக்குத் தலா 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

ஒரு கதை

## மூன்று சிலைகள்!

அரசரின் ஒற்றர்களில் ஒருவர் வயதாகிவிட்ட காரணத்தால் ஓய்வு பெறும் நிலையில் இருந்தார். அந்த ஒற்றனுக்கு பதில் ஒரு புதிய ஒற்றனை நியமிக்க அரசர் முடிவு செய்தார். மூத்த மந்திரியை கூப்பிட்டு "புது ஒற்றன் ஒருவனை நியமிக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். அந்தப் பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைக்கலாம் என்று நினைக்கிறேன். தாங்கள் ஒரு நேர்முகத் தேர்வு நடத்தி தகுந்த ஆளைத் தேர்ந்தெடுங்கள்." என்றார்.



நாடெங்கும் அறிவிப்பு செய்யப் பட்டது. நேர்முகத் தேர்வுக்கான நாளும் குறிக்கப்பட்டது. வேலையில் சேர ஆட்களும் போட்டி போட்டுக் கொண்டு அரண்மனைக்கு வந்திருந் தனர். மந்திரி ஒரே மாதிரியான சிலைகள் மூன்றை வரவழைத்திருந்தார். அத்துடன் மூன்று கம்பிகளும் கொண்டு வரப்பட்டிருந்தன. அந்தச் சிலைகளையும், கம்பிகளையும் ஓர் அறையில் வைத்தார்.

நேர்முகத் தேர்வு வந்தவர்களை நோக்கி, "இதோ இந்த அறையில் மூன்று சிலைகள் உள்ளன. இந்த மூன்று சிலைகளில் எது மிகச் சிறந்தது என்பதைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும். தங்களால் கண்டுபிடிக்க இயலாவிட்டால் 'இயலவில்லை' என்று கூறிவிடலாம். ஆனால் தவறான சிலையை யாரேனும் சிறந்தது என்று கூறினால் கடுமையான தண்டனை உண்டு" என்றார். வந்திருந்தவர்களில் சிலர் தண்டனைக்கு பயந்து போட்டியிலிருந்து விலகிக் கொண்டனர். சிலர், முயற்சி செய்து பார்க்கலாம்... முடியாவிட்டால் 'இயலவில்லை' என்று கூறி விடலாம்... என்று தீர்மானித்து முயற்சி செய்து பார்த்தனர். ஆனால்....

தொடர்ச்சி 22ம் பக்கம்

## மண்ணிற்காய் விதையான ஒரு கொடியில் பூத்த மும்மலர்கள்

மூன்று விதைகள்



லெப்.தமிழ்ச்செல்வன் (இராசு தமிழச்செல்வன்) வீரச்சாவு 13.09.2001

மேஜர் சுருளி / பேரின்பன் (இராசு வசந்தமோகன்) வீரச்சாவு 11.11.1993

கப்டன் வெண்ணிலவன் (அருணா) (இராசு சத்தியசீலன்) வீரச்சாவு 02.11.1996

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இம் மூன்று மாவீரர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள். 1993 தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையின்போது மேஜர் சுருளியும், சரியாக மூன்று ஆண்டுகளில் யாழ்குடாவை ஆக்கிரமிக்கும் சிறீலங்காவின் நடவடிக்கையின் போது கப்டன் வெண்ணிலவனும், 2001ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் லெப்.தமிழ்ச்செல்வனும் என தமிழினத்தின் விடுதலைக்காக அக்குடும்பம் தங்கள் தவப்புதல்வர்கள் மூவரை விலையாகக் கொடுத்திருந்தது.

ஒரு குறள்

அறத்துப்பால் – நடுவு நிலைமை



சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

நேர்மையும் நெஞ்சுறுதியும் ஒருவர்க்கு இருந்தால் அவரது சொல்லில் நீதியும் நியாயமும் இருக்கும். அதற்குப் பெயர்தான் நடுவுநிலைமை.

ஒரு மருத்துவம்

## கொழுப்பின் அளவை குறைக்கும் மீன்!

உணவுகளில் அடிக்கடி மீனை சேர்த்து வந்தால் எந்த நோயும் அண்டாது என்பது மருத்துவர்களின் விளக்கம். இறைச்சி வகைகளைவிட மீனே மனிதனுக்கு சிறந்த மாமிச உணவாக இருக்கின்றது. அதிக புரோட்டீன் சத்துள்ள மீனில், ஒமேகா 3 அமிலம் உள்ளது. இது பல்வேறு நோய்களிலிருந்து உடலை பாதுகாக்கிறது. மீன் உணவு சாப்பிட்டு வருவோருக்கு ஆஸ்துமா நோய் வரவே வராது.



மூளைக்கும், கண் பார்வைக்கும் மிகவும் பயனளிக்கிறது. மீன் உணவில் உள்ள ஒமேகா 3 அமிலம் மூளையை சுறுசுறுப்பாக வைக்க உதவுகிறது. தொடர்ந்து சாப்பிடுவதன் மூலம் வயதான பெண்களுக்கு ஏற்படும் இதயநோய் அபாயம் குறைகிறது. வெள்ளை மீன்கள் உணவுகளை காட்டிலும் கறுப்பு மீன்கள் சிறந்த பலன் அளிக்கும்.

நினைவுத்திறன் குறைபாடு, நரம்புத் தளர்ச்சி நோய் போன்ற பல நோய்கள் குணமடையும். இரத்தம் கட்டுவது, இரத்தக்குழாயில் வீக்கம் போன்ற பிரச்சனை எதுவும் வராது. இருதயத்துக்கு மிகுந்த பாதுகாப்பை தருகிறது மீன் உணவு. மீன் எண்ணெய்யை சாப்பிடுவதால், இரத்தத்தில் இருக்கும் கொழுப்பின் அளவு குறையும்.

## பிறப்பு விகிதமும், பிரச்சினைகளும்

ஒரு தகவல்

மக்கள் தொகை கணக்கில் பிறப்பு விகிதம் அதிகரிக்கத் தொடங்கியதும், மக்கள் தொகை அதிகரிப்பும் அதன் சமூக பொருளாதார விளைவுகள் பற்றிய உலகளாவிய கவலையும், கடந்த 50 வருடங்களாக தொடர்ந்து இருந்து வருகின்றன. அமெரிக்க கணக்கெடுப்பின்படி, உலக மக்கள் தொகை 2012 மார்ச் 12ல் 700 கோடியை கடந்தது. மேலும் 2050-க்குள் இது 900 கோடியை கடக்கக்கூடும் என்றும் அறிவித்துள்ளது.



இந்தியா, சீனா போன்ற நாடுகள் மக்கள்தொகையை கட்டுப்படுத்த முடியாமல் தவித்து வருகின்றன. அதேவேளையில் ஐரோப்பிய நாடுகளும் ஜப்பான், சிங்கப்பூர் போன்ற மக்கள் தொகை குறைந்த நாடுகளும் மேலும் மக்கள் தொகை குறைவதை எண்ணி கவலை அடைகின்றன.

பிரித்தானியாவைச் சேர்ந்த பொருளாதார வல்லுநர் தோமஸ் ரொபேர்ட் மால்தொஸ், மக்கள் தொகை பெருக்கத்தால் உணவுத்தட்டுப்பாடு, வேலையில்லா திண்டாட்டம், அடிப்படை மருத்துவ வசதிகளின் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் ஏற்படும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பொன்மொழி

**பேசும்முன் கேளுங்கள்,**
**எழுதும்முன் யோசியுங்கள்,**
**செலவழிக்கும்முன் சம்பாதியுங்கள்**

ஒரு பழமொழி

ஓர் ஆட்டுக்குட்டிக்காக நீதிமன்றத்திற்குச் செல்பவன், தன் பசுவையும் இழக்கிறான்.

- கிரேக்கம்

ஒரு வரலாறு

## பிறந்த நாள் என்றால் என்ன?

"பிறந்த நாள் என்றால் என்ன?"

இந்தக் கேள்வியை பி.பி.சி. வேர்ல்ட் (BBC World) நிறுவனத்தினர் உலகிலுள்ள பெரிய மனிதர்கள் (வி.ஐ.பி) எல்லோரிடமும் கேட்டனர். பலரும் தங்கள் சிந்தனையில் உதித்த பல்வேறு பதில்களைப் பகிர்ந்துகொண்டனர். அந்தப் பதில்களுக்குள், மறைந்த இந்திய முன்னாள் ஜனாதிபதி டொக்டர் அப்துல் கலாம் அவர்கள் சொன்ன பதிலையே சிறந்த பதிலாக பி.பி.சி. வேர்ல்ட் தேர்வு செய்தது! அவர் சொன்ன பதில் இதுதான்.



**"வாழ்க்கையில் உன்னுடைய அழுகைக் குரல் கேட்டு உன் தாய் சிரித்தது அந்த ஒரே ஒரு நாள்தான்..."**

ஒரு பழமொழியும் விளக்கமும்

## இருப்பவன் இரும்பைத் தின்பான், போறவன் பொன்னைத் தின்பான்.

'இருப்பவன் இரும்பைத் தின்பான்,
போறவன் பொன்னைத் தின்பான்'

உடல் இயங்குவதற்கு இரும்புச் சத்து இன்றியமையாதது. இதன் குறைவால் இரத்தச் சோகை என்னும் நோய் ஏற்படுகிறது. எனவே இரும்புச்சத்து அதிகமுள்ள காய் கறி உள்ளிட்ட உணவுப் பொருளை உட்கொள்ளுதல் வேண்டும். போக இச்சையை விரும்புபவர்கள் பொன்னைப் பஸ்பமாக்கி உண்பார்கள். இதனால் நரம்புக் கோளாறு, சிறுநீரகக் கோளாறு போன்றவை ஏற்படும். இதனைக் குறிக்க, போறவன் பொன்னைத் தின்பான் என்றார்கள்.



# 26 வருடங்களுக்கு பின் வெளியே வந்த பேரறிவாளன் மீண்டும் ஒரு மாதத்தில் சிறை

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள்தண்டனை பெற்று கடந்த 26 ஆண்டுகளாக சிறை தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் நீண்ட சட்ட போராட்டத்திற்கு பின்னர் பரோலில் (சிறையிலுள்ள கைதியை தண்டனைக் காலத்தில் காவல்துறையின் காவலில் வெளியே சில நாட்கள் விடுவது 'பரோல்' என்று பெயர்) கடந்த 25ம் திகதி வெளியே வந்துள்ளார். அவரது தந்தை உடல்நலக் குறைவால் வாடுவதால் அவருக்கு பரோல் அளிக்க வேண்டும் என்று அரசிடம் அவரது தாயார் சார்பாக கோரிக்கை வைக்கப்பட்டது. இந்நிலையில் பேரறிவாளனை ஒரு மாதம் பரோலில் விடுவிக்க தமிழக அரசு தற்பொழுது உத்தரவு பிறப்பித்தது. சிறையில் இருந்து வெளியே வந்த அவரை காவல்துறை அதிகாரிகள் பாதுகாப்புடன் வேலூர் சிறையில் இருந்து திருப்பத்தூரில் உள்ள அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். திருப்பத்தூரில் உள்ள அவருடைய வீட்டில்தான் தங்கியிருக்க வேண்டும், பத்திரிகை, தொலைக்காட்சிகளுக்கு பேட்டி கொடுக்க கூடாது என்பது உள்பட சில நிபந்தனைகள் பேரறிவாளனுக்கு விதிக்கப்பட்டுள்ளன.



எனினும், பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள் நிருபர்களுக்கு தனது கருத்தக்களை வழங்கியுள்ளார். அப்போது அவர், முன்னாள் முதலமைச்சர்கள் ஜெயலலிதா, கருணாநிதி உள்பட பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் பேரறிவாளன் விடுதலைக்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். தற்போது எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அரசு பரோலில் விடுவிக்க உத்தரவு வழங்கியுள்ளது. இதனால், தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இது மட்டுமல்லாமல் எனது மகனை நிரந்தரமாக விடுதலை செய்ய வேண்டும். அப்போதுதான் அவன் திருமணம் செய்து கொள்வதாக என்னிடம் தெரிவித்துள்ளான். மகனை பரோலில் விடுவித்ததற்காக, முதலமைச்சரை நேரில் சந்தித்து நன்றி தெரிவிப்பதற்காக முன்னனுமதி கேட்டு இருக்கிறேன் என்றார்.

1991ஆம் ஆண்டு பெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக்கு வந்த ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இந்த கொலை வழக்கில் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ரொபேர்ட் பயாஸ், ஜெயகுமார், ரவிசந்திரன் ஆகிய 7 பேருக்கும் முதலில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

## ஆறுறையுடன் விழுங்கிய தங்கக் கட்டி 3 நாட்களின் பின் வயிற்றிலிருந்து மீட்பு

மலேசியாவில் இருந்து ஆணுறைக்குள் வைத்து 7 தங்க கட்டிகளை விழுங்கி வந்த நபரின் வயிற்றுக்குள் இருந்து 3 நாட்கள் போராட்டத்திற்கு பின்னர் தங்க கட்டிகள் மீட்கப்பட்டுள்ளது. மலேசியா கோலாலம்பூரிலிருந்து திருச்சிக்கு வருகை தந்த முகமது சலீம் என்ற நபர் சந்தேகத்தின் அடிப்படையில் திருச்சி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். குறித்த நபரிடம் மேற்கொண்ட விசாரணையில்,



அவர் தனது வயிற்றுக்குள் 7 தங்க கட்டிகள் இருப்பதாக தெரிவித்துள்ளார். 205 கிராம் நிறையுள்ள மொத்தம் 7 தங்க கட்டிகளை ஆணுறைக்குள் போட்டு வாழைப்பழத்தில் வைத்து விழுங்கி கடத்தி வந்ததாக தெரிவித்துள்ளார். விழுங்கிய கட்டிகளை வெளியில் எடுப்பதற்காக அதிகாரிகள் அவரை திருச்சி வைத்தியசாலையில் வைத்திருந்தனர். சுமார், 3 நாட்களின் பின்னர் அவரது வயிற்றில் இருந்து தங்க கட்டிகள் எடுக்கப்பட்டதாகவும் அதன் மதிப்பு இந்திய ரூபாவில் 5 இலட்சத்து 96 ஆயிரம் இந்திய ரூபா எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலண்டன் விபத்தில் 8 பேர் பலி தமிழகத்தை சேர்ந்தவர்களே அதிகம்!

பிரித்தானியத் தலைநகர் இலண்டன் பக்கிங்ஹாம் ஹயர் என்ற இடத்தில், எம்–1 நெடுஞ்சாலையில் கடந்த 27ம் திகதி அதிகாலை 3.15 மணிக்கு இரு பாரவண்டிகளுக்கு இடையில் சிறிய பேருந்து சிக்குண்டதில் இடம்பெற்ற விபத்தில் 7 தமிழர்கள் உட்பட 8 பேர் பலியானார்கள். அவர்களில் 6 பேர் ஆண்கள். 2 பேர் பெண்கள். மேலும் 4 பேர் பலத்த காயத்துடன் மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இந்த விபத்தில் தனது தாய், தந்தையை (கார்த்திகேயன் ராமசுப்ரமணியம் மற்றும் லாவண்யா லட்சுமி) இழந்த 5 வயது சிறுமி ஷரவந்தி, ஒரு பெண், ஒரு ஆண் (மனோரஞ்சன், சங்கீதா) என 3 பேரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. 24 ஆண்டுகளுக்குப் பிறகு இலண்டனில் நடந்துள்ள கொடூர வீதி விபத்து இதுவென்று கூறப்படுகின்றது.



ஐரோப்பாவில் சுற்றுலா மேற்கொள்வதற்காக பன்னீர்செல்வம், அவரது மனைவி வள்ளி, தங்கை தமிழ்மணி, தங்கை கணவர் அறச்செல்வம் ஆகியோர் பிரித்தானியா சென்றிருந்தனர். அவர்களுடன், இலண்டனில் உள்ள பன்னீர்செல்வத்தின் மகன் மனோரஞ்சன், மருமகள் சங்கீதா ஆகியோரும் என 11 பேர் மினி பேருந்தை வாடகைக்கு அமர்த்தி, நாட்டிங்ஹாமில் இருந்து இலண்டனுக்கு சென்றுள்ளனர். இதன்போதே விபத்து நேர்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக 2 பார வண்டிகளின் சாரதிகளை (ரிஸ்சோர்ட் மேசிராக் (வயது 31), டேவிட் வேக்ஸ்டாப் (வயது 53)) காவல்துறையினர் கைது செய்தனர். இவர்களில் ரிஸ்சோர்ட் மேசிராக் அளவு கடந்த மதுபோதையில் இருந்தது தெரியவந்துள்ளது. மதுபோதையில் இருந்ததே விபத்துக்கு காரணம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. அவர்கள் மீது ஆபத்தான முறையில் வாகனத்தை செலுத்திவந்து மரணத்தை ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

விபத்தில் சிக்கிய மினி பேருந்தின் சாரதி கேரளத்தைச் சேர்ந்தவர். எஞ்சிய அனைவரும், சென்னையைச் சேர்ந்தவர்கள். உயிரிழந்த தமிழ்நாட்டை சேர்ந்த 7 பேரில் 3 பேர் காஞ்சீபுரம் மாவட்டம், பிள்ளையார் பாளையம் மண்டப தெருவை சேர்ந்த பன்னீர்செல்வம் (63), இவரது தங்கை தமிழ்மணி (50), தங்கை கணவர் அறச்செல்வம் (60) ஆகியோர் ஆவார்கள். ஏனைய 4 பேர் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தை சேர்ந்தவர்கள். பன்னீர்செல்வத்தின் மகன் மனோரஞ்சன் (34), அவரது மனைவி சங்கீதா (30). இவர்கள் இருவரும் இலண்டனில் வசித்து வருகின்றனர். இவர்கள் இருவரும் மற்றும் வள்ளி என்பவரும் படுகாயங்களுடன் இலண்டன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதேவேளை, உறவினர்கள் இந்திய தூதரகம் மூலம் உயிரிழந்தவர்களின் சடலங்களை இந்தியாவுக்கு கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை, விபத்தில் தாய், தந்தையை இழந்த 5 வயது சிறுமி ஷரவந்தி உயிருக்கு போராடி வரும் நிலையில் அவரது உறவினர்கள் அவசர விசா கோரி விண்ணப்பித்துள்ளனர். உயிருக்கு போராடி வரும் ஷரவந்திக்கு பர்மிங்கம் குழந்தைகள் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவசர சிகிச்சை பிரிவில் இருக்கும் குழந்தையை பார்த்துக் கொள்ள அங்கு உறவினர்கள் யாரும் இல்லை. இதனால் தங்களுக்கு அவசர விசா வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உயிர்ப்பலி எடுக்கும் நீலத் திமிங்கலம்!

## விளையாடும் விளையாட்டு

நீலத் திமிங்கலம் (blue whale game) விளையாட்டு என்பது, இணையம் மூலம் விளையாடப்படும் விளையாட்டு. பல்வேறு உலக நாடுகளில் இந்த விளையாட்டு பிரபல்யம் அடைந்துள்ளது. ரஷ்யாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரால் உருவாக்கப்பட்ட நீலத் திமிங்கலம் என்னும் விளையாட்டு, தற்பொழுது உலகெங்கும் பதின் பருவ இளைஞர்கள் பலரது உயிரைக் காவு வாங்கும் விளையாட்டாக உருவெடுத்துள்ளது.

இந்த விளையாட்டில் சேர்பவர்களுக்கு 50 நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இலக்கு வழங்கப்படும். அந்த இலக்கை அடைய வேண்டும். 50 நாட்களில் 50 சவால்களை முடிக்க வேண்டிய இந்த விளையாட்டு இறுதியில், விளையாடும் நபரை தற்கொலைக்கு இட்டுச்செல்வதால் இந்த கொடூர திமிங்கலத்திடம் சிக்கி உயிருடன் திரும்புவது அரிது.

முதலில் சாதாரணமாக தனியாக திகில் திரைப்படம் பார்த்தல், உயரமான இடங்களில் நின்று நிழற்படம் எடுத்து அனுப்புதல், சுடுகாட்டிற்கு நள்ளிரவில் தனியாகச் செல்லுதல் என்று துவங்கும் இந்த பட்டியலானது, உடலில் இரத்த காயங்களை உண்டாக்கி கொள்ளுதல், கத்தியால் திமிங்கிலத்தின் படத்தினை உடலில் வரைதல் என்று வலுவடைந்து இறுதியாக ஐம்பதாவது உங்களை தற்கொலை செய்து கொள்ளுமாறு தூண்டுவதில் முடியும்.



சுருக்கமாக மனோதத்துவ ரீதியாக உங்களை கொஞ்சம் கொஞ்சமாக தனிமைப்படுத்தி, கழிவிரக்கம் கொள்ளச் செய்து இறுதியில் தற்கொலைக்கு தூண்டுவதே இந்த அபாயகரமான நீலத் திமிங்கலம் விளையாட்டின் நோக்கமாகும். இறுதியாக 50வது நாளில் விளையாட்டில் பங்கேற்போர் தற்கொலை செய்து கொண்டு, அந்தப் படத்தைப் பகிர வேண்டும் என்று கூறப்பட்டு இருக்கும். இந்த விளையாட்டை விளையாடிய 130க்கும் மேற்பட்டோர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இந்தியாவில் தமிழர் (விக்னேஷ் வயது 19) ஒருவர் உட்பட இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சீனா, அர்ஜென்ரீனா ஆகிய நாடுகளில் அதிக தாக்கத்தை இந்த விளையாட்டு ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் நீல திமிங்கல விளையாட்டுக்கு மூளையாக செயல்பட்டு வந்த 17 வயது மாணவி மற்றும் வாலிபர் ஒருவரை ரஷ்ய அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதில் நீலத் திமிங்கலம் விளையாட்டுக்கு மூளையாக செயல்பட்டு வந்த 17 வயது மாணவியிடம் விசாரணை நடத்தியபோது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. அதாவது இந்த விளையாட்டில் பங்கேற்பவர்களுக்கு புதுப்புது சவால்களை அளிப்பதுடன், இறுதியில் தற்கொலை செய்ய உத்தரவிடுபவரும் இவர்தான் என கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு உடன்படாதவர்களிடம் உங்களை கொலை செய்வோம் என்றோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களை கொன்று விடுவோம் என்றோ மிரட்டி தற்கொலைக்கு தூண்டியுள்ளார். மேலும் இவரும் ஏற்கனவே நீலத் திமிங்கலம் விளையாட்டை விளையாடி இருப்பதுடன், அதன் இறுதி சவாலை (தற்கொலை) முடிக்காமல் மீண்டு வந்துள்ளார். பின்னர்தான் இந்த விளையாட்டின் அட்மினாக மாறி கட்டளையிடும் பணியை மேற்கொண்டு வந்துள்ளார். அவரது வீட்டில் அதிகாரிகள் சோதனையிட்ட போது, பலவீனமான இளசுகளுக்கு அளிக்க வேண்டிய சவால்கள் அடங்கிய கையேடு ஒன்றையும் கைப்பற்றினர். அந்த சிறுமியிடம் தொடர்ந்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இதைப்போல இந்த விளையாட்டில் பங்கேற்கும் இளம்பெண்களை தற்கொலைக்கு தூண்டி வந்த வாலிபர் ஒருவரையும் மொஸ்கோ அருகே கைது செய்தனர். விசாரணையின் அடிப்படையில் நாடு முழுவதும் தொடர்ந்து சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்படி நீலத் திமிங்கலம் விளையாட்டுக்கு மூளையாக செயல்பட்டு வருவோர் தொடர்ந்து கைது செய்யப்பட்டாலும், அதற்கு பலியாகும் உயிர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதுதான் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. நீல திமிங்கலம் விளையாட்டை முற்றிலும் இணையதளத்தில் இருந்து நீக்கும் நடவடிக்கைகள் குறித்து ரஷ்ய காவல்துறையினர் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, இத்தகைய கொடூர விளையாட்டுக்கு எதிராக சக மனிதர்கள் மீதான அன்பினை பரப்பும் 'பிங்க் திமிங்கலம்' என்னும் விளையாட்டும் பயன்பாட்டில் உள்ளது. இந்த விளையாட்டினை பிரேசிலினைச் சேர்ந்த வடிமைப்பளார் ஒருவர் தயாரித்துள்ளார். இந்த விளையாட்டு எந்த வித ஆபத்தும் இல்லாமல் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக உங்கள் உடலில் எளிதில் அழியக்கூடிய மார்க்கர் பேனா மூலமாக உங்களைப் பற்றிய ஒரு நல்ல விடயத்தினை எழுதிக் கொள்ளலாம். உங்களது தாத்தா, பாட்டியினை தொலைபேசியில் அழைத்துப் பேசுதல், கண்ணாடியினைப் பார்த்து உங்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் விதமாக உரையாற்றுதல், தெருவில் நின்று உங்களை நீங்களே விரும்புவதாக உரக்கச் சொல்லுதல் என இது செல்லும். ஐம்பதாவது நடவடிக்கையாக, உயிரை மாய்த்துக் கொள்ளும் நீலத் திமிங்கலம் போல் இல்லாமல், மற்றொரு உயிரை நீங்கள் முயற்சி செய்து காக்க வேண்டும் என்பதே இந்த விளையாட்டின் நோக்கமாகும். அன்பை பரப்புதலே அடிப்படை என்று இந்த விளையாட்டினை ஆரம்பித்தவர் கூறுகின்றார்.

# வடகொரியாவின் அணுச் சோதனையால் பசுபிக் பிராந்தியத்தில் தொடரும் பதட்டம்

உலக நாடுகளின் பலத்த எதிப்புகளுக்கு மத்தியில் வடகொரியா மீண்டும் ஹைட்ரஜோன் அணுக்குண்டுப் பரிசோதனையை கடந்த ஞாயிற்றுக்கிழமை (3ம் திகதி) நடத்தி உள்ளது. கொரிய தீபகற்பத்தில் அண்டை நாடான தென் கொரியாவுக்கு அச்சுறுத்தலாக திகழும் வடகொரியா தனது எல்லையில் அதிக அளவில் படைகளை குவித்து வைத்திருப்பதுடன், அணுகுண்டு, ஏவுகணை சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. இது 6வது சோதனை.

இதன் காரணமாக அமெரிக்காவும், ஐ.நாவும் வட கொரியா மீது பல்வேறு தடைகளை விதித்துள்ளது. குறிப்பாக டொனால்டு டிரம்ப் ஆட்சிக்கு வந்த பின்னர் வடகொரியாவின் செயல்பாட்டிற்கு அமெரிக்கா தொடர்ந்து கடும் எதிர்ப்பை பதிவு செய்து வருகிறது.

கடந்த வாரம் ஜப்பானிய கடல் பகுதிக்கு மேலாக வடகொரிய ஏவுகணை பறந்தது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இப்போது எதிர்ப்புகளுக்கு மத்தியில் வடகொரியா மீண்டும் அதிரடியாக ஹைட்ரஜன் வெடி குண்டை பரிசோதனை செய்துள்ளது. இது குறித்து, இன்று நடத்திய ஹைட்ரஜன் அணுக்குண்டுச் சோதனை மிகவும் நேர்த்தியான வெற்றியை பெற்றது என அந்நாட்டு அரசு




ஊடகம் தகவல் தெரிவித்துள்ளது. இந்த ஹைட்ரஜன் அணுக்குண்டை மிக நீண்ட தூர இலக்கை கொண்ட ஏவுகணையுடனும் இணைத்து செயல்படுத்த முடியும் எனவும் அந்நாடு அறிவித்துள்ளது. இதன் காரணமாக தொடர்ந்து தென் பசுபிக் பிராந்தியத்தில் பதற்றம் நிலவுகிறது.

முன்னதாக, ஜப்பான் தீவை கடந்து செல்லும் வகையில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதற்கு ஐ.நா பாதுகாப்பு சபை கடும் கண்டனம் தெரிவித்ததுசுனான் என்ற பகுதியிலிருந்து முதல் முறையாக ஏவப்பட்ட அந்த ஏவுகணை வானில் 550 கிலோ மீற்றர் உயரத்தில், 2,500 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து பசிபிக் கடலில் விழுந்தது. அப்போது அந்த ஏவுகணை ஜப்பானின் ஹொகைடோ தீவை கடந்து சென்றது. இதுகுறித்து ஐ.நா பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் உடனடியாக ஆலோசிக்க வேண்டும் என ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகள் வலியுறுத்தின. இதையடுத்து 15 நாடுகளின் உறுப்பினர்கள் அடங்கிய ஐ.நா பாதுகாப்பு சபையின் அவசரக் கூட்டம் கூட்டப்பட்டது.

வடகொரியாவுக்கு கண்டனம் தெரிவிக்கும் அறிக்கையில் கையெழுத்திட சீனாவும், ரஷ்யாவும் சம்மதித்தன. அதன்பின் வெளியிடப்பட்ட கண்டன அறிக்கையில் கூறியிருப்பதாவது, வடகொரியாவின் சமீபத்திய ஏவுகணை சோதனை, கொரியா தீபகற்ப பகுதியில் மட்டும் அல்ல, ஐ.நா உறுப்பு நாடுகள் அனைத்துக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. ஜப்பானை கடந்து ஏவுகணை சோதனை நடத்தியது ஐ.நா பாதுகாப்பு சபைக்கு கவலை அளிக்கிறது. அணு ஆயுத திட்டங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் வடகொரியா உடனே நிறுத்த வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனை குறித்து வடகொரிய அதிபர் கிம் கூறுகையில், தொலைதூர ஏவுகணை சோதனை மிகுந்த திருப்தியை அளித்துள்ளது. பசிபிக் பெருங்கடலை குறிவைத்து மேலும் இதைப்போல ஏவுகணைகள் வீசுவோம் என வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வடகொரியாவின் சோதனைக்குப் பதிலடியாக அமெரிக்கா ஏவுகணை அழிப்புச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இது குறித்து வெள்ளை மாளிகை வட்டாரங்கள் கூறுகையில், கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து, எதிரிகளின் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழிக்கும் அதிநவீன ஏவுகணை சோதனையை அமெரிக்கா வெற்றிகரமாக நடத்தியது. அமெரிக்காவின் ஹவாய் தீவில் இருந்து செலுத்தப்பட்ட இடைமறிப்பு ஏவுகணை, கலிபோர்னியாவின் வேன்டென்பெர்க் விமானப் படை தளத்தில் இருந்து ஏவப்பட்ட மாதிரி ஏவுகணையைதுல்லியமாகஇடைமறித்துதாக்கிஅழித்தது.

இதேவேளை, இதற்கு முன்னதாக வடகொரியா தலைநகர் பியோங்கியாங்கின் கானான் பகுதியிலிருந்து சக்திவாய்ந்த ஏவுகணையை விண்ணில் செலுத்தி சோதனை செய்திருந்தது. அதிலும் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுதளத்திலிருந்து ஏவுகணை சோதனை நடத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சோதனை, வடகொரியாவின் 13வது ஏவுகணை சோதனை என்பது குறிப்பிடத்தக்கது. உலக நாடுகளின் எச்சரிக்கையையும் மீறி ஏவுகணை சோதனையை நடத்தி கொரிய தீபகற்பத்தில் போர்ப் பதற்றத்தை வடகொரியா அதிகப்படுத்தி வருகிறது.

இதுஇவ்வாறிருக்க, வடகொரிய அதிபரைப் படுகொலை செய்யும் திட்டம் ஒன்று கசிந்துள்ளது. வடகொரியாவிற்குள் வெளிநாட்டவர்கள் இலகுவில் நுழையமுடியாது. அவ்வாறு நுழையும் ஒருவரைக் கண்காணிப்பதற்கு குறைந்தது இருவர் நியமிக்கப்பட்டுவிடுவார்கள். எனவே எந்த ஒரு குழுவையும் அனுப்பி அமெரிக்காவால் எந்த ஒரு காரியதையும் வட கொரிய மண்ணில் வைத்து செய்வது என்பது மிக மிக கடினமான வேலை.

ஆனால் தென் கொரியர்கள் பார்பதற்கு வட கொரியர்கள் போலவே இருப்பார்கள். இதனால் அவர்கள் எல்லை கடந்து வட கொரியாவுக்குள் சென்று, அங்கே ஒரு தாக்குதலை நடத்த அமெரிக்கா திட்டம் தீட்டிக் கொடுத்துள்ளது. ஆனால் அது கசிந்துவிட்டது என்கிறார்கள். தென்கொரிய இராணுவத்தின் சிறப்பு பிரிவிலுள்ள சிலரை தெரிவு செய்து அவர்களை தற்கொலைப் படை போல வட கொரியாவுக்குள் அனுப்ப தென் கொரியா திட்டம் தீட்டியுள்ளது. அவர்கள் குண்டுகளை கொண்டு சென்று வடகொரிய அதிபர் கிம் ஜங் உன்னை படுகொலை செய்வார்கள். ஒரு தற்கொலைப் படையணியை, வட கொரியாவுக்குள் அனுப்பி அன் நாட்டு அதிபரை கொல்வதற்கு அமெரிக்கா திட்டம் தீட்டிக் கொடுக்க இதனை தென் கொரியா செயல்படுத்தித் தொடங்கியிருந்ததாக ஊடகங்களில் செய்தி கசிந்துள்ளது.

## ஒரு மில்லியனை தாண்டிய அகதிகள்!

தென் சூடான் உள்நாட்டுப் போரால் அங்கிருந்து உகாண்டாவுக்கு தப்பிச்செல்லும் தெற்கு சூடான் அகதிகளின் எண்ணிக்கை ஒரு மில்லியனை (பத்து இலட்சம்) தாண்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது. மேலும், அகதிகளாக வந்தவர்களில் 85 வீதம் பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உடனடியாக




கூடுதல் ஆதரவளிக்குமாறு சர்வதேச சமூகத்தை ஐ.நா. அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், குறைந்தது 10 இலட்சம் அகதிகள், சூடான், எத்தியோப்பியா, கென்யா, கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் மத்திய ஆபிரிக்க குடியரசு ஆகிய நாடுகளுக்கு தப்பிச் சென்றதாக அந்த அமைப்பு கூறியுள்ளது. 2013ம் ஆண்டில் இருந்து நடந்த பல அட்டூழியங்கள் காரணமாக மூண்ட உள்நாட்டுப் போரால், தெற்கு சூடான் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. 2013ம் ஆண்டு யூலை மாதத்தில், தெற்கு சூடான் அதிபர் சல்வா கிர், நாட்டின் துணை அதிபரான ரெய்க் மச்சாரை பதவிநீக்கம் செய்தார், அதன்பிறகு மேலும் பல சர்ச்சைகள் கிளம்பின. இதனால், இவ்விரு தரப்பினருக்கும் ஆதரவான படையினர் மோதலில் ஈடுபட ஆரம்பித்தனர். இந்த வன்முறை சூழல் காரணமாக தெற்கு சூடானில் இருந்து அகதிகளாக உகாண்டா, கென்யா போன்ற நாடுகளுக்கு படையெடுக்க தொடங்கினர். தங்கள் நாட்டுக்கு வருகைபுரியும் அகதிகளை வரவேற்று அவர்களுக்கு ஆதரவளிக்கும் உகாண்டாவின் செயலை ஐ.நா. அமைப்பு மற்றும் மற்ற சர்வதேச நிறுவனங்கள் பாராட்டியுள்ளன. 2016ம் ஆண்டில், உலகில் வேறு எந்த நாட்டையும் விட உகாண்டாவுக்கு அதிக அகதிகள் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மனித இனம் அழிந்து போகுமா?

ஆண்களின் விந்தணு எண்ணிக்கை தற்போதைய வேகத்தில் தொடர்ந்து குறைந்துக் கொண்டே சென்றால், மனித இனத்தின் அடையாளமே அழிந்து போய்விடலாம் என்று அஞ்சப்படுகிறது. ஆரோக்கியமற்ற மேற்கத்தேய வாழ்க்கை முறையால் உந்தப்பட்ட மனிதர்கள் விந்தணு எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி அடைந்துள்ளனர். 1970 முதல் கருத்தரிப்பில் 60 சதவீதம் வீழ்ச்சி காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. வட அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் கடந்த 40 ஆண்டுகளாக தொடர்ந்து ஆண்களின் விந்தணுக்கள் குறைந்து வருகிறது. விந்தணுக்களின் எண்ணிக்கை தற்போது பாதியாக குறைந்துவிட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

1973 முதல் 2011ம் ஆண்டுவரை வரை மேற்கொள்ளப்பட்ட 185 ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தொற்று நோய் நிபுணரான மருத்துவர் ஹகாயி லெவின், இதே போக்கு தொடர்ந்தால், மனித இனம் அழிந்து போகும் வாய்ப்பு அதிகமாகும் என்று எச்சரித்துள்ளார். வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்துக் கொள்ளாவிட்டால், எதிர்காலத்தில் நடக்கப்போகும் அசம்பாவிதங்களை நினைத்தால் கவலையாக இருக்கிறது என்கிறார்.

வட அமெரிக்கா, ஐரோப்பா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் தென் அமெரிக்காவில் வசிக்கும் ஆண்களுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறும் மருத்துவர் லெவின், ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் இந்த அளவு பாதிப்பு இல்லை என்கிறார். ஆனால் ஆசியா மற்றும் ஆபிரிக்கா நாடுகளில் இதுவரை பெரிய அளவிலான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படாததை ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நாடுகளில் இந்தப் பிரச்சினை தற்போது இல்லாவிட்டாலும், அவர்களும் என்றாவது ஒருநாள் இந்தப் பிரச்சனையை சந்திக்க வேண்டியிருக்கும் என்று மருத்துவர் லெவின் கூறுகிறார். எனினும், மனித இனப்பெருக்கம் (மனிதர்களில் இனப்பெருக்க செயல்முறை) குறித்த இந்த அறிக்கை மீது சில நிபுணர்கள் சந்தேகம் எழுப்புகின்றனர்.

### அமெரிக்க கடைசி படையினனும் மரணம்

வடகொரியாவில் வசித்து வந்த அமெரிக்காவின் கடைசி இராணுவத்தினன் என அறியப்பட்டு வந்த ஜேம்ஸ் டிரெஸ்நாக், தனது 74வது வயதில் கடந்த ஆண்டில் மரணம் அடைந்துவிட்டார் என்பதை அவரது மகன்கள் இப்போது உறுதி செய்துள்ளனர்.

### தடையை மீறினால் சிறை

கென்யாவில் சுற்றுச்சூழலை காக்கும் பொருட்டு பிளாஸ்டிக் பைகளுக்கு நாடு முழுவதும் தடை விதிக்கப்பட்டு உள்ளது. தடையை மீறி பிளாஸ்டிக் பைகளை உற்பத்தி செய்தாலோ, விற்பனை செய்தாலோ அல்லது பயன்படுத்தினாலோ அவர்களுக்கு 38 ஆயிரம் டொலர் அபராதம் அல்லது 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### யேமன் தொடர்பில் ஐ.நா விசாரணை வேண்டும்

யேமனில் இடம்பெற்றுவரும் போர், மனிதாபிமான நெருக்கடியாக மாற்றமடைந்து, அங்கு துன்புறுத்தல்களும் துஷ்பிரயோகங்களும் இடம்பெற்று வருகின்றன எனக் குற்றஞ்சாட்டியுள்ள, 57 மனித உரிமை அமைப்புகள், அவை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் விசாரணை



நடத்தப்பட வேண்டுமெனக் கோரியுள்ளன. யேமனில், பாரதூரமான அளவில், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மீறப்பட்டுள்ளதாகவும், சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகின்றன எனவும், இதில் கையெழுத்திட்ட அமைப்புகளுள் ஒன்றான மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. அத்தோடு, சவூதி தலைமையிலான கூட்டணி, சட்டவிரோதமான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும், அவை போர்க் குற்றங்களாகக் கருதப்படக்கூடும் எனவும், கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

### வீதியில் தனியாக நடமாடிய பொம்மை

ஜப்பானில் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் தனியாக நடமாடும் உலகின் முதல் உயிருள்ள பெண் பொம்மை இது. இப் பொம்மையின் நடமாட்டம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. லூலு ஹசிமோட்டோ (Lulu Hashimoto)



எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த பொம்மைக்கென பிரத்யேகமாக உடைகள் வடிவமைக்கப்பட்டு அவை விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளன. டோக்கியோ நகரில் லூலு ஹசிமோட்டோ அழகாக

→ 20




நடந்து செல்லும் காட்சிகளும், நடனமாடும் விதமும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியிருக்கிறது. அழகிப் போட்டி ஒன்றில் அரை இறுதிக்குத் தேர்வான 134 மாதிரிகளில் ஹசிமோட்டோவும் ஒன்று. இந்த பொம்மையை ஜப்பானைச் சேர்ந்த 23 வயதான பே'ன் டிசைனர் ஹிடோமி கோமகி வடிவமைத்துள்ளார்.

## பரிசு வென்ற பெண்மணி வேலையை விட்டார்

அமெரிக்காவில் நடைபெறும் மிகப் பெரிய அதிஷ்டலாபச் சீட்டு முறையான பவர்பால் குலுக்கலில், மேவிஸ் வான்ச்சிக் என்ற 53 வயது பெண்மணி 758.7 மில்லியன் டொலர் பரிசை வென்றுள்ளார். அமெரிக்காவில் இதுவரை அதிஷ்டலாபச் சீட்டுகள் மூலம் தனி ஒருவர் இவ்வளவு பெரிய பரிசுத் தொகையை வென்றிருப்பது இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. இதேப்போன்ற பவர்பால் குலுக்கலில் முன்பு 3 பேர் பரிசுத் தொகையை பகிர்ந்து கொண்டுள்ளனர். ஆனால், தற்போதுதான் ஒரு பெண்மணி தனி நபராக இந்த தொகையை பரிசாகப் பெற்றுள்ளார். அவருக்கு பரிசுத் தொகை விழுந்திருப்பது குறித்து தகவல் தெரிந்ததும், உடனடியாக அவர் மருத்துவ மையத்தில் 32 ஆண்டுகளாகச் செய்து வந்த தனது வேலைக்கு முழுக்குப் போட்டார். ஓடி ஓடி எனது காலம் முடிந்துவிடும் என நினைத்தேன். கடவுள், எனது ஓய்வுக் காலத்தை முன் கூட்டியே கொடுத்துவிட்டார் என்கிறார்.


## குழந்தைக்குப் பெயர் எக்லிப்ஸ்

அமெரிக்காவில் ஓகஸ்ட் 21ம் திகதி மிக அரிதான சூரிய கிரகணம் நிகழ்ந்தது. அன்று பிறந்த குழந்தைக்கு அதன் பெற்றோர் 'எக்லிப்ஸ்' என பெயர் சூட்டியுள்ளனர். சுமார் 99 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவில் முழு சூரிய கிரகணம் ஏற்பட்டது. அன்றைய தினம் காலை ஃப்ரீடம் – மைக்கேல் யுபேங்க்ஸ் தம்பதிக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. நிறைமாத கர்ப்பிணியாக இருந்த ஃப்ரீடமுக்கு, செப்டம்பர் 3ம் திகதி குழந்தை பிறப்புக்கான திகதி குறிப்பிடப்பட்டிருந்தது. அவர்களும் தங்களது பெண் குழந்தைக்கு வொய்லெட் என பெயர் சூட்ட திட்டமிட்டிருந்தனர். ஆனால் எதிர்பாராதவிதமாக ஓகஸ்ட் 21ம் திகதி, அமெரிக்காவில் முழு சூரிய கிரகணத்தன்று குழந்தை பிறந்தது. இது குறித்து குழந்தையின் தாய் ஃப்ரீடம் கூறுகையில், எங்கள் இரண்டாவது பெண் குழந்தைக்கு 'எக்லிப்ஸ்' என பெயர் சூட்ட முடிவு செய்திருப்பது குறித்து அறிந்ததும் எங்கள் உறவினர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஆனால் தற்போது இது மிகச் சிறப்பான முடிவு என்று பாராட்டுகிறார்கள். 'எக்லிப்ஸ்' என்று பெயர் வைத்துள்ளோம். ஆனால், நாங்கள் அவளை கிளிப்சி என்று தான் அழைக்க உள்ளோம் என்கிறார்.

## 80 ஆண்டுகளுக்கு முன்பே செல்பேசி பாவனை!

அமெரிக்காவில் 80 ஆண்டுகளுக்கு முனபே ஏழைகளின் கைகளில் அதிநவீன ஸ்செல்பேசிகள் இருந்தது போன்ற ஆதாரம் கிடைத்துள்ளது. பத்து ஆண்டுகளுக்கு முன்புதான் செல்பேசிகள் பயன்பாட்டுக்கு வந்தது. ஆனால், அமெரிக்காவில் 80 ஆண்டுகளுக்கு முன் சாதாரண ஏழை மக்களின் கைகளில் கூட இந்த செல்பேசிகள் இருந்தது போன்ற ஆதாரம், ஒரு சுவர் ஓவியத்தின் மூலம் கிடைத்துள்ளது. மதர்போர்ட் (motherboard magazine) என்ற இணையப் பத்திரிகை இந்த சுவாரசிய தகவலை வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாகாணத்தில் உள்ள ஸ்பிரங்பீல்ட் நகரத்தில் அம்பெர்டோ ரோமனோ என்ற ஓவியர் 1937ம் ஆண்டில் வரைந்துள்ள சுவர் ஓவியம், அங்குள்ள அருங்காட்சியகத்தில் உள்ளது. இந்த ஓவியத்தில் ஸ்பிரிங்பீல்ட் நகரத்தை உருவாக்கிய வில்





லியம் பைன்ஜன் இளஞ்சிவப்பு நிற கோட் அணிந்து ஒரு இடத்தில் அமர்ந்திருக்கிறார். அவருக்கு கீழே சட்டை கூட அணியாமல் அமர்ந்துள்ள உள்ளூர் அமெரிக்கர் ஒருவரின் கையில் நவீன செல்பேசி போன்றதொரு சாதனம் இருக்கிறது. அவர் அந்த செல்பேசி மூலம் தன்னை செல்பி எடுப்பதுபோல் ஓவியம் உள்ளது. அப்பிள் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி டிம் குக், கடந்தாண்டு ஆம்ஸ்டெர்டாமில் உள்ள உலக புகழ்பெற்ற ரிஜிக்ஸ் அருங்காட்சியகத்துக்கு, ஐரோப்பியாவின் முன்னாள் ஆணையர் நீலி குரோசுடன் சென்று பார்வையிட்டார். அங்குள்ள ஓவியங்களை பார்த்து கொண்டே சென்ற குக், ஒரு ஓவியத்தின் அருகில் சட்டென்று நின்றார். அது 17ம் நூற்றாண்டை சேர்ந்த ஓவியம். அந்த ஓவியத்தில் பெண் ஒருவரின் கையில் இப்போதைய ஐபோன் மொடலில் செல்பேசி இருப்பதை கண்டு குக் ஆச்சர்யப்பட்டார். இந்த ஓவியத்தை பெய்ட்டர் டி ஹச் என்பவர் வரைந்திருக்கிறார். அப்போது, என்ன குக் ஐபோன் எங்கு, எப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிகிறதா? என்று நீலி கிண்டலாக கேட்டார். அதற்கு பதிலளித்த குக், இதை நம்பவே முடியவில்லை. சத்தியமாக அது ஐபோன் தான் என்று கூறியதாக சமீபத்தில் செய்திகள் வெளியாகின.

# சவுதி மன்னரின் விடுமுறைக்கு 100 மில்லியன் டொலர் செலவு!

மொராக்கோ நாட்டில் ஒரு மாத காலம் விடுமுறையை கழிக்க சவுதி மன்னர் சுமார் 100 மில்லியன் டொலர் பணத்தை செலவு செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. சவுதி மன்னர் சல்மான் கோடை கால விடு




முறையை தமக்கு மிகவும் பிடித்த மொராக்கோ நாட்டில் உள்ள டேன்ஜியர் பகுதியில் மிகவும் ஆடம்பரமாக கழித்துள்ளார். அவருடன் அரச குடும்பத்தினர் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட உதவியாளர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த விடுமுறையில் பயணித்துள்ளனர். டேன்ஜியர் பகுதியில் அமைந்துள்ள 74 ஏக்கர் பரப்பளவு கொண்ட தமக்கு சொந்தமான அரண்மனையில் மன்னர் சல்மான் தங்கியிருந்துள்ளார். ஒரு மாத காலம் தங்கிய மன்னரின் பணிவிடைக்காக 200 கார்கள் எந்த நேரத்திலும் தயார் நிலையில் இருந்ததாகவும், அதில் பெரும்பாலானவை எப்போதும் பயன்பாட்டில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. மன்னரின் வருகையை முன்னிட்டு கடந்த ஓராண்டு காலம் இந்த அரண்மனை விரிவாக புதுப்பிக்கப்பட்டது. மொராக்கோ வந்திறங்கிய மன்னரை அந்நாட்டு பிரதமர் சாதேடியன் ஒத்மனி விமான நிலையம் வந்து வரவேற்றுள்ளார்.

புதுப்பிட்டப்பட்ட புது அரண்மனையில் புதிதாக உலங்குவானூர்தி தரை இறங்கும் வகையில் புதிய தளம் ஒன்றையும், புதிதாக சில குடியிருப்புகளையும் கட்டி முடித்துள்ளனர். அது மட்டுமின்றி பாதுகாப்புக்காக மொராக்கோ அரசின் 30 பேர் கொண்ட சிறப்பு படையும் வழங்கப்பட்டிருந்தது. மன்னரின் இந்த திடீர் விடுமுறை கொண்டாட்டமானது சர்ச்சையை எழுப்பியிருந்தாலும் அது அந்த நாட்டு ஊடகங்களில் வெளியாவதில்லை.

சவுதி அரேபியாவில் தனி நபர் ஒருவருக்கு சராசரி ஆண்டு ஊதியமானது 33 ஆயிரம் டொலர் என்ற நிலையில் மன்னரின் ஒரு மாத கால விடுமுறைக்கு 100 மில்லியன் டொலர் செலவு செய்திருப்பது மக்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதாக கூறப்படுகிறது. ஆனாலும் மன்னரின் இந்த வருகையானது மொராக்கோ நாட்டின் சுற்றுலாத்துறைக்கு 1.5 சதவீதம் அதிக இலாபம் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது.

## பிலிப்பைன்ஸ் அதிபரின் புதிய உத்தரவால்! படுகொலைகள் அதிகரிக்கும் என அச்சம்

பிலிப்பைன்சில் கைது செய்ய முற்படும்போது, அந்தக் கைதை, வன்முறையான வகையில் எதிர்க்கும் நபர்களை, முட்டாள்கள் என வர்ணித்த அந்நாட்டு ஜனாதிபதி றொட்ரிகோ டுட்டேர்ட்டே, அவர்களைச் சுட்டுக் கொல்ல முடியுமென, அந்நாட்டுக் காவல்துறையினிடம் தெரிவித்துள்ளார். பிலிப்பைன்சில் மேற்கொள்ளப்பட்டுவரும், போதைக்கு எதிரான போர் எனும் நடவடிக்கையால், ஏராளமானோர் கொல்லப்பட்டுவரும் நிலையிலும், சில தினங்களுக்கு முன்னர், இதே நடவடிக்கையால் கொல்லப்பட்ட இளைஞனின் மரண வீட்டுக்கு, பல நூற்றுக்கணக்கானோர் சென்று, தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருந்த நிலையிலுமே, ஜனாதிபதியின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. இந்த உத்தரவால் மேலும் உயிரிழப்புகளை ஏற்படுத்துமென அஞ்சப்படுகிறது.

நீங்கள் கைதுசெய்யும் நபர், அதை எதிர்த்தால், அதை முறியடிக்க வேண்டிய பொறுப்பு, உங்களுக்கு உண்டு. அவர் அதைத் தடுத்தால், அது வன்முறையானதாக இருந்தால், அந்த முட்டாள்களைக் கொல்வதற்கு உங்களுக்கு முடியும். இது எனது கட்டளை என்று அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், கொலைகளும் சட்டரீதியற்ற கொலைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனத் தெரிவித்த அவர், தங்களது கடமைகளை ஆற்றும் போது, சட்டத்தை நிலைநிறுத்த வேண்டுமெனவும் அவர் கூறினார். கடந்தாண்டு யூனில், ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜனாதிபதி டுட்டேர்ட்டே, போதைக்கு எதிரான இந்த யுத்தத்தை ஆரம்பித்தார். அதன் காரணமாக, ஏராளமானோர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள நிலையில், இதற்கு ஜனாதிபதியின் ஆசீர்வாதம் உண்டு எனக் குற்றஞ் சாட்டப்படுகிறது.

## தொடரும் போர்க் கப்பல் விபத்துகள்

### ஆபத்து என சீன ஊடகம் எச்சரிக்கை

### அமெரிக்க கடற்படைதளபதி பதவி நீக்கம்

அமெரிக்காவின் போர்க்கப்பலான யு.எஸ்.எஸ். ஜோன் மக்கெயின் கடந்த 21ம் திகதி மலேசியாவின் மலாக்கா நீரிணை பகுதியில் சென்று கொண்டிருந்த போது, நைஜீரிய நாட்டு சரக்கு கப்பலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் 10 மாலுமிகள் கடலில் மூழ்கிப் பலியானர்கள். 5 பேர் படுகாயமடைந்தனர். போர்க் கப்பல் விபத்துக்குள்ளானது தொடர்பாக, அமெரிக்க 7வது கடற்படைப் பிரிவுத் தளபதி ஜோசப் ஆகாயின் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். கடந்த இரண்டு மாதங்களில் அமெரிக்க கடற்படை சந்திக்கும் இரண்டாவது மோதல் விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கெனவே, ஜப்பானையொட்டிய கடல் பகுதியில் அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான



யுஎஸ்எஸ் ஃபிட்ஸ்கெரால்டு போர்க் கப்பல், இதேபோல் சரக்குக் கப்பலுடன் கடந்த யூன் மாதம் மோதி ஏற்பட்ட விபத்தில் 7 மாலுமிகள் உயிரிழந்தனர். அந்தக் கப்பலும், 7வது கடற்படைப் பிரிவைச் சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், அமெரிக்கக் கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

# அமெரிக்காவைப் புரட்டியெடுத்தது புயல்!

பயங்கரவாதத்தால் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலோ இல்லையோ ஆனால் இயற்கையால் அமெரிக்காவிற்கு எப்போதும் அச்சுறுத்தல் இருந்துகொண்டே இருக்கின்றது என்பதை இன்னொரு புயல் உணர்த்திவிட்டுச் சென்றிருக்கின்றது.

அமெரிக்காவை சக்தி வாய்ந்த 'ஹார்வி (Harvey)' புயல் கடந்த 26ம் திகதி கடுமையாகத் தாக்கியதில் பேரழிவை அந்நாட்டின் மாநிலம் ஒன்று சந்தித்திருக்கின்றது. டெக்ஸாஸ் மாகாணத்தை மணிக்கு 215 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கிய புயல் பயங்கர சேதத்தை விளைவித்தது. புயலைத் தொடர்ந்து கடும் மழை பெய்ததை அடுத்து மாகாணத்தின் பல பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. புயல் மழைக்கு 30 பேர் வரை பலியாகி, பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதில் வெள்ளத்தில் இருந்து தப்பிக்க வாகனத்தில் புறப்பட்டுச் சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 குழந்தைகள் உட்பட 6 பேர் பலியானது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.




புயலால் மின்கம்பங்கள் சேதமடைந்ததையடுத்து ஆயிரக்கணக்கான வீடுகளில் மின் இணைப்பு முழுமையாகத் துண்டிக்கப்பட்டது. மாகாணத்தின் பெரும் பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. மாகாணம் முழுவதும் பிரதான விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. கல்வி நிலையங்கள், அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. புயல் மழையால் டெக்சாஸ் மாகாணம் மற்றும் அண்டைப் பகுதிகளில் 1.3 கோடி பேர் பாதிக்கப்பட்டள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. ஏராளமான வாகனங்கள் வெள்ளத்தில் மூழ்கின. மின் கம்பங்கள் சரிவு, சாலைகள் சேதம், மேம்பாலங்கள் சேதம் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் கோடிக்கணக்கான டொலர் பெறுமதியான சொத்தழிவு நேரிட்டுள்ளது. மீட்புப் பணியில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டனர். வெள்ளத்தில் சிக்கிய மக்களை மீட்க 16 விமானங்கள் இரவு, பகலாக பணியில் ஈடுபடுத்தப்பட்டன.

சுமார் 30 ஆயிரம் பேர் உள்ளரங்குகள் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட முகாம்களில் தங்க வைக்கப் பட்டனர் என்று மாகாண ஆளுநர் கிரெக் ஆபட் கூறினார். மாகாணத்தின் மிகப் பெரிய நகரமும் அமெரிக்காவின் நான்காவது மிகப்பெரிய நகரமுமான ஹஸ்டன் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹஸ்டனில் மட்டுமே 16 உலங்குவானூர்திகள் இரவும் பகலும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளன என்று அந்நகரபிதா சில்வஸ்டர் டர்னர் தெரிவித்தார்.

இதேவேளை, நெடுஞ்சாலைகளில் பெரும் வாகனங்களையும் ஹார்வி புயல் புரட்டிப் போட்டது. கட்டட இடிபாடுகள், வேருடன் சாய்ந்த மரங்கள், பெயர்ந்து விழுந்த மின் கம்பங்கள் ஆகியவற்றை அகற்றும் பணிகளில் அவசரகால மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். 2005ம் ஆண்டு தாக்கிய கத்ரினா புயலால் ஏற்பட்ட ஆழமான வடுக்களை தாங்கியுள்ள லூசியானாவில் 12 ஆண்டுகளுக்கு பின் ஹார்வி புயல் மீண்டும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. 12 ஆண்டுகளுக்குப் பிறகு அதிக சேதங்களை விளைவித்த புயலாக ஹார்வி கருதப்படுகிறது என்று அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். சேத விவரங்கள் குறித்து அதிகாரிகள் மதிப்பிட்டு வருகின்றனர். புயல் காரணமாக மழையின் அளவு 80 செ.மீக்கும் அதிகமாக இருந்துள்ளது. புயலைத் தொடர்ந்து பெய்த இந்த மழை 500 ஆண்டுகள் காணாத மழைஎன்றும் வானியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

ஹார்வி புயல் பாதித்த பகுதிகளை அதிபர் டிரம்ப் நேரில் பார்வையிட்டார். புயல் மற்றும் வெள்ள பாதிப்பை நாட்டின் பேரழிவு என பிரகடனம் செய்திருந்த டிரம்ப், அங்கு நிவாரண பணிகளை மேற்கொண்டு வரும் அதிகாரிகளை வெகுவாக பாராட்டினார்.

இதற்கிடையே டெக்சாஸ் மாகாணத்தில் காரஸ்பை என்ற இடத்தில் உள்ள இரசாயன ஆலையில் வெள்ளம் புகுந்துள்ளது. இதனால் அங்கு எந்த நேரத்திலும் வெடிப்பு நிகழும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே ஆலையை சுற்றி சுமார் 3 கி.மீ. தூரத்தில் வசித்துவரும் மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

மற்றொருபுறம் ஹஸ்டன் நகரில் இரவு நேரங்களில் மர்ம நபர்கள் போலீசார் போல வேடம் அணிந்து பொதுமக்களிடம் வழிப்பறி மற்றும் திருட்டு சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக அந்த நகரில் இரவு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

7-ஆவது கடற்படைப் பிரிவின் தளபதியாக உள்ள ஜோசப் ஆகாயின், இனியும் அந்தப் படைப் பிரிவை திறம்பட வழிநடத்துவார் என்ற நம்பிக்கை குறைந்து விட்டது. எனவே, அவர் அந்தப் பொறுப்பிலிருந்து விலக்கப் படுகிறார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2015ம் ஆண்டு முதல் 7வது கடற்படைப் பிரிவுக்குத் தலைமை வகிக்கும் ஜோசப் ஆகாயின், இன்னும் சில மாதங்களில் ஓய்வு பெறவுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. அவருக்குப் பதிலாக, ரியர்அட்மிரல் பில் சாயர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, மலேசியாவின் மலாக்கா நீரிணை-விபத்து ஏற்படுத்திய அமெரிக்க கடற்படை குறித்து சீன ஊடகம் ஒன்று கடுமையாக விமர்சனம் செய்துள்ளது. அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில், இந்த விபத்து தொடர்பான விசாரணை முடிந்து நிலையான முடிவுக்கு வர இன்னும் பல நாட்கள் ஆகும். ஆனால் அமெரிக்க கடற்படை, ஆசிய - பசிபிக் கடற்பகுதியில் தனது செயல்பாடுகளை தொடங்கியதில் இருந்து அப்பகுதியில் வணிக ரீதியான கடற்போக்குவரத்திற்கு பெரும் ஆபத்துகளை ஏற்படுத்துகிறது என்பதில் சந்தேகமே இல்லை. ஆசிய கடலில் அமெரிக்காவின் கடற்படை ஒரு ஆபத்தான தடையாகி வளர்ந்து வரும் நிலையில், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் சேர்ந்து தென் சீனக் கடலுக்காக ஒரு கோட்பாட்டை உருவாக்கும் கூட்டு முயற்சிகளில் சீனா ஈடுபட்டு வருகிறது. மேலும் சீனாவின் தீவுகளில் பாதுகாப்பிற்காக ஐந்து கலங்கரை விளக்கங்களை சீனா அமைத்துள்ளது. அதிக பாதுகாப்பு வசதிகள் உள்ள போதும் விபத்து எவ்வாறு நேர்ந்தது என மக்கள் யோசனை செய்வார்கள் எனவும் அந்த ஊடகம் கூறியுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, இந்தியப் பெருங்கடலில் சீன இராணுவம் போர்ப் பயிற்சி மேற்கொண்டது. இந்தப் பயிற்சியில் அதிக நவீன ஏவுகணைகளும், போர்க் கப்பல்களும் பயன்படுத்தப்பட்டதாக சீன அரசுப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. எனினும், இந்தியப் பெருங்கடலில் எந்த இடத்தில் போர்ப் பயிற்சி நடைபெற்ற என்பது தெரிவிக்கப்படவில்லை. பொதுவாக இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீன கடற்படை இதுபோன்ற பயிற்சிகளை நடத்துவதில்லை. இப்போது, இந்தியாவுடன் எல்லைப் பிரச்னை நீடித்து வரும் நிலையில், இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனா போர்ப் பயிற்சி மேற்கொண்டது. இந்தியாவுக்கு விடுக்கப்படும் மறைமுக எச்சரிக்கையாகவே கருதப்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்பு, அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகளில் கடற்படையினர் இணைந்து இந்தியப் பெருங்கடல் பகுதியில் கூட்டு இராணுவப் பயிற்சி மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கு ஆப்பிரிக்க நாடான ஜிபூட்டியில் இந்தியப் பெருங்கடலை ஒட்டிய பகுதியில் சீனா தனது முதல் வெளிநாட்டு கடற்படைத் தளத்தை அமைத்துள்ளது. மேலும், சிறீலங்காவின் ஹம்பாந்தோட்ட துறைமுகத்தை பயன்படுத்திக் கொள்ள 99 ஆண்டு குத்தகை ஒப்பந்தத்தையும் சீனா பெற்றுள்ளது. இது தவிர பாகிஸ்தானின் குவாதர் துறைமுகத்தை தனது இராணுவத்தினர் பயன்படுத்தவும் அந்நாட்டுடன் சீனா ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. குவாதர் துறைமுகம் இந்தியாவுக்கு அருகே அரபிக் கடலில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானில் 11,000 அமெரிக்கப் படையினர்!

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள தமது படையினரின் எண்ணிக்கையை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. அமெரிக்கஇராணுவத்தினின்எண்ணிக்கை 8400ல் இருந்து 11 ஆயிரமாக அதிகரித்துள்ளது என அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டில் கணக்கிட்டதை விட சுமார் 2,600 படையினர் தற்போது கூடுதலாகவுள்ளனர். இந்த எண்ணிக்கையில் இராணுவ துருப்புகள், இரகசிய முகவர்கள் ஆகியோரும் அடங்குவர் என்று கூறப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கையை அதிகரிக்கவும் டிரம்ப் எண்ணியுள்ளதாக தெரிகிறது. சுமார் 4000 துருப்புகளை அதிகரிக்க அமெரிக்கா கருதுவதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் குறிப்பிட்டிருந்தன. தலிபான்களின் தாக்குதல் அதிகரித்து வரும் நிலையில் அமெரிக்க துருப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பு எதிர்காலத்தில் அதிக மோதல்களுக்கு வழிசெய்யும் என்று கருதப்படுகின்றது.

## தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் தப்பியோட்டம்!

தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் யிங்குளுக் ஜுனாவட்ரா, எங்கே இருக்கிறார் எனத் தெரியாது என, அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சரும் பிரதிப் பிரதமருமான பிராவிட் வொங்குஸ்வான் தெரிவித்தார். அவருக்கெதிரான முறைகேடு வழக்கு விசாரணை இடம்பெற்றுவரும் நிலையில், அவ்விசாரணைகளுக்கு அவர் சமுகமளிக்காத நிலையிலேயே, தற்போது இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.



தாய்லாந்தின் பிரதமராக யிங்குளுக் ஜுனாவட்ரா, 2011ம் ஆண்டு முதல் 2014 வரை பதவி வகித்தார். யிங்குளுக்கின் அரசாங்கம், 2014ம் ஆண்டில், இராணுவப் புரட்சியின் மூலம் வீழ்த்தப்பட்டிருந்தது. அதைத் தொடர்ந்து, நாட்டில் ஜனநாயகத்துக்காகப் போராடும் முக்கியமான அமைப்பாக அவரது கட்சி காணப்பட்டது. தற்போது அவர் வெளியேறியுள்ளமை, அவரது ஜனநாயகத்துக்கான இயக்கத்துக்குத் தலைமை இல்லாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அவரது கட்சித் தகவல் மூலங்களின் கருத்துப்படி, டுபாய் ஊடாக சிங்கப்பூருக்கு அவர் சென்றுள்ளார். ஆனால், கருத்துத் தெரிவித்த பிரதிப் பிரதமர், தங்களுக்கு உண்மையிலேயே தெரியாது என்று குறிப்பிட்டார். நாட்டில், கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் வைக்கப்பட்டிருந்த ஒருவர், எவ்வாறு இரகசியமாக நாட்டை விட்டுத் தப்பியோட முடியும் என, அரசாங்கத்தின் மீது விமர்சனங்களை முன்வைப்பவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

## நைஜீரியாவிற்கு அமெரிக்க விமானங்கள்!

நைஜீரியாவிற்கு விமானங்களை விற்கும் விடயத்தை அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் அதன் நாடாளுமன்றத்திடம் தெரிவித்துள்ளது. மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியா போகோ ஹராம் எனும் தீவிரவாதக்குழுவின் தாக்குதல்களால் அவதிப்பட்டு வருகிறது. இந்நாட்டிற்கு உதவும் எண்ணத்தில் 12 சுப்பர் டுகானோ ஏ-29 எனும் விமானங்களையும், அதனையும் உள்ளிட்ட 593 மில்லியன் டொலர் இராணுவ உதவியையும் வழங்க அமெரிக்கா முடிவு செய்தது. விமானங்கள் பிரேசில் நாட்டின் எம்ப்ரேயர் நிறுவனத்தால் தயாரிக்கப்படுபவையாகும். இவை உளவு பார்த்தலுடன், தாக்குதல் நடத்தவும் ஏதுவானவையாகும்.

## டிரம்பின் இணையப் பாதுகாப்பு குழு விலகியது

அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்புடன் பணியாற்ற முடியாமல் தொடர்ச்சியாகப் பல அதிகாரிகள் பதவி விலகி வரும் நிலையில், டிரம்பின் இணைய பாதுகாப்பு விவகாரங்களில் ஆலோசனை அளித்து வந்த குழுவைச் சேர்ந்த 7 பேரும் ஒன்றாகப் பதவி விலகியுள்ளனர்.?7 பேரும் கூட்டாக எழுதியுள்ள பதவி விலகல் கடிதத்தில், தேச பாதுகாப்பு விவகாரங்களில் டொனால்டு டிரம்ப் அலட்சியமாக செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளனர். இணைய பாதுகாப்புக்கு எழுந்துள்ள அச்சுறுத்தல் குறித்து போதிய அக்கறை செலுத்தவில்லை என்றும், இனவெறி குழுக்களின் வன்முறையை கண்டிக்கவில்லை என்றும் டிரம்ப் மீது அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## விமானத்தில் இருந்து நிர்வாணமாக குதித்த கலைஞன்

அவுஸ்திரேலியாவை சேர்ந்த வயலின் இசைக் கலைஞன் கிளென் டோனலி விமானத்தில் இருந்து நிர்வாணமாக குதித்துள்ளார். கிளென் டோனலி தனது 30வது பிறந்தநாளை முன்னிட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக ஒரு சவாலை செய்ய வேண்டும் என முடிவு செய்தார். அதன்படி, காப்ஸ் ஹார்பர் நகரில் பாதுகாப்புக்காக அணியப்படும் தோல்வாரைத் தவிர வேறு எதையும் அணியாமல், பறக்கும் விமானத்தில் இருந்து வயலின் இசைத்துக்கொண்டே கீழே குதித்துள்ளார். இவர், 'ஹப்பி



பேர்த்டே...' என்ற பாடலை இசைத்துக் கொண்டே குதித்துள்ளார். தங்கள் உடல் அமைப்பைப் பற்றி ஆண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவே இப்படி ஒரு சாகசத்தை அரங்கேற்றியுள்ளதாக டோனலி கூறியுள்ளார்.

வானத்தில் இருந்து குதிக்கும்போது எனக்கு உண்டாகும் பயமும் பதற்றமும், பிறர் முன்பு ஆடைகளைக் களையும் போதும் உண்டாகிறது. அவற்றில் இருந்து மீண்டு வர இன்னும் நான் முயன்று வருகிறேன் என தெரிவித்துள்ளார்.

# போலிச் சாமியார்களின்...


தந்தையும் வளர்ப்பு மகளும்

அதன் அடிப்படையில் ராம் ரஹீம் சிங்குக்கு எதிராக சி.பி.ஐ. பாலியல் வன்முறை வழக்கு பதிவு செய்து விசாரணைகளைத் தொடங்கியது. சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டபோது பாதிக்கப்பட்ட இரண்டு பெண்களும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் அளித்தனர். சண்டீகர் அருகே உள்ள பஞ்ச்குலாவில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக விசாரணை நடைபெற்று வந்தது. இதன்போது 'தான் தெய்வ பிறவி' என்று கூறி பலரை தனது ஆன்மீக வலைக்குள் வீழ்த்தியதும், இவரது ஆசிரமத்தில் இரண்டு கொலைகள் நடந்துள்ளதான தகவல்களும், 40 முதல் 50 பெண்கள் வரை பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதுடன், 400ற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு இவரது ஆசிரமத்தில் ஆண்மை நீக்கம் செய்யப்பட்டுள்ளதும் என ஏராளமான குற்றங்கள் கண்டறியப்பட்டன.

ஆனால் இவற்றில் இரண்டு பெண்கள் மீதான பாலியல் வன்முறை வழக்கில் ராம் ரஹீம் சிங் குற்றவாளி என்பதை பஞ்ச்குலா சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் ஆதாரத்துடன் நிரூபித்தது. சம்பவம் நடந்து கிட்டத்தட்ட 14 ஆண்டுகளுக்கு பிறகு, ராம் ரஹீம் குற்றவாளி என்று சிபிஐ நீதிமன்றம் அறிவித்தது. இதனையடுத்து, கடந்த 25ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்ப்பளிக்கப்பட்டது.

முன்னதாக, ராம் ரஹீம் சிங், குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டதையடுத்து என்ன தண்டனை வழங்கப்படப்போகின்றது என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருந்தது. தீர்ப்பு வழங்கப்படும் நாளில், பஞ்ச்குலாவில் அவரது ஆதரவாளர்கள் ஏறத்தாழ இரண்டு இலட்சம் பேர் கூடியிருந்தார்கள். கலவரம் மூளக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் மிகத் தெளிவாகவே தெரிந்திருந்தன. அதேவேளை, ராம் ரஹீம் சிங்கின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள், தீர்ப்பு வழங்கப்படும் பஞ்சுகுலாவை நோக்கி படையெடுக்கத் தொடங்கிவிட்டிருந்தனர்.

இதனால் நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்காமல் ராம் ரஹீம் அடைக்கப்பட்டிருந்த சுனாரியா சிறைக்குச் சென்ற சிபிஐ நீதிபதி ஜெகதீப் சிங் தீர்ப்பிற்கு முன்னதாக அங்கு தற்காலிகமாக அமைக்கப்பட்ட நீதிமன்றத்தில் இரு தரப்பினரும் தங்கள் தரப்பு வாதங்களை முன்வைக்க அனுமதி வழங்கினார். விவாதங்களைக் கேட்டபின், இரு பெண்களை மிகவும் கொடூரமாக பலாத்காரம் செய்த ராம் ரஹீமுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார். தனது உடல்நிலையை கருத்தில் கொண்டு கருணை காட்டுங்கள் என்று ராம் ரஹீம் கைகூப்பி கெஞ்சி அழுதார்.

'உயர் இரத்த அழுத்தம், கடும் நீரிழிவு மற்றும் கடுமையான முதுகுவலி பாதிப்பு போன்ற உடல்நல குறைவால் ராம் ரஹீம் துன்புறுவதாலும், பல்வகையான சமூகப் பணிகளில் ஈடுபட்டும், மருத்துவமனைகளை நடத்தியும், பிற மக்கள் நலப்பணிகளை செய்தும் வருகின்ற சட்டத்தை மதிக்கும் குடிமகன் என்பதால், அவருக்கு மிதமான தண்டனை மட்டுமே வழங்கப்பட வேண்டுமென' ராம் ரஹீம் சிங்கின் வழக்கறிஞர்கள் வாதாடினர்.

ஆனால், அதனை ஏற்க மறுத்து நீதிபதி கூறுகையில், பாதிக்கப்பட்ட இரு பெண்களும் ராம் ரஹீமை கடவுளின் உருவமாகதான் பார்த்தார்கள். சீடர்கள் இந்தச் சாமியாரை கடவுளின் பீடத்தில் வைத்து மதிக்கிறார்கள். ஆனால், அத்தகைய ஏமாறக்கூடிய மற்றும் அவரைக் கண்மூடித்தனமாக பின்பற்றும் சீடர்கள் மீது பாலியல் ரீதியாக தாக்குதல் நடத்தி, மிகவும் மோசமான தன்மையிலான குற்றத்தை, இவர் புரிந்துள்ளார்.

ராம் ரஹீம் சிங் மிகவும் செல்வாக்குமிக்க நபராக இருப்பதால், இதுபோன்ற குற்றவாளிகளாக இருப்போருக்கு, தீய வழியைவிட்டு விலகும் செய்தியை வழங்குவதாக, இவருக்கு வழங்கப்படும் தண்டனை அமைய வேண்டும். மத அமைப்புகளுக்கு தலைவர் என்ற போர்வையில் இது போன்ற குற்றவாளிகள் காலங்காலமாக நாட்டில் கடைபிடிக்கப்பட்டு வந்த ஆன்மீகம், புனிதம், சமூக, கலாச்சார மற்றும் மத அமைப்புகள் ஆகியவற்றை களங்கப்படுத்துகின்றனர். இதனால் பாரம்பரியமான நாட்டில் ஈடுசெய்ய முடியாத இழப்புகள் இவர்களால் நிகழ்கின்றன. தனி மனித ஒழுக்கத்தை மீறி இரு பெண்களிடமும் காட்டுமிராண்டி போல் நடந்து கொண்டவர் ராம் ரஹீம். கொடிய மிருகத்திற்கு எல்லாம் கருணை கிடையாது. கருணை காட்டும் தகுதியை அவர் இழந்து விட்டார். இவருக்கு அதிகபட்ச தண்டனைக்கு குறைவாக வழங்குவது என்பது, நாட்டின் ஒட்டுமொத்த மனச்சாட்சிக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருக்கும் எனவே அவர் இந்த தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி உறுதியாகத் தெரிவித்துவிட்டார். தீர்ப்பைக்கேட்டு விரக்தி அடைந்த சாமியார் அங்கிருந்து வெளியேறி தனது சிறைக்கு செல்ல மறுத்ததுடன், தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்போவதாக கூறினார்.

இதேவேளை, வன்முறைகளைக் கட்டுப்படுத்த, வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தும் 144 சட்டப்பிரிவின் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அதனையும் மீறி வன்முறைகள் வெடித்தன. ஹரியானாவின் பல்வேறு இடங்களில் வன்முறை வெடித்தன. ஹரியாணா மாநிலத்தைத் தாண்டி பஞ்சாப், மேற்கு உத்தரப் பிரதேசம், டில்லி, ராஜஸ்தான் உள்ளிட்ட பகுதிகளிலும் வன்முறையும் கலவரமும் வெடித்தது. 50 பேர் இதன்போது உயிரிழந்தனர். 400ற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பல கோடி அரசு சொத்துக்கள் நாசமாகின. ஹரியானாவின் சிர்சா நகரம் இந்த வன்முறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு வழங்கப்பட்டபின் இந்நகரத்தில் வெடித்த வன்முறையால் இந்நகரமே ஒரு பேய் நகரமாக காட்சியளித்தாக பிபிசியின் செய்தியாளர் வர்ணித்தது இங்கு கவனிக்கத்தக்கது.

இத்தனை எதிர்ப்புக்களையும் வன்முறைகளையும் மீறி சாமியார் ரோட்டக்கில் உள்ள சுனாரியா சிறையில் அடைக்கப்பட்டார். அவருக்கு கைதி எண் 1997 அளிக்கப்பட்டது. அவருக்கு தனி அறைச் சிறையும் ஒதுக்கப்பட்டுள்ளது. வழக்கமாக வண்ணவண்ண உடைகளை அணியும் அவருக்கு பிற கைதிகள் அணியும் சீருடை வழங்கப்பட்டுள்ளது. சாமியாருக்கு எந்த வித சிறப்பு சலுகையும் அளிக்கவே கூடாது என்று நீதிமன்றம் சிறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. அவரை பாதுகாக்கும் பணியில் 2 மூத்த அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

சிறையில் சாமியார் கம்பிகளை எண்ணிக்கொண்டிருக்கும்போது அவர் மீது இன்னொரு குற்றச்சாட்டும் விழுந்துள்ளது. ராம் ரஹீம் ஒரு பெண்ணை தத்து எடுத்து மகளாக வளர்த்துவந்தார். அந்த பெண் ஹனி பிரீத் இன்சான் ஆவார். இவர்தான் தேரா சச்சா அமைப்பின் அடுத்த வாரிசு எனக் கூறப்படுகிறது. இவர் தேரா சச்சா சவுதா அமைப்பின் சீடரான விவாஸ் குப்தாவை 1999ல் திருமணம் செய்து கொண்டவர். ராம் ரஹிமிற்கு ஹர்ஜீத் கௌர் என்ற மனைவியும், ஆமன் பிரீத் மற்றும் சரண் பிரீத் என்ற மகள்களும், ஜாஸ்மீத் இன்சான் என்ற மகனும் உள்ளனர். இந் நிலையில் பிரியங்காவை 2009ல் தனது மகளாக ராம் ரஹிம் தத்தெடுத்துக் கொண்டார். தனது பெயரையும் ஹனிபிரீத் இன்சான் என்று பிரியங்கா மாற்றிக் கொண்டார். அதுமுதல் தந்தை ராம் ரஹீமின் நிழல் போல் அவருடனே இருந்து வந்தார் ஹனிபிரீத். இவரது பேச்சுக்கு தேரா சச்சா சவுதா அமைப்பில் செல்வாக்கு உண்டு. ராம் ரஹிமுக்கு குடும்ப உறுப்பினர்கள் எத்தனை பேர் இருந்தாலும் ஹனிபிரீத்தான் அதிகமாக இணையத்தில் தொடர்பில் உள்ளார்.

சர்ச்சைக்குரிய தேரா சச்சா சவுதா அமைப்பை ஹனிபிரீத் ஏற்றுக் கொண்டு இயக்குவார் என்றும் அவர்தான் ராம் ரஹிமின் அடுத்த வாரிசு என்றும் கூறப்படுகிறது. இந்த ஹனிபிரீத் நடிகை, இயக்குநர், தயாரிப்பாளர் என பன்முகங்களைக் கொண்டவர். அப்பாவின் தேவதை என்று தனது இணையதளத்தில் தன்னை குறிப்பிட்டுள்ளார். மேலும் அப்பாவின் உத்தரவுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதே தனது இலட்சியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அப்பெண்ணுடன் அவர் தகாத உறவு வைத்துக்கொண்ட தகவலை தற்போது அப்பெண்ணின் கணவரே அம்பலப்படுத்தியுள்ளார். தனது மனைவியும், அவரின் வளர்ப்பு தந்தைக்கும் உள்ள தப்பான நெருங்கிய தொடர்புகள் குறித்து தற்போது அவர் தகவல்களை வெளியிட்டுவருகின்றார்.

## புலிகளால் தகர்த்தெறியப்பட்ட....

முன்னைய காலத்தில் க.பொ.த உயர்தரம் படிக்கும் மாணவர்கள் போதைக்கு அடிமையாவது யாழ்ப்பாணச் சமூகத்தில் மிகவும் அரிதான விடயம். இப்போது அதுவே, அன்றாட விடயமாகிவிட்டது.

ஆனாலும், இந்தச் செயற்பாடுகளை மிக வேகமாக எதிர்க்கும் இளைஞர் குழாம் தமிழர் தேசத்தில் வலுப்பெற்று வருகின்றது. எது நடந்தாலும், எமது தமிழ்த் தேசியத்தை இழக்க நாம் தயாராக இல்லை என்பதை அந்த இளைஞர் குழாம் எடுத்து இயம்பிக்கொண்டிருக்கின்றது.

கடந்த முப்பது வருடங்களாக தீவிர தமிழ்த் தேசியப் புரட்சி நடைபெற்ற ஒரு மண்ணில், நச்சு விதைகளைத் தூவுவதன் மூலம் தமிழர் தலைவிதியைத் தாங்கள் தீர்மானிக்க நினைக்கும் புல்லுருவிகளைத் தமிழ் மக்கள் மிகத் தெளிவாக அடையாளம் கண்டுவிட்டனர்.



தங்களுக்கு யார் நண்பர்கள், யார் எதிரிகள் என்ற உண்மையையும் தமிழர் தரப்பு தற்போது உணர்ந்துவிட்டது. இத்தனை வலிகளையும் கொடுத்தவர்கள் இனியும் தமிழினம் மன்னிக்கத் தயாராக இல்லை என்ற விடயம் மிக இறுக்கமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆக, இனிமேல் தமிழர் தலைகளில் இனி எவரும் மிளகாய் அரைக்க முடியாது என்ற உண்மை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. களமுனையில் தனித்து நின்று சமராட முடியாமல், வல்லரசுகளைத் துணைக்கு அழைத்துவந்து தமிழர் தேசத்தைச் சுடுகாடாக்கிய சிங்கள வல்லூறுகள், எஞ்சிய தமிழர்களிடம் இருந்து எப்படித் தப்புவது என வழி தெரியாமல் திணறிக்கொண்டிருக்கின்றனர்.

தமிழர்கள் என்றால் யார்? அவர்களின் வீரம் என்ன? என்பதை பண்டாரவன்னியன், எல்லாளன், சங்கிலியன் போன்றோரிடம் அறிந்தும் அதில் தெளிவில்லாமல் மீண்டும் வலிந்து வந்து பிரபாகரனிடம் வாங்கிக் கட்டியவைகளை சிங்கள தேசம் அவ்வளவு எளிதில் மறந்துவிடாது.

தமிழர்களை அழிப்பதற்கு சிங்கள தேசம் மீண்டும் ஒரு தடவை வாள் எடுக்க முனைந்தால் தமிழர்களின் கைகளிலும் வாள்கள் ஏறும் என்பதை சிங்கள தேசம் தெரிந்துகொள்ளாமல் இருப்பது அதன் முட்டாள்தனமாகவே இருக்கும்.

பிரபாகரனைப் பின்பற்றுபவர்கள் என்றும் புறமுதுகிட்டு ஓடமாட்டார்கள் என்பதை சிங்கள தேசம் வன்னிக் களத்தில் அறிந்துகொண்டது. அதை அவர்கள் மறக்காமல் இருப்பது அவர்களுக்கு நன்மை தரும்.

## பிறப்பு வீதமும், பிரச்சினை....

அதன்பின்பு பல நாடுகளில் பிறப்பு கட்டுப்பாடு திட்டங்கள் முழு அளவில் செயல்படத் தொடங்கின. இதன் விளைவாக 1970களில் பிரித்தானியாவிலும், அமெரிக்காவிலும் பலவகையான குடும்பக் கட்டுப்பாடு சாதனங்கள் விற்பனைக்கு வந்தன. இதில் தீவிரமாக ஆர்வம் காட்டிய பல ஐரோப்பிய, கிழக்காசிய நாடுகள் தற்போது அதன் விளைவுகளை சந்தித்து வருகின்றன.

2001ல் வெளியிடப்பட்ட ஓர் அறிக்கையின் படி 40 ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட 65 நாடுகளில் பிறப்பு விகிதம் ஒரு பெண்ணுக்கு 2.1 குழந்தைகள் என்ற அளவுக்கு குறைந்திருக்கிறது. சிறிய நாடான சிங்கப்பூர், குறைந்த பிறப்பு விகிதத்தால் கடுமையான பாதிப்புக்குள்ளானது. சிங்கப்பூர் தான் பிறப்பு விகிதத்தில் கடைசியாக இருக்கும் நாடு. மக்கள் தொகை அதிகரிப்பைப் போல, குறைவதும் பெரிய பிரச்சினையே. இதை சரிக்கட்ட இந்நாடுகள் இளம் தம்பதிகளை அதிக குழந்தைகள் பெற்றுக் கொள்ள ஊக்கப்படுத்துகின்றன. மாறாக, சீனாவும், இந்தியாவும் குழந்தை பிறப்பை குறைக்கும் விதமாக குடும்பக் கட்டுப்பாட்டு திட்டங்களை தீவிரமாக பயன்படுத்தி வருகின்றன.

## மூன்று சிலை....

ஆனால்.... பின்னர் தங்களால் 'இயலவில்லை' என்று கூறி விடைபெற்றனர். கடைசியில் ஒரு இளைஞன் வந்தான். அவன் மிகவும் குள்ளமாக இருந்தான். சபையில் அவனைப் பார்த்ததும் அனைவரும் சிரித்தனர். அவன் நேராக சிலைகள் இருந்த அறைக்குச் சென்றான். சில நிமிடங்கள் சென்றன. "சிறந்த சிலையை நான் கண்டுபிடித்து விட்டேன்....!" என்று அறையிலிருந்து சப்தமிட்டான். மந்திரி அறைக்குள் சென்றார். அவன் சரியான சிலையைத்தான் தேர்ந்தெடுத்திருந்தான்.

ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்த மந்திரி, "எப்படிக் கண்டுபிடித்தாய் என்பதை சபையில் வந்து சொல்வாய்..." என்று கூறினார். சபைக்கு வந்த ராமன், "சிலைகளுக்கு அருகில் இருந்த கம்பியில்தான் ஏதோ விடயம் இருக்கிறது என்று ஊகித்தேன். கம்பியை ஒரு சிலையின் காதில் நுழைத்தேன். அது மற்றொரு காது வழியாக வெளிவந்து விட்டது. விடயங்கள் காதில் விழுந்தால் அதை மற்றொரு காது வழியாக வெளிவிட்டு விடும். என்பதை அறிந்தேன். எனவே அது சிறந்த சிலை அல்ல என்ற முடிவுக்கு வந்தேன். பிறகு மற்றொரு சிலையின் காதில் கம்பியை நுழைத்தேன். அது வாய் வழியாக வெளி வந்துவிட்டது. இந்தச் சிலையின் குணம் சிறந்த தன்று. இரகசியத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியாத சிலை இது என்பதை அறிந்தேன். மூன்றாவது சிலையின் காதுகளில் கம்பியை நுழைத்தபோது அது கம்பி முழுதும் உள்ளே நுழைந்து கொண்டது. வெளியேவரவில்லை! ஒற்றனுக்கு உரிய முக்கிய குணமாக அந்த சிலையைக் கருதினேன். எனவே அந்த சிலைதான் சிறந்த சிலை என்று முடிவுக்கு வந்தேன்..." என்றான்.

மந்திரி அவனையே சிறந்த ஒற்றனாக தேர்ந்தெடுத்து அரசரிடம் அறிவித்தார்.

RAMI COIFFURE
உங்கள் எண்ணம் போல் சிகை அலங்காரம் செய்து கொள்ள
Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY
Port: 06 27 93 63 44

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

J.K.S ALIMENTATION GENERALE
SPÉCIALITÉ AFRO - ASIATIQUE
Ria Western Union WU MoneyGram
இலங்கை இந்திய மளிகைப் பொருட்களை உங்கள் Le Bourget இல் மலிவாகவும் தரமாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள்
52, avenue Jean Jaures
93350 Le Bourget
RER B : Le Bourget
Tél: 01 48 51 71 41
09 66 97 71 41
jks.alimentation@gmail.com
தினமும்: 9h00 - 21h00

DEVI Textiles & Tailors
சாரி பிளவுஸ் 30 நிமிடங்களில் தைத்துத் தரப்படும்
ஆண் பெண் இருபாலாருக்கும் அனைத்து விதமான ஆடைகளும் மற்றும் உங்கள் வசதிக்கு அமைவான தோல்பைகளும் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
29, Bld de la Chapelle, 75010 Paris
Tél: 09 51 01 85 59 - Suresh: 07 81 29 86 50
M°: La Chapelle (ligne 2)

Baby Baloon
மேடை அலங்காரம்
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

Ragawa Tailor
அனைத்து விதமான ஆடைகளும் உங்கள் வசதிக்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
01 40 35 14 77
190 Rue Fbg St. Denis
75010 Paris
M°: Gare du Nord

பரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலைபேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram Western Union
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
39 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூன்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்
29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

பிரெஞ்சு அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
SAGADEVAN PIERRE
எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.
தொடர்பு கொள்ள
சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
(Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42

சுவர்ண மஹால்
SWARNA MAHAL
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஒடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com


Mohan
Jewellery Mart
பழைய நகைகளைக் கொடுத்து
புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
VISA
Aurore
3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82
Mo: La Chapelle / Gare du Nord


தியாக தீபம்
லெப். கேணல் திலீபன்
30 ஆம் ஆண்டு நினைவெழுச்சி நாள்
மற்றும் கேணல் சங்கர் / முகிலன் அவர்களின்
16வது நினைவெழுச்சி நாளும்
"தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக,
ஒருவன் உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்யமுடியுமோ
அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான், திலீபன் செய்திருக்கிறான்"
-தமிழீழத் தேசியத் தலைவர்-
லெப்.கேணல் திலீபன் உன்னா நோன்பு தொடங்கிய 15.09.2017 ஆம் நாளில் இருந்து 26-09-2017 வரை நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் ஒவ்வொரு நாளும் காலை 10.00 மணிக்கு சுடரேற்றி வணக்க நிகழ்வு நடைபெறும்.
இறுதிநாள் அன்று காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை உன்ன நோன்பு நடைபெறும்.
முகவரி :
PARC DU CERISIER
RUE DES ALLOBROGES
95100 ARGENTEUIL
(gare val d'Argenteuil இல் இருந்து பேருந்து இல: 08, இல 164 தரிப்பிடம் Collège Claude Monet)
01.10.2017 ஞாயிற்றுக்கிழமை 14.00 மணிக்கு ஆர்ஜொன்தை நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் வணக்க நிகழ்வுகள் ஆரம்பிக்கும்.
சுடர் வணக்கம் - அக வணக்கம் - மலர்வணக்கம்
தொடர்புகள் :
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பிரான்சு
01 43 15 04 21
ஆர்ஜோன்தை தமிழ்ச் சங்கம்
06 62 68 32 15 - 06 58 24 20 99
06 13 06 20 29


ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் - கடைகள் - தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
எலிகள் - சுண்டெலிகள்
கரப்பான் பூச்சிகள்
தொல்லைகொடுக்கும் பூச்சிகள்
அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V,
75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04